
வன்னிவள நாட்டுப் பாடல்கள்



தொகுப்பு:
செ. மெற்றாஸ் மயில் (B.A. Hons)

வன்னிவள நாட்டுப்பாடல்கள்

பதிப்பாசிரியர் :
செல்லையா மெற்றாஸ்மயில் பி. ஏ. (சிறப்பு)

வெளியீடு :
முல்லை இலக்கிய வட்டம்

வன்னிவள
நாட்டுப் பாடல்கள்
(வன்னிப்பகுதி நாட்டுப்பாடல்களின் தொகுப்பு)

VANNIVALA NATTUPPADALKAL
(a collection of Folksongs of Vanni)

பதிப்பாசிரியர்:
செல்லையா மெற்றாஸ்மயில்
வ/புதுக்குடியிருப்பு

Edited by
Chelliah Madrasmyle
V/Puthukkudiyiruppu
Sri Lanka.

முகப்போவியம் — ரமணி

Designer — **Ramani**

வெளியீடு:
முல்லை இலக்கிய வட்டம்
மிதிலை, ஒட்டுசுட்டான்,
இலங்கை.

Publisher:
Mullai Literature Circle
Mithilai, Odduchuddan

அச்சிட்டோர்:
செட்டியார் அச்சகம்,
430, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

Printers:
Chettiar Press,
430, K. K. S. Road,
Jaffna.
Phone: 7853

முதற்பதிப்பு: 1980 சித்திரை

First Edition: 1980 April

விலை:
சாதாரண பதிப்பு 12/-
வெள்ளைத்தாள் 15/-
நூலகப்பதிப்பு 20/-

Price:
Ordinary Edition 12/-
White Print 15/-
Library Edition 20/-

நூல் ஆலோசனைக்குழு!

கலாநிதி அ. சண்முகதாஸ்
(சிரேஷ்ட விரிவுரையாளர் தமிழ்த்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

முல்லைமணி வே. சுப்பிரமணியம் பீ. ஏ. (சிறப்பு)
(விரிவுரையாளர், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, கோப்பாய்)

நா. சுப்பிரமணிய ஐயர் எம். ஏ.
(விரிவுரையாளர், தமிழ்த்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

ஏட்டுப்பிரதிகள், கையெழுத்துப் பிரதிகள், அச்சுப்பிரதிகள்
கையளித்த கலைஞர்களும் வாய்மொழிப் பாடகர்களும்

பெயர்	இடம்	விடயம்
திரு. எஸ். கணபதிப்பிள்ளை,	புதுக்குடியிருப்பு	பள்ளு, சிந்து
திரு. எஸ். தம்பிப்பிள்ளை,	புதுக்குடியிருப்பு	,, ,,
திரு. சி. மு. நடனசபாபதி	முள்ளியவளை	,, ,,
திரு. வி. பொன்னையா,*	முள்ளியவளை	,, ,,
திரு. எஸ். கோணமலை,*	முள்ளியவளை	,, ,,
திரு. வே. மயில்வாகனம்,*	முள்ளியவளை	,, ,,
திரு. சி. சதாசிவம்,*	முள்ளியவளை	,, ,,
திரு. எஸ். கைலாசபிள்ளை,*	முள்ளியவளை	,, ,,
திரு. சி. ஆறுமுகம்,	புதுக்குடியிருப்பு	வேலப்பணிக்கர் ஒப்பாரி
பேராசிரியர் கா. சிவத்தம்பி,	வல்வெட்டித்துறை	
திரு. சி. தெய்வேந்திரம்பிள்ளை,	குமுழமுனை	கொட்டுக் கிணற்றுப் பிள்ளையார் கும்மி
திரு. வீ. கந்தையா	புதுக்குடியிருப்பு	கும்மி

* இவை திரு. நா. சுப்பிரமணிய ஐயர் ஊடாகப் பெறப்பட்டவை.

வன்னிப் பிரதேசத்தில், இந்நூலில் இடம்பெறாத வேறு மரபுவழி நாட்டுப் பாடல்களையுடைய, கையெழுத்துப் பிரதிகளோ, ஏட்டுப் பிரதிகளோ வைத்திருப்பின் பதிப்பாசிரியருடன் தொடர்பு கொண்டு அடுத்த பதிப்பில் இடம்பெற உதவுக.

வாய்மொழியாகவுள்ள பாடல்களையும் தொகுப்பதற்குத் தயாராகவுள்ளோம்.

தொடர்புகொள்ளவேண்டிய விலாசம்:

செ. மெற்றுஸ்மயில்
வ/புதுக்குடியிருப்பு,
முல்லைத்தீவு.

சமர்ப்பணம்

- ❉ அமரர் பேராசிரியர் சோ. செல்வநாயகம்
  (முன்னாள் புவியியல் பேராசிரியர், யாழ். பல்கலைக்கழகம்)

- ❉ அமரர் மு. நேசரத்தினம்
  (முன்னாள் அதிபர், புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயம்)

- ❉ அமரர் கொடைவள்ளல் ம. சு. வஸ்தியாம்பிள்ளை
  (முன்னாள் பட்டினசபைத் தலைவர், முல்லைத்தீவு)

- ❉ அமரர் குட்டிப்பிள்ளை செல்லையா
  (பதிப்பாசிரியரின் தந்தையார்)

முகவுரை

யாழ்ப்பாணக் குடாநாட்டிற்குத் தெற்கில் மட்டக்களப்பு, புத்தளம் பிரதேசங்களை உள்ளடக்கின பெரும் நிலப்பரப்பு முழுவதும் வன்னி என்று குறிப்பிடப்பட்டமைக்கு வரலாற்றுச் சான்றுகள் உள, காலகதியில் வன்னிப் பிரதேச எல்லை குறுகிவந்துள்ளது.

எல்லை வடக்கில் எழில்யாழ் பரவுகடல்
பல்லோர் புகழருவி தெற்கெல்லை -- நல்லதிருக்
கோண மலைகீழ்பால் கேதீச் சரம்மேற்கில்
மாணத் திகழ்வன்னி நாடு.

என்ற பழம்பாடல் ஒரு காலப் பகுதியில் வன்னி நிலப்பரப்பைக் குறிப்பிட வழங்கியது. இன்று நாம் வன்னி என்று குறிப்பிடும் பொழுது வவுனியா- முல்லைத்தீவு மாவட்டங்களை உள்ளடக்கிய நிலப் பரப்பையே கருத்திற் கொள்கிறோம். விவசாய வளமும் கடல் வளமும் கொண்டு ஈழத்தின் உணவுக் களஞ்சியங்களுள் ஒன்றாகத் திகழ்வதால் வன்னிப் பிரதேசத்தை வன்னிவளநாடு என்பது மரபு.

குளங்களைச் சார்ந்த நெற் கழனிகளும் விலங்குகள் மலிந்த காட்டுப் பிரதேசங்களும் கடற்றொழிலுக்குப் பயன்படும் நீண்ட கடற் கரையும் கொண்ட வன்னிமண் கிராமியத்தின் கன்னித் தன்மை நீங்காத கிராமங்கள் பல கொண்டது. கிராமியத்தின் விளை பொருளாகிய நாட்டார் பாடல்கள் தோன்றுவதற்குரிய விளை நிலமாகவும் திகழ்வது. இப்பிரதேச மக்களின் வாழ்க்கை தொழில்முறை, வரலாற்றுச் செய்திகள், பொழுதுபோக்கு அம்சங்கள் முதலியவற்றோடு தொடர்புடையனவாக வழங்கிவந்த நாட்டார் பாடல்களில் ஒரு பகுதியே வன்னிவள நாட்டுப் பாடல்கள் என்னும் தலைப்பில் வெளிவரும் இந்நூல்.

இந் நூற்றொகுப்பில் இடம் பெற்ற பாடல்களை முக்கியமான மூன்று வகைகளில் அடக்கலாம். முதல்வகை தொழில்சார் பாடல்கள். இரண்டாவது வகை சமய சார்பான பாடல்கள்; மூன்றாவது வகை வரலாற்றுக் கதைப் பாடல்கள். தொழில்சார் பாடல்கள் என்ற வகையில் பன்றிப்பள்ளு, குருவிப்பள்ளு, குருவிச்சிந்து, கமக்காரன் வயந்தன் ஆகியன அமைகின்றன. சமயம் சார்ந்தவை என்ற வகையில் பிள்ளையார் சிந்து, பரமசிவன்சிந்து, நாகதம்பிரான் சிந்து, முருகையன் சிந்து, அம்மன் சிந்து, விறுமன் சிந்து, வயிரவர் சிந்து, ஐயனார் சிந்து, வீரபத்திரன் சிந்து, அண்ணமார் சிந்து, வதனமார் சிந்து, நாச்சிமார் சிந்து, முறிகண்டியான் சிந்து, ஐவர் சிந்து, கும்மி,

கல்லடியான் காதல் ஆகியவை இடம்பெறுகின்றன. வேலப் பணிக்கன் ஒப்பாரி, கொட்டுக்கிணற்றடிப் பிள்ளையார் கும்மி, குளக்கோட்டன் சிந்து என்பவை வரலாற்றோடு தொடர்புடைய கதைப் பாடல்கள்.

தொழில்சார் பாடல்கள் முக்கியமாக விவசாய விளைநிலத்தைக் களமாகக் கொண்டவை. விவசாயிகளின் பிரதான உற்பத்திப் பொருள் நெல். உற்பத்தி செய்யும் நெல்லின் ஒருபகுதி வனவிலங்குகளுக்கும் பறவைகளுக்கும் உணவாகின்றது. பன்றி, மான், மரை, யானை, குரங்கு போன்ற விலங்குகளும் மயில், தூக்கணையான், தினையன், புரு போன்ற பறவைகளும் முற்றி விரிந்த நெல்லுக்கு அதிக சேதம் விளைவிக்கின்றன. இவைகளில் பன்றியும், குருவினமுமே அதிக தொல்லை கொடுப்பன; நெல்லை இவைகளிலிருந்து காப்பாற்றுவதற்கு உழவன் இரவும் பகலும் காவல் புரிய வேண்டியிருக்கிறது. இந்த நேரடி அனுபவத்திலிருந்து பிறந்தவையே பன்றிப்பள்ளு, குருவிப்பள்ளு, குருவிச் சிந்து என்னும் பாடல்களாகும். ஏனைய விலங்குகளோடு தொடர்புடைய பாடல்கள் தோன்றவில்லை என்று சொல்வதைவிட தோன்றியவை எமக்குக் கிடைக்கவில்லை என்று கொள்வதே பொருத்தமாகும். சாலிப்பள்ளு என்னும் பெயருடைய இலக்கியம் ஒன்று இருந்ததாக அறிகிறோம். (சாலி – நெல்) இதில் ஏனைய விலங்குகள் பற்றிய குறிப்புக்கள் இடம்பெற்றிருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது.

பன்றிப்பள்ளு, குருவிப்பள்ளு என்பன 'பள்ளு' என்ற சிற்றிலக்கிய வடிவ இலக்கணங்கட்கு உட்படாதவை. பன்றிகள் தமக்குள் உரையாடுவது போன்ற அமைப்பில் விவசாயக் களத்தினைக் கண்முன் நிறுத்துவது பன்றிப்பள்ளு. அதேபோல் குருவிகளின் உரையாடலாக அமைவது குருவிப்பள்ளு.

பன்றிப்பள்ளு:

சொற்சுவையும் பொருட்சுவையும் நகைச்சுவையும் நிறைந்து உயிர்த்துடிப்புடையனவும் ஓசை நயம் மிக்கனவுமான பாடல்களைப் பன்றிப் பள்ளில் காணலாம். முல்லைத்தீவுப் பிரதேசத்திற்கே சிறப்பாகவுரிய சொற்றொடர்களும் பேச்சு மொழியும் பயின்று வருவதை நாம் அவதானிக்கலாம்.

மனிதர் காட்டை வெட்டி வெளியாக்குகின்றனர்; எரிந்து எஞ்சிய தடிகளைக் கொண்டே வேலியடைக்கின்றனர். அதன்பின்பு நெல்லை விதைக்கின்றனர். நெல் முளைத்து வளர்கின்றது. கதிர் தோன்றி முற்றி விளைகின்றது. விளைந்த நெல்லில் ஒருபகுதி வனவிலங்குகளுக்கும் பறவைகளுக்கும் உணவாகின்றது.

வயலில் நெல் விளைந்துவிட்டால் பன்றிகளுக்குக் கொண்டாட்டம்தான். பன்றிகள் தம் குட்டிகளுடனே வயலுக்குள் நுழைகின்றன. முதலிலே ஒரு பன்றி கட்டியம் கூறுவதுபோல முன்னுக்குச் செல்கிறது.

ஆண்பன்றி கூறுகின்றது: "என்னருமைக் காதலியே இப்பொழுது நெல் விளையும் காலமல்லவா இதுவரை காலமும் காட்டிலே உணவு தேடியுண்டு சீவித்தோம் இனி வயலினுள் செல்வோம் மக்களைக் கூவி அழைப்பாயாக."

மண்ணில் நமது கண்ணுக்கினிய
மக்களைத் துரந் தழையடி
வன்ன வயலில் செந்நெல்லதனை
விரும்பி யருந்த லாமடி

ஆண்பன்றி பெண்பன்றியை வர்ணிக்கும் விதம் சுவையானது

பன்னும் அடியும் நுனியும் தறித்த
பனந்துண் டம்போல் அழகியாள்
பாவை எனது ஆசைக்குகந்த
பருத்த உரலின் இடையினுள்,

குட்டிகள் வயலினுள்ளும் ஓடியாடி விளையாடுகின்றன. நெல் உண்ணும் அரிய சந்தர்ப்பத்தை நழுவவிடாமல் உண்ணும்படி அறிவுரை கூறப்படுகின்றது. பன்றிக் குட்டிகள் அவசரம் அவசரமாக உண்ணுகின்றன. சிறிய குட்டிகள் பல் மிகவும் மென்மையானது. முற்றிய நெல்லை உண்பதால் பல்லுப் பெயர்ந்து விட்டால் என்ன செய்வது என்ற கவலை பெற்றோருக்கு!

நெல்லுத்தின்னும் ஆசையாலே
பல்லுக்கில்லுப் பேர்ந்திடாமல்
மெல்ல மெல்ல நன்னி நன்னித்
தின்னுங்கோ மக்காள்.

காவற்காரன் வந்துவிட்டானே. இனி நின்றால் ஆபத்து; நாம் வந்த வழியே திரும்பிவிட வேண்டும். ஆனால் தூரத்தே போகவேண்டியதில்லை; காட்டில் நின்று அவன் நடமாட்டத்தைக் கவனிக்க வேண்டும்.

மானிடன் செய்த நெல் எல்லோருக்கும் சொந்தம். வெட்டிக் கட்டிச் சூடுவைத்தால் எட்டிப் பார்க்கவும் முடியாது. கெட்டித்தனமாக நின்று நெல்லையுண்ணுங்கள்.

விடியப்போகிறது; இனி நாம் காட்டினுள் போய்விட வேண்டும். மனிதர்கள் நல்லவர்கள் அவர்களுக்கு உங்கள் வாழ்த்தைத் தெரிவியுங்கள்

தூங்கும்போது நீங்களிந்தத்
தொல்புவியில் மானிடர்க்குச்
சோபனங்கள் சொல்லிச் சொல்லித்
தூங்குங்கோ மக்காள்.

குருவிப்பள்ளு

குருவிகள் தமது குஞ்சுகளைக் கூட்டில்விட்டே வயலினுள் செல்கின்றன. குஞ்சுகள் வேகமாகப் பறக்க முடியாதபடியால் அவற்றிற்குக் காவல்காரரால் நேரக்கூடிய பலவிதமான ஆபத்துக்கள் விபரிக்கப் படுகின்றன.

சுண்டுவில்லினில் உண்டையை வைத்தே
சுட்டிப்பாகவே பொட்டென எய்வான்
துண்டந் துண்டமாய் அம்பினுல் எய்தவன்
சுட்டுத்தின்பனே பச்சடியோடு.

அருமைச் செல்வங்களை இழந்துவிட்டால் கூடு வெறிச்சோடிப்போய் விடும்.

செல்வமாகிய குஞ்சை இழந்து
சிறக்கும் கூடு வெறித்திடலாமோ
கொல்வர் மானிடர் சண்டாளர் காணில்
குணமல்ல என்தன் கோதையே கேளும்

பலவிதமான குருகினங்கள் இப்பள்ளில் குறிப்பிடப்படுகின்றன.

வன்னவன்னநற் பட்சிகள் வந்து
வயல்கள் தோறும் நிரவுதுவாடி
கொங்குலக் குயில் மாமயில் செம்காய்
குருவிக் கூட்டம் வருகுது வாடி
ஆகடயத் தினையன் புறவுடன்
அம்முதே இருந் திம்மென வாடி

பகலிலேயே பறவைகள் நெல்லையுண்கின்றன. இரவில் காட்டினுள் செல்கின்றன. ஒரு சிறிய ஊடல் நாடகம். ஆண்குருவி இராகம் பாடும்போது சுருதி பேதம் ஏற்படுகின்றது. பேட்டுக்குருவிக்குச் சிறு

சந்தேகம். தன்னுடைய நாயகன் வேறோர் பெண்ணின் சிந்தனையிலிருப்பதாக அது எண்ணுகின்றது. ஆண்குருவி இதையறிந்து சமாதானம் கூறுகின்றது. இத்தகைய சுவையான அம்சங்கள் குருவிப் பள்ளில் இடம் பெறுகின்றன.

நெல் உண்ண வரும் குருவிகளின் விபரம், அவை எந்த எந்த இடங்களூடாக வருகின்றன என்பவற்றையெல்லாம் கூறி அவற்றைத் துரத்த எடுக்கும் பாதுகாப்பு முயற்சிகளையும் சுவைபடக் கூறுவது குருவிச்சிந்து. இதன் 8ஆம் பாடலில் நல்லமாப்பாண வன்னியன் என்ற வன்னி மன்னனின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது.

☆

கமக்காரன் வயந்தன் என்ற பாடற்பகுதி உலோபிகளான சில கமக்காரரது இயல்பு கூறுவது.

பிள்ளையார் சிந்து முதலாக அமையும் கடவுள் பெயர் கொண்ட சிந்துப்பாடல்கள் வன்னிப்பிரதேச மக்கள் மத்தியில் நிலவிவரும் தெய்வ நம்பிக்கையுடன் தொடர்புடையவை. இந்துசமயத்தின் பல்வேறு தெய்வங்கள்பற்றிய புராணக்கருத்துக்களும் விரவியுள்ள இச்சிந்துப் பாடல்கள் பல விவசாயத் தொழிலுடன் தொடர்பு கொண்டவை; அருவி வெட்டு முதலிய தொழிற்காலங்களிற் பாடப்படுபவை. அம்மன் சிந்து வற்றாப்பளைத்தலத்திற் கோவில் கொண்ட கண்ணகி அம்மனின் வழிபாட்டு மரபுபற்றிக் கூறுவது. வன்னிப்பிரதேசத்தில் இருக்கும் பல்வேறு தெய்வ தலங்கள்பற்றிய தகவல்களையும் இச்சிந்துப்பாடல்கள் அறியத்தருகின்றன.

கல்வடியான் காதல் என்ற பெயரில் அமையும் சில பாடல்கள் பொய்ச்சாட்சி சொல்லிச் சிறைப்பட்ட ஒருவர் பிரலாபிப்பதாக அமையும் பக்திப்பாடல்.

வரலாற்றுக் கதைப்பாடல்களில் வேலப்பணிக்கன் ஒப்பாரி சின்னவன்னியன் என்னும் வன்னிமன்னனின் ஆட்சிக்காலத்தில் யானைப் பணிக்கர்களால் அடக்கமுடியாதிருந்த ஒரு கொம்பன் யானையை அரியாத்தை என்னும் பெண் அடக்கிய தீரத்தைக் கூறுவது. இந்த ஒப்பாரிப்பாடலின் கதை இன்றும் வன்னி மாந்தரின் வாய்மொழியில் வழங்கி வருகின்றது.

குமுழமுனைக்கருகில் கொட்டுக்கிணற்றடியில் கோயில் கொண்ட விநாயகரின் வரலாறு கூறும் வகையில் அமைந்த கும்மிப்பாடல் கொட்டுக்கிணற்றடிப்பிள்ளையார் கும்மி என்ற பெயரில் அமைந்துள்ளது.

குளக்கோட்டன் என்ற மன்னன் பூதப்படையால் குளங்கட்டிய செய்தியையும் தென்கோணநாதருக்குச் சிலை எழுதிக் குளக்காட்டில் நிறுத்திய செய்தியையும் கூறுவது குளக்கோட்டன் சிந்து.

இந்த நாட்டார்பாடல்களை நூல்வடிவில் வெளியிடும் முயற்சி முன்பும் சிலரால் மேற்கொள்ளப்பட்டது. முள்ளியவளை சி. ச. அரிய குட்டிப்பிள்ளை என்பார் தொகுத்த "அருவிச்சிந்து, கதிரையப்பர் பள்ளு பண்டிப்பள்ளு, குருவிப்பள்ளு" என்னும் தலைப்பில் வெளிவந்த நூலின் வெளியிடப்பட்ட காலம் பற்றிய குறிப்பு இல்லை, கீழ்க்கரவை வ. கண பதிப்பிள்ளை வேலப்பணிக்கன் ஒப்பாரியைப் பவ வருஷம் (1934) வெளியிட டார். மேற்படி வெளியீடுகளில் இடம் பெற்ற பாடல்களையும் மேலதி கமாக, கையெழுத்துப்பிரதிகள், ஏடுகள், வாய்மொழி ஆகியவற்றின் மூலம் கிடைத்த பாடல்களையும் ஒப்பு நோக்கி இயன்றவரையில் சரியான பதிப்பொன்றை வெளிக்கொணரும் முயற்சியில் திரு செல்லையா மெற்ருஸ்மயில் ஈடுபட்டார். அதன் விளைவாக உருவாகியதே இத்தொகுப்பு நூல். இத்தொகுப்பில் இடம் பெருமல் விடப்பட்ட நாட்டார் பாடல்களும் பல உளவாகலாம். அவைபற்றிய தகவல்களை அறிந்தோர் அறியத்தரின் வன்னிவள நாட்டுப்பாடல் தொகுதியின் அடுத்து வரும் பதிப்புக்களில் அவற்றை இடம் பெறச் செய்ய முயல் வோம்.

திரு செல்லையா மெற்ருஸ் மயில் அவர்களது அயரா உழைப் பின் பயனுக வெளிவரும் இந்நூற்ரெகுதியைத் தமது முதலாவது வெளியீடாக முன்வைப்பதில் முல்லை இலக்கிய வட்டம் பெருமகிழ்ச்சி யடைகின்றது. வன்னிப்பகுதியின் இலக்கிய உணர்வுகளைப் பேணி வளர்ப்பதைத் தனது நோக்காகக்கொண்டு உருவான இவ்விலக்கிய வட்டம் வன்னிவளநாட்டார் பாடல்கள் வெளிவருவதற்குப் பல வகை யிலும் துணைபுரிந்த யாவருக்கும் தமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றது. குறிப்பாக இந்நூலை நாம் வெளியிடுவதற்கு எம்முடன் சேர்ந்து உழைத்த செட்டியார் அச்சகத்திற்கு சிறப்பான நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்ரேம்.

முல்லைமணி வே. சுப்பிரமணியம்
தலைவர்

நா. சுப்பிரமணியம்
செயலாளர்

முல்லை இலக்கியவட்டம்
'மிதிலை' ஒட்டுசுட்டான்
1980-04-19

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர்
பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்களின்

அணிந்துரை

தமிழருடைய இலக்கியப் பாரம்பரியத்திலே நாட்டார் இலக்கியமும் கணிசமான இடத்தைப் பெற்றுள்ளது. மட்டக்களப்பு, மன்னார் பிரதேசஞ் சார்ந்த நாட்டுப் பாடல்களைச் சேகரித்துத் தொகுத்துப் பதிப்பிக்கும் வாய்ப்புப் பலவருடங்களுக்கு முன்னே எனக்குக் கிடைத்தது. வன்னிப்பிரதேசத்திலே பல நாட்டுப்பாடல்களும் கூத்துக்களும் வழக்கிலே உள்ளன அவை காலஓட்டத்திலே மறக்கப்படவும் மறைக்கப்படவுங்கூடும். அவற்றைப் பேணி, வருங்காலச் சமூகத்தினருக்கும் வழங்கும்பணி மிகவும் போற்றப்படவேண்டியதொன்றாகும். வன்னிவள நாட்டுப் பாடல்கள் என்னுந் தலைப்பிலே, வன்னிப்பிரதேசத்திலே வழங்கிவரும் நாட்டார் பாடல்களைத் தொகுத்துப் பதிப்பிக்கின்றார் திரு. செல்லையா மெற்றாஸ்மயில். இந்நூலுக்கு அணிந்துரை வழங்குவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

பதிப்பாசிரியர் வன்னிப்பிரதேசத்திற் பலரைச் சந்தித்து அவர்களிடமிருந்து பாடல்களைக் கேட்டெழுதியும், ஏடுகளிலிருந்தவற்றைப் படியெடுத்தும் இத்தொகுதியினை ஆக்கியுள்ளார். பெரும்பாலானவை கதைப்பாடல்களாகவே அமைந்துள்ளன. பாடல்களிலே ஏட்டுக்கு ஏடு காணப்பட்ட பாடபேதங்களை ஆசிரியர் குறித்துள்ளார். பாரிய வேறுபாடுகள் காணப்படுமிடத்து. அவ்வேறுபட்ட இரு ஏட்டுப் பிரதிப் பாடல்களையுமே அச்சிட்டு உதவியுள்ளார். உதாரணமாக இந்நூலிலே இடம்பெற்றுள்ள "அம்மன் சிந்து" என்னுந் தலைப்பில் அமையும் இரு வகையான பாடல்களையுங் காட்டலாம் (பக். 30 — 49) சீர்பிரித்து அமைந்துள்ள முதல்வகைப் பாடல்களைக் கொடுக்கும் ஆசிரியர்,

> "அளம்பிலைச் சேர்ந்த மே. செபஸ்தியாம்பிள்ளை அவர்களின் கையெழுத்துப் பிரதிப்பாடல்கள் முழுவதும் வரிக்கு வரியும், சொல்லுக்குச் சொல்லும் வேறுமுறையில் மாறுபட்டு அமைந்து காணப்படுகின்றன. அப்பாடல்கள் அப்படியே பதிக்கப்படுகின்றன."

என்று கூறி, கையெழுத்துப் பிரதியிலே காணப்பட்டபடியே இரண்டாவது வகை அம்மன் சிந்துப் பாடல்களைத் தந்திருக்கிறார். "வேலப்பணிக்கர் ஒப்பாரி" கதைப்பாடலும் இவ்வகையிலே தரப்பட்டுள்ளது.

"பள்ளு" என்னும் பகுதியிலே "பண்டிப் பள்ளு" "குருவிப் பள்ளு" ஆகிய இரு நெடும் பாடல்கள் கொடுக்கப்பட்டுள்ளன. பன்றியும் குருவியும் வேளாண்மை செய்பவர்களின் நண்பர்களல்ல. அவை தம்முடைய வேளாண்மையை அழிவு செய்பவை என்று தெரிந்தும்

அவற்றின் பக்கம் நின்று, அவை எவ்வாறு சிந்திக்குமென எண்ணிப் பாடியுள்ளமை அங்கதச் சுவை வாய்ந்ததாக உள்ளது. தாங்கள் உண்பதற்குத் தானியங்கள் விளைவிக்கும் மனிதருக்குச் சோபனங்கள் கூறும்படி தன்குட்டிகளுக்கு பன்றி கூறுகின்றது.

''தூங்கும்போது நீங்கள் இந்தத்
தொல்லுலகில் மானிடர்க்குச்
சோபனங்கள் சொல்லி வாழ்த்தித்
தூங்குங்கோ மக்காள்.'' என்னும் பாடல் அச்சந்தர்ப்பத்தைக் காட்டுகின்றது. பன்றியின் தோற்றம்

''குட்டியும், தாய்களுமாக — குறங்
கொள்ளிபோல் கால்களும் நோக
ஒட்டிம றைந்துநின் றேதான்
உல்லாசப் பண்டியும் வந்ததுவே.''

எனக் கூறப்படுகின்றது. மனிதர் பேசுவது போலவே பண்டிகளும் குருவிகளும் பேசுகின்றன.

''குஞ்சுப் பட்சி பசித்துத் தவிக்குது
கொத்தி வாரும் சுருக்கினில் நெல்லை
இந்த மாதம் முடிந்தாலு மக்கினி
யெங்கும் கிட்டாது செங்கதிர் நெல்லு.''

என்று பெண்குருவி ஆணிடங் கூறுகின்றது. குழந்தைகளும் விரும்பிப் படிக்கக்கூடிய வகையிலே இப்பாடல்கள் அமைகின்றன.

''சிந்து'' என்னும் பகுதியிலே பெரும்பாலானவை சமயப் பாடல்களாகவே உள்ளன. அம்மன் நாகதம்பிரான், பரமசிவன் பிள்ளை முருகன் ஆகிய கடவுளர் மீதான சிந்துப் பாடல்கள் இப்பகுதியிலே இடம் பெற்றுள்ளன.

வன்னிப் பகுதித் தமிழ் மக்களின் சமூக, சமய, பண்பாட்டு வரலாற்றை ஆராய்பவர்களுக்கு இத்தொகுதியில் இடம்பெற்றுள்ள பாடல்கள் ஏதோ வகையிலே உதவி செய்வனவாக அமையும். பாடல்களைப் பேணி நமக்கு அளிப்பது மாத்திரமன்றி, அவற்றால் வேறு பயன்களும் உண்டாகும் வண்ணம் இத்தொகுதியினைப் பதிப்பித்து வழங்கும் முல்லை இலக்கிய வட்டத்தினரும், பதிப்பாசிரியர் செல்லையா மெற்ருஸ்மயிலும் பாராட்டப்பட வேண்டியவர்கள். அவர்கள் மேலும் இத்துறையிலே ஈடுபட்டுத் தொண்டாற்ற வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், சு. வித்தியானந்தன்
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
6-04-1980

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியர்,
கலைப்பீடாதிபதி

கலாநிதி க. கைலாசபதி அவர்களின்

வாழ்த்துரை

மிகச் சமீப காலமாகவே தமிழுலகில் நாட்டார் பண்பாட்டியல், ஆய்வுத்துறைகளில் ஒன்றாக ஒப்புக்கொள்ளப்படும் நிலைமை தோன்றியுள்ளது. தொடக்கத்திலே இதுவும் வேறுபல துறைகளைப் போல ஆராய்ச்சியைப் பொழுது போக்காகக் கொள்ளும் பற்றார்வலர்களின் முயற்சிகளின் மூலமாகவே உருப்பெற்றது நாளடைவில் மானிடவியல், சமூகவியல், உளவியல், வரலாறு, மொழியியல், இசை, நடனம், இலக்கியம் முதலிய பல துறைகளைச் சார்ந்தவர்களும் தவிர்க்க இயலாதபடி நாட்டார் பண்பாட்டியற் கூறுகளை இனங்கண்டு ஏற்பிசைவு தெரிவிக்க வேண்டியவர்களாயினர்.

நாட்டார் பண்பாட்டியல் என்னும் சொற்றொடர் மிகவும் விரிந்த பொருட்பரப்பை உடையது: மொத்தத்தில் வாய்மொழி இலக்கியம், நாட்டார்கலைகள், கைப்பணிகள், நாட்டுப்புற மக்களின் பழக்க வழக்கங்கள், ஒழுகலாறுகள், நம்பிக்கைகள், சடங்குகள், சம்பிரதாயங்கள், நாட்டுமக்களின் பேச்சு வழக்குகள் முதலியவற்றை அத்தொடர் குறிக்கும். அவற்றுள் வாய்மொழிப் பாடல்களே பெரும்பாலும் முதலில் பலரது கவனத்தை ஈர்க்கின்றன. நாட்டார் பண்பாட்டியல் வரலாற்றை நோக்குமிடத்து இப்போது வளர்ச்சிப் போக்கு தெளிவாகும் கலை இலக்கியங்களில் அக்கறை கொண்டோர் நாட்டார் பாடல்களையும் இசையையும் சேகரித்தலே நாட்டார் பண்பாட்டியற் பரிணாமத்தில் முதற்படி எனலாம்.

தமிழிலும் இப்படிமுறை வளர்ச்சியினை நாம் அவதானிக்கலாம். சார்ள்ஸ் இ கோவர் என்ற ஆங்கிலேயர் 1871-ம் வருடத்திலேயே தென்னிந்திய நாட்டுப் பாடல்கள் என்னும் பொருள்தரும் ஆங்கில நூலை வெளியிட்டிருந்தாரெனினும், ஏறத்தாழ நாடு விடுதலைபெற்ற காலத்தையடுத்தே தமிழ் நாட்டில் நாட்டுப்பாடல்கள் தொகுப்பாசிரியர்களால் குறிப்பிடத்தக்க அளவில் வெளியிடப்படலாயின. அதற்கும் சற்றுப் பிற்பட்ட காலப்பகுதியிலேயே இலங்கையில் நாட்டுப் பாடல்கள் பற்றிய அக்கறை எழுந்தது. திரு. மு. இராமலிங்கம் பல வருடங்களாக நாட்டுப்பாடல்களைச் சேகரிப்பதில் ஈடுபட்டு வந்தவரெனினும் 1950களை அடுத்த காலப்பகுதியிலேயே நூல்வடிவில் அவற்றை வெளியிட்டார்.

இலங்கை வாழ் தமிழ் மக்களின் பாரம்பரியச் சொத்தான நாட்டார் பாடல்களைப் பெருந்தொகுதிகளாக வெளியிடும் முயற்சி

இதுகாறும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாய்த் தெரியவில்லை: அத் தகைய பாரிய பணியைச் செய்துமுடிப்பதற்கு வேண்டிய பயிற்சியுடை யோரும் வசதி படைத்தோரும் இன்று எம்மத்தியில் இருக்கின்றனர் என்று கூறுவதற்குமில்லை.

இதுவரையில் வெளிவந்துள்ள நாட்டுப்பாடல் தொகுதிகள் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மன்னார், மலையகம் ஆகிய பிரதேசங் களில் வழங்கும் வாய்மொழிப்பாடல்களைக் கொண்டவை. இம் மர பிலும் வரிசையிலும் வருகிறது இப்பொழுது வெளியிடப்படும் வன்னி வள நாட்டுப் பாடல்கள். வன்னிப் பிரதேசம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாயினும் கடந்த நூற்றாண்டுக் காலத்தில் அதற்குரிய சிறப்பை இழந்திருந்தது என்பது வெளிப்படை. ஆயினும் விவசாயத்தில் அது இடையீடின்றி முன்னிலையில் இருந்து வந்திருப்பதைப் போலவே வாய்மொழி இலக்கிய வளத்திலும் தனிச் சிறப்புடன் திகழ்ந்து வந் துள்ளது. உண்மையில், விவசாயம் தழைத்தோங்கும் பிரதேசங்களில் வாழும் உழைக்கும் மக்கள் மத்தியிலேயே வாய்மொழிப் பாடல்கள் விருந்த நிலையில் காணப்படும்: உலகப் பொதுவான நியதிக்கு ஏற்பவே வன்னிவள நாட்டிலும் வாய்மொழி இலக்கியம் வாழிப்பாக வளர்ந்து வந்துள்ளது.

நாட்டுப் பாடல்கள் உலக முழுதளாவிய பொதுத்தன்மை உடை யவை. மனுக்குலத்தின் போராட்டங்கள், வெற்றிகள், தோல்விகள், கனவுகள், நம்பிக்கைகள், எதிர்பார்ப்புகள் முதலியவற்றை ஆதார மாய்க்கொண்டு எழுந்தனவாகலின் அவற்றுக்குச் சர்வவியாபகமான பண்புகள் உண்டு. ஒரு வகையிற் பார்த்தால் உலகப் பொதுவான இலக்கியம் வாய்மொழி இலக்கியமே என்பதில் எதுவித ஐயமுமில்லை. ஆனால் அதேவேளையில் தனிப்பட்ட — குறிப்பிட்ட — பிரதேசங்களுக் கும் மக்களுக்கும் மட்டுமேயுரிய செய்திகளும் நுணுக்க விவரங்களும் நாட்டுப் பாடல்களிலேயே இடம்பெறுகின்றன. சுருங்கக் கூறின், மிகப் பொதுவான உணர்வுகளை வெளிப்படுத்தும் பாடல்களிலேயே, வரை யறுத்துக் குறிக்கப்படும் தனிச்செய்தி சார்ந்த விவரங்களும் காணப் படுகின்றன. மேலெழுந்த வாரியாகப் பார்ப்போருக்கு இது முரணாகத் தோன்றக்கூடும். ஆனால் உயர் இலக்கியத்திற்கு இன்றியமையாதது இவ்வியங்கியல் பண்பு ஆகும். அநுபவங்களே இலக்கிய ஆக்கத்திற்கு மூலப்பொருள்கள். ஆனால் இலக்கிய ஆக்கத்தின்போது அநுபவ முழுமையிலிருந்து தற்செயலான, மேற்போக்கான அம்சங்கள் நீங்கப் பெற்று, அடிப்படையான சாராம்சம் அக உணர்வுடன் கலந்து பொருத்தமான வடிவங்களில் வெளிவருகிறது. வாழ்க்கைக்கும் இலக் கியத்திற்குமுள்ள இயங்கியல் ரீதியான உறவு இதுதான். வன்னிப் பிரதேசத்தின், குறிப்பாக முல்லைத்தீவுப் பகுதியின் நாட்டுப் பாடல்கள் இத்தொகுதியில் அடங்கியுள்ளன. வகைமாதிரிக்குப் பொருத்தமான வற்றைப் பதிப்பாசிரியர் சேர்த்துள்ளார் என்று கூறத்தோன்றுகிறது.

வன்னிப்பகுதி மக்களின் வாழ்க்கையைச் சித்திரிக்கும் அதேவேளை யில், பொதுப்படையான பல உணர்வுகளையும் இப்பாடல்கள் எடுத்து இயம்புகின்றன. 'ஐயனார் சிந்து', 'வதனமார் சிந்து' முதலிய பாடல் களில் வாழ்க்கையும் வரலாறும் பின்னிப்பிணைந்து கிடப்பதைக் காண லாம்.

நாட்டுப் பாடல்களில் ஒன்றான 'பள்ளு' எழுதப்பெற்ற இலக் கிய வடிவமாகவும் உருமாறியுள்ளது. தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் இயற்றப்பெற்ற பள்ளு நூல்களிற் பரிச்சயமுடையவர்களுக்கு இத் தொகுதியிற் காணப்படும் 'பண்டிப்பள்ளு', 'குருவிப்பள்ளு' என்பன வித்தியாசமானவையாய்த் தெரியும். ஆயினும் கூர்ந்து நோக்கு வோர்க்கு அடிப்படை உண்மை புலப்படாமற் போகாது. விவசாய வாழ்க்கையின் வெவ்வேறு அம்சங்களையே சகல பள்ளுகளும் விவரிக் கின்றன. புறநிலைப்பட்ட யதார்த்தம் அகநிலைப்பட்ட யதார்த்தமாகப் பள்ளுகளில் உருமாற்றம் பெற்றுள்ளது. இந்நூலிலுள்ள 'ஒப்பாரி' யும் உற்று நோக்கத் தக்கது. சாதாரணமாக இறந்தவரை நினைத்து இழந்தவர்கள் (பெரும்பாலும் பெண்கள்) பாடும் பாடல் 'ஒப்பாரி' எனப்படும். சோக வெளிப்பாடே ஒப்பாரியின் அடிப்படை. பெரும் பாலான சந்தர்ப்பங்களில் சிறுச்சிறு பாடல்களாகவே அது அமையும். ஆனால் கதையொன்றைக் கூறும் வடிவமாகவும் ஒப்பாரி அமையும் என்பதற்கு 'வேலப்பணிக்கர் ஒப்பாரி' சான்று பகருகிறது. (வன்னிப் பிரதேசத்தில் வழங்கும் வேலப்பணிக்கர் கதையை ஆதாரமாய்க் கொண்டு முல்லைமணி — வே. சுப்பிரமணியம், "அவளும் தோற்று விட்டாள்" என்ற தலைப்பில் சிறுகதை ஒன்று எழுதியமை இவ்விடத் தில் நினைவுக்கு வருகிறது.) இலங்கையில் வழங்கும் 'கண்டிராசன் ஒப்பாரி' மேற்கூறிய ஒப்பாரியைப்போன்று கதை கூறுவதாயுள்ளது.

பள்ளிக்கூடங்களிலும் பல்கலைக்கழகங்களிலும் நாட்டார் பண் பாட்டியல் பயிற்சி நெறியாக அமைந்து வரும் இக்காலகட்டத்திலே இத்தகைய தொகுதி வெளிவருதல் மகிழ்ச்சிக்குரியதாகும். இத்துறை யில் ஈடுபடுகின்றவர்களுக்கு இந்நூல் மிகுந்த உதவியாக இருக்கும். வன்னிப்பிரதேச நாட்டுப்பாடல்களை நுணுக்க ஆய்வு செய்ய விரும்பு வோர்க்கு இது வாய்ப்பான நூலாகும். பதிப்பாசிரியர் செ. மெற்றாஸ் மயில் நமது பாராட்டுக்குரியவர். ஆர்வமும் உழைப்பும் விடாமுயற்சி யும் அமையப்பெற்ற அவர் இன்னும் பல தொகுதிகளை வெளிக் கொணர்தல் வேண்டும் என விரும்புகிறேன்,

க. கைலாசபதி

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
9-04-1980

யாழ்ப்பாணத்துப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத்தலைவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்களின்

சிறப்புரை:

பண்பாட்டின் ஊற்றுக்கால்கள்
வரலாற்றின் நதிமூலங்கள்

I

வன்னிவள நாட்டின் வாய்மொழி இலக்கியங்கள், பேணுதல் பற்றிய பூரண பிரக்ஞையுடன், வரன்முறையான பதிப்பு நெறிகளுக் கமைய எழுத்தாவணமாக வெளிக்கொணரப்படும் இக்கட்டத்தில் அந்த எழுத்தாவணத்திற்கு—தொகுதிக்கு—ஆற்றுப்படையாக அமை யும் உரைகளுள் ஒன்றான இக் கட்டுரையில், வன்னிவள நாட்டின் பாரம்பரியக் கலைகளின் உயிர்ப்பும் அழகும் முதன்முதலில் உணரப் படுவதற்கும், இத்தொகுதியின் அத்தியாவசியகம் நிலைநிறுத்தப் படுவ தற்கும் காரணமாக விருந்த சந்தர்ப்பத்தினை நினைவு கூருதல் தவிர்க்க முடியாததாகின்றது.

II

இலங்கை அரசு கலாசாரத் திணைக்களத்தின் மூலம் நிறுவன ரீதியாகத் தமிழ் நாடகத்துக்கு ஊக்கமும் ஊட்டமும் அளிக்கவென முனைந்தபொழுது முதலில் இலங்கைக் கலைக்கழகத்தினது ஒரு குழு வாகவும் (1956 – 1970) பின்னர் இலங்கைக் கலாசாரப் பேரவையின் ஒரு குழுவாகவும் (1971) தமிழ் நாடகக் குழு தொழிற்பட்டது. அக் குழுவின் தலைவராக முதல் பத்தொன்பது வருடங்கள் கடமையாற் றிய பேராசிரியர் சு. வித்தியானந்தன், தமது தலைமைக் காலத்தில், தமிழ் நாடக வளர்ச்சியின் ஓரம்சமாக, இலங்கைத் தமிழ் நாடக அரங்கின் பாரம்பரியத் தளத்தையும் அத் தளத்தின் அடிவேராக அமைந்த சமூக - கிரண அடிப்படையையும், ஆராய்ச்சி பூர்வமாக அறிவதற்கும் ஆராய்ச்சி நிலை நின்று அப்பாரம்பரிய அரங்கிற்கு மீள உரு அளிப்பதற்கும் வேண்டிய பணிகளைத் தொடக்கி வைத்தார். இந்த அறிவு நோக்கின் வழி வந்த செயல் திட்டங்கள் தான் மட்டக்களப்பு நாட்டுக் கூத்தினைப் புனருத்தாரணம் செய்தன. வடபகுதியைப் பொறுத்த வரையில், மன்னார்ப் பகுதியின் அரங்க வளம் அவரைக் கவர்ந்தது.

அவரது தலைமைக்காலத்தில் அப்பணிக்களைச் செயல் நிலைப் படுத்தும் ஒருவனுகவே தெரிழிற்பட்ட என்மீது 1975 இல் தமிழ் நாடகக் குழுவின் தலைமை பொறுப்பிக்கப்பட்ட பொழுது, இலங்கைத் தமிழ் நாடக அரங்கினது- கூத்து மரபினது-, பிறகளங்களை இனங் கண்டறிய வேண்டிய பணி முக்கிய கடமையாயிற்று. கண பதிப் பிள்ளை வித்தியானந்தன் கல்விமரபின் சக- மாணவனுகவும், அனுபவத்திலும் கலையுணர் திறனிலும் மூத்தோனுகவும்; தமிழ் நாடகக் குழுவுடன் 1956 முதல் அங்கத்துவத் தொடர்பு கொண்டிருந்த திரு த. சண்முக சுந்தரம் புதுக்குடியிருப்பை மையமாகக் கொண்டு வன்னிவள நாட்டின் கலைப்பாரம்பரியத்தைக் கண்டு பிடிப்போம் என்ருர். முடிவு, வன்னி வள நாட்டுக் கலைவிழாவாக (1976) முகிழ்த்தது. முல்லைத்தீவு எனும் அரசாங்க நிருவாக மாவட்டம் தோன்றுவதற்கு முன்னரே அதன் பண்பாட்டுத் தனித்துவம் அந்தக் கலை விழாவில் நிருபணமாயிற்று. இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் யாவருக்கும் பொதுவான கலை மரபுகள், பிரதேசத் தனித்துவத்துடன் அங்கு போற்றப்படும் உண்மை அக்கலை விழாவில் இடம் பெற்ற கூத்துக்கள், ஆட்டங்கள் மூலம் தெரிய வந்தது. விழா பற்றி வந்த பத்திரிகை அறிக்கைகள், இலங்கை வானொலியில் ஒலிபரப்பப்பெற்ற விழா நிகழ்ச்சிகளின் தொகுப்பு ஆதியன இந்த உண்மையை இலங்கைத் தமிழ் பேசும் மக்களுக்கு நன்கு எடுத்துக் காட்டின.

அந்த விழாவின் பொழுது அதில் முக்கிய பங்கெடுத்தவர்கள் கலாநிதி சண்முகதாஸ், திரு மெற்ருஸ்மயில் யோன்ரூேர்- வன்னிவள நாட்டின் வாய் மொழிக்கலைகளை எழுத்துருவிற் கொண்டு வரவேண்டிய தன் அத்தியாவசியத்தை உணர்ந்தனர். திரு மெற்ருஸ் மயிலுக்கு இது ஒரு ஆன்ம சபதமாகிற்று. 1976 இல் எடுக்கப் பெற்ற சபதம் இன்று நிறைவேறுகின்றது. ''வன்னிவள நாட்டுப் பாடல்கள்'' இன்று வெளி வருகின்றது.

எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார் திண்ணியராகப்பெறின்

III

இலங்கைத்தீவு முழுவதினையும் சமூக - பண்பாட்டுப் பிரதேசங்களாக வகுக்கும் பணியில் முதன் முதலில் ஈடுபட்ட ப்றைஸ் றயான் (Bryce Ryan) என்னும் சமூகவியலாளர், இயைபுடைய சமூகக் குழுமங்கள் என்று அடிப்படையில் பிரித்தபொழுது, யாழ்ப்பாணத் தீபகற்பத்தை ஒரு பிரதேசமாகவும், முஸ்லிம்களும் தமிழரும் இணைந்து வாழும் கிழக்குப்பகுதியையும் ஒரு பிரதேசமாகவும், வடபகுதியுடன் சார்ந்த வன்னிப்பகுதியை ஒரு பிரதேசமாகவும் பிரித்துக்கொண்டார்.

மற்றைய பிரதேசங்கள் சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழ்ந்த இடங்களுள் வந்தன. அத்தகைய பிரதேசங்கள் ஐந்து உள்ளன.

வடபகுதியின் வன்னிப்பிரதேசம் என்னும் சமூக-பண்பாட்டுப் பிரதேசம் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களை உள்ளடக்கி நிற்பதாக அமைந்தது. இப்பிரதேசத்தின் பாரம்பரியப்பண்பாட்டாய்வினைப் பொறுத்த வரையில், மன்னார் மாவட்டம் ஒன்றே முற்று முழுதான ஆய்வுக் கவனிப்பைப் பெற்றிருந்தது. முல்லைத்தீவு, வவுனியாப்பிரதேசங்கள் பற்றிய பண்பாட்டாய்வுகள் மேற்கொள்ளப்படாதிருந்தன. அரசியற் பிரச்சினை வழிவந்த சமூக உயிர்ப்புணர்வு மேலோட்டமான வரலாற்றுப்பிரச்சினைக்கு ஓரளவு இடமளித்தது. "அடங்காப் பற்று"ப் பற்றிய குறிப்புக்கள், பண்டார வன்னியனின் வீரம் பற்றிய குறிப்புக்கள் முதலியன மக்கள் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன வெனினும், இப்பிரதேசத்தின் பண்பாட்டுக்கோலம் அழுத்தான அவதானிப்பினைப் பெறவில்லை.

இந்தப்பிரசுரம் அந்தக் குறைபாட்டின் ஓரம்சத்தை முற்றாக அழித்து விடுகின்றது. அப்பகுதியின் இளம் ஆய்வாளர்கள் மேற் கொண்டுள்ள ஆராய்ச்சிகள் மீதிக்குறைபாடுகளையும் அகற்றி விடும் இத்துறையில் தமிழரசி சந்திரசேகரம், நா. சுப்பிரமணியஐயர் போன்றோர் ஈடுபட்டுள்ளனர்.

பண்பாட்டுக்கோலம் பற்றிய ஆய்வு உண்மையில் சமூக - பொருளாதாரத் தளத்தை விவரிப்பதன் மூலமே பூரணமாகப் பெறப்படும். குளத்தைச் சுற்றியுள்ள கிராமம், அத்தகைய ஒரு கிராமத்தின் சமூகத் தேவைகள், சமூக நிறுவனங்கள் ஆதியன எவ்வாறு அத்தளத்தின் அசைவியக்கத்திற்கு உறுதுணை புரிகின்றன என்பதையும், இந்த வாழ்க்கை வட்டத்தினுள் மதம் (நம்பிக்கைகள், கிரியைகள், வாழ்க்கை நோக்கு) எவ்வாறு தொழிற்படுகின்றது என்பதையும் ஆராயும் பொழுது தான் வன்னிவளநாட்டின் பண்பாட்டுக்கோலம் புலப்படும். இப்பிரதேசம் பற்றிக் குறிப்பிட்ட நயான் "இப்பகுதி சமூக நிறுவனங்களைப் பொறுத்த வரையில் யாழ்ப்பாணத்தைச் சார்ந்ததாகவும், உயரின - வாழ்க்கைச் சூழலைப் பொறுத்த வரையில் வனங்களின் அதிகாரத்துக்குட்பட்டதாகவும் காணப்படுகின்றது" என்றார். 'வனம்' தான் "'வன்னி"'யின் அடிப்படை. தொல்காப்பிய மொழியிற் கூறுவதானால், வனத்தின் கருப்பொருள்களே வன்னியின் பண்பாட்டைத் தீர்மானித்தன.

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த வன்னிப்பகுதியை, அதாவது தமிழ் வன்னிப் பிரதேசத்தைப் பொறுத்தவரையில் அங்குள்ள

சமூகத்தொகுதி மிக முக்கியமான ஒன்றாகும். வன்னிப்பிரதேசத்தி லேயே பாரம்பரியமாக வாழ்ந்து வருபவர்களும், அவர்களுடன் பல் வேறு குடியிருப்புக்களில் இடையிட்டு அப்பகுதிகளில் வாழச் சென்ற வர்களான யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களும் இணைந்து வாழ்கின்ற னர். அண்மைக்காலத்தில், மலையகத்தோட்டத் தொழிலாளர் பலரும் அங்கு குடும்பங்களாக வாழ்ந்து வருகின்றனர். எனவே அங்கு மூன்று பெரும் சமூகத்தொகுதிகள் ஒருபுறத்தில் தனித்தனியாகவும் பொரு ளாதார முயற்சிகளில் ஒன்றுபட்டும் வாழ்ந்து வருவதைக் காணலாம்.

மதத்துறையைப் பொறுத்தவரையில் இந்துக்களும் கிறிஸ்தவர் களும் - முக்கியமாக றோமன் கத்தோலிக்கக் கிறிஸ்தவர்களும் - இப்பகு தியில் இணைந்து வாழ்கின்றனர்.

சாதியமைப்பைப் பொறுத்த வரையிலும், இங்கு, யாழ்ப்பாணக் குடாநாட்டிற் காணப்படுவதுபோன்று சாதியமைப்பின் கெடுபிடிகள் காணப்படுவதில்லையெனினும் ஏறத்தாழக் குடாநாட்டிற் காணப்படு வதுபோன்ற அதிகாரமுறையைக் கொண்டதாகவேயுள்ளது.

புதிதாகத் தொடக்கப்பெற்ற குடியேற்றத்திட்டங்களில் பாரம் பரியமும் நவீனத்துவமும் (முக்கியமாகப் பொருளாதாரத்துறையில் மிக முக்கியமான நவீன மயப்பாட்டு நிகழ்வுகள் இடம் பெற்றுள்ளன) இணையும் முறையினை அறிந்து கொள்வது அத்தியாவசியமாகின்றது.

இவையாவற்றையும் அறிந்து கொள்வதற்கான சமூகவியற்கள ஆய்வுகளோ, மானிடவியல் ஆய்வுகளோ ஆழமான பொருளாதார ஆய் வுகளோ மேற்கொள்ளப்படவில்லை. அரசியல் வரலாறு பற்றிய தகவல் கள் உள எனினும் சமூக அமைப்பினையும் சமூக வரலாற்றினையும் அறிந்து கொள்வதற்கான வரன் முறையான முயற்சிகள் இன்னும் கொள்ளப்படவில்லை.

இத்தகைய ஒரு நிலையில் இந்நூல் வெளிவருவது, மேற்கூறிய ஆய்வுகளுக்கு வழிவகுப்பதுபோன்று அமைந்துள்ளது.

IV

வன்னிப்பகுதியின் சமூக- பொருளாதார அமைப்பை மற்றைய பிரதேசங்களின் சமூக பொருளாதார அமைப்புடன் ஒப்பு நோக்கிப் பார்க்கும் பொழுது பொருளியல் அறிஞர்கள் எடுத்துக்கூறும் "சமனற்ற வளர்ச்சி"க் கோட்பாடு (The Concept of Unequal Development) அங்கு நிதர்சனமாகத் தொழிற்படுவதைக் காணலாம். அதாவது சில

அமிசங்களிற் சில இடங்களில் பெரு வளர்ச்சி காணப்பட்டாலும் சில அமிசங்களிற் சில இடங்களின் வளர்ச்சி சிறிதும் இல்லாது. மிகப்புராதன மரபுகள் நின்று நிலவுவதைக் காணலாம். இத்தகைய பிரதேசங்களின் வரன்முறையான சமூக வரலாற்றை அறிந்து கொள்வதற்கு அந்தப் புராதன பாரம்பரியங்களை நன்கு அறிந்து கொள்ள வேண்டியதவசியமாகின்றது. இந்தியாவின் வரலாற்றிலும் இத்தகைய ஒரு நிலைமையே காணப்படுகின்றது. இதனாலேயே இந்தியாவின் சமூக வரலாற்றை விஞ்ஞான ரீதியாக அணுக முனைந்த கோசாம்பி குலக்குழு வாழ்க்கை நிலையின் மிச்ச சொச்சங்கள் நவீன இந்திய சமூக அமைப்பிற் பெறும் இடத்தினைப் பற்றியறிதல் வேண்டுமென வற்புறுத்தினார். இன்று ரோமிலா தாப்பர் போன்ற வரலாற்றறிஞர்களும் அவ்வழியே செல்கின்றனர். அத்தகைய ஒரு சூழ்நிலையில் வாய்மொழி இலக்கியங்கள் மிக முக்கியமான வரலாற்றுச் சான்றாக அமைந்து விடுகின்றன. வன்னிப்பகுதியின் வாய்மொழி இலக்கிய வளத்தை இயன்றளவு ஒருங்கு திரட்டிக் கொண்டு இந்நூல் வன்னிப்பகுதியின் சமூகவரலாற்றுக்கான இன்றியமையாச் சான்றாகின்றது.

மேற்கத்திய அறிவியற்றுறைகளை ஆங்கிலத்தின் வழியாகவே கற்றஎம்மிடையே நாட்டார் வழக்குத் தொகுதி (Folklore) என்பது வாய்மொழி இலக்கியத்தையே முதன்மைப்படுத்துவதாகவுள்ளது. ஆங்கில மரபில் இவ்வாறே கொள்வர். ஆனால் பிரெஞ்சு, ஸ்கந்திநேவியாப் பாரம்பரியங்களில், நாட்டார் வழக்குத் தொகுதி என்பது பாரம்பரிய வீடமைப்பு உடைவகைகள், விவசாய வழக்கங்கள் போன்ற முற்றிலும் மானிடவியலுக்கான ஆய்வுத் துறைகளையும் உள்ளடக்கிநிற்கும். வன்னிப்பிரதேசம் போன்றவொரு பகுதியின் சமூக வரலாற்றுக்கு அத்தகைய தகவல்களைப் பேணுவதும் அத்தியாவசியமாகும். வாய்மொழி இலக்கியங்களின் உள்ளீடாக அமைந்துள்ள வழக்குகள், எண்ண நியமங்கள் ஆகியனவற்றை ஆழமாக ஆராயும் பொழுது மேற்குறிப்பிட்ட பரிமாணங்கள் பற்றியும் ஆராய வேண்டிவரும். எவ்வகையிற் பார்க்கினும், வாய்மொழி இலக்கியம் சமூகவரலாற்றுக்கான நல்லதொரு வாயிலாகும்.

"வன்னிவள நாட்டுப் பாடல்கள்" நாட்டார் வாய்மொழி வழக்கு என்ற வகையில் மொழியியல், பாடாந்தரத்திறனாய்வுகளின் நியமங்களுக்கேற்பப் பதிப்பிக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கதாகும்.

V

வன்னியின் பாரம்பரிய வரலாறுகள் பல ஏட்டுப்பிரதிகளாகவே யுள்ளன. பேராசிரியர் கணபதிப்பிள்ளை அவர்கள் அத்தகைய ஓர்

ஏட்டுப்பிரதியிற் காணப்பட்ட வரலாற்றுத் தகவல்களை இலங்கை ''வித்தியா போதினி''யிற் பிரசுரிந்தார். ஒட்டுசுட்டானிற் காணப்பட்ட வன்னிவரலாறு பற்றிய ஓர் ஏட்டுப்பிரதியினை எனது தகப்பனார் காலஞ்சென்ற பண்டிதர் த. பொ. கார்த்திகேசு அவர்கள் மூலம் பார்க்கும் வாய்ப்பு எனக்குக்கிட்டிற்று. இத்தகைய ஏட்டுப் பிரதிகளைக் கண்டுபிடித்துப் பிரசுரஞ் செய்வது அத்தியாவசியமாகும். வன்னியின் வரலாற்றைக் கலாநிதி இ. பத்மநாதன், சி. எஸ். நவரத்தினம் ஆகியோர் எழுதியுள்ளனர்.

ஏற்கனவே கிடைத்துள்ள வரலாற்றுத் தகவல்களை; இந்நூலிற் காணப்படும் வாய்மொழிப் பாடல்கள் தரும் சமூக வரலாற்றுத்தகவல்களுடன் இணைத்து நோக்குவது எமது அடுத்த கடமையாகும்.

இத்துறையில் திரு மெற்ருஸ் மயில் தொழிற்பட வேண்டுமென்பது எனது விருப்பமாகும்.

தமிழ்த்துறை
யாழ். பல்கலைக் கழகம்
18-4-1980

கார்த்திகேசு சிவத்தம்பி



வேலப்பணிக்கர் ஒப்பாரி

— ஓர் அறிமுகம்

கலாநிதி அ. சண்முகதாஸ்
தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

நாட்டார் பாடல் வகைகளுள் ஒப்பாரியும் ஒன்று. நாட்டார் பாடல் வடிவங்களாயிருந்தவை பல பிற்காலத்திலே இலக்கிய வடிவங்களாக மாற்றமைப்புப் பெற்றன. அம்மானை, ஊஞ்சல், கும்மி போன்றவற்றைக் குறிப்பிடலாம். உதிரியான முறையிலே வாய்மொழிப்பாடல்களாக இருந்த நாட்டார் பாடலின் வடிவங்களுட் சிலவற்றைப் புலவர்கள் நீண்ட கதை கூறுதற்கு வாய்ப்பான சாதனங்களாகக் கொண்டனர். அந்த வகையில் பிற்காலத்திலே தோன்றிய ஒர் இலக்கிய வடிவமாக ஒப்பாரி அமைகின்றது. கண்டிராசன் ஒப்பாரி, திம்மையன் ஒப்பாரி போன்றவற்றை உதாரணங்களாகக் காட்டலாம். இவ்வாறு கதைப்போக்காக அமையும் ஒப்பாரி வடிவம் இலக்கிய அந்தஸ்துப் பெற்றபோதிலும் அதேவடிவம் இன்னும் நாட்டார் பாடற் பண்புடையதாகவும் அமைந்து வருகிறது. இதற்கு நல்ல உதாரணம் இங்கு தரப்பட்டுள்ள வேலப் பணிக்கர் ஒப்பாரி.

வன்னிப் பகுதிக்கே சொந்தமான இக் கதைப்பாடல் ஈழத்தமிழருடைய வரலாறு, சமூகம், மொழி ஆகியனபற்றி ஆய்வுசெய்பவர்களுக்குத் தன்னளவிலான கருவூலமாக அமையக்கூடியது. ஏட்டிலிருந்து எழுதியபடியே வேலப்பணிக்கர் ஒப்பாரி இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ளது. நாட்டார் பாடல்களில் எவ்வித மாற்றமுஞ் செய்யாது, அப்படியே வழங்குவதுதான் நாட்டுப் பண்பாட்டியல் மாணவனின் கடமையாகும். அதற்கேற்ப இத்தொகுதி ஆசிரியர் ஏட்டு வடிவத்திலிருந்தபடியே வேலப்பணிக்கர் ஒப்பாரியை வழங்குவதுடன், அதனைச் சீர்பிரித்து அமைக்கப்பட்ட வடிவத்தினையும் உடன் வழங்க எண்ணியது பாராட்டுதற்குரியது. அதன்படி சீர்பிரித்து எழுதும் வேலை என்னிடம் ஒப்படைக்கப்பட்டது.

இவ்வேடு கிடைத்த இடமாகிய ஈச்சங்குடியிருப்பைச் சேர்ந்தவரும் பல்கலைக்கழக மூன்றும் வருடத் தமிழ்ச் சிறப்பு மாணவியுமாகிய

செல்வி த. குணலட்சுமியின் உதவியுடன் சீர்பிரித்து எழுதப்பட்டது. எங்கள் ஊர்களிலே இப்பொழுது கூடப் பாடப்படும் ஒப்பாரிப் பாடல்களின் சந்தத்தினை மனத்திற் கொண்டு ஒப்பீட்டுமுறையில் சீர்கள் பிரிக்கப்பட்டன. இம் முயற்சி முடியுந்தறுவாயில் பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் தன்னுடைய தந்தையாருடைய பிரதி என வேலப்பணிக்கர் பெண்சாதி அரியாத்தை பேரில் ஒப்பாரி என்னும் நூலினை எமக்குத் தந்துதவினர். பவ வருடம் (1934) வைகாசி 12ம் திகதி 'சிவகுக' அச்சுயந்திரசாலையில் அச்சேற்றப்பட்ட இந்நூலின் முகப்பில்

"இஃது கிழைக்கரவையம்பதி வ. கணபதிப்பிள்ளை அவர்களால் பழைய ஏட்டிலிருந்து எடுத்துப் பிரசுரிக்கப்பட்டது."

என்னுங் குறிப்புக்கள் உள்ளன. இந் நூற் பிரதி கிடைத்த காரணத்தால், இந் நூற் பாடல்களுக்கும் எம்மிடமுள்ள ஏட்டுப் பிரதிப் பாடல்களுக்கும் இடையே ஒப்புமை வேறுபாடுகளை கண்டறியும் முயற்சியிலும் ஈடுபட்டோம். நூற் பிரதியிலும் ஏட்டுப் பிரதியிலும் பாடல்கள் சீர்பிரித்து எழுதப்படவில்லை. கதையில் எவ்வித மாற்றமுங் காணப்படவில்லை. ஆனல், பாடல் வடிவம், மொழி, சில நிகழ்ச்சிக் குறிப்புக்கள் ஆகியவற்றிலே பல வேறுபாடுகள் தென்பட்டன. அவ்விவரங்கள்யாவும் முடிந்த அளவில் பூரணமான முறையில் பாடலமைப்பில் இங்கு தரப்பட்டுள்ளன. ஏறக்குறைய 25 பாடல்கள்வரை நூற்பிரதியிற் காணப்படவில்லை. குறிப்பாக இறுதிப் பகுதியில்,

கட்டையிலே உன்னைவைக்க
நானெடுத்து நானணைத்து
நான் பூசுஞ் சந்தனமே — எனக்குக்
கருத்தோ தெரியவில்லை"

என்னும் பாடலுடன் நூற் பிரதி முடிவு பெறுகின்றது. ஆனல் இங்கு பிரசுரமாகும் ஏட்டுப் பிரதியிலோ மேலதிகமாகப் 17 பாடல்கள் வேலப்பணிக்கர் தன் பெண்சாதியை நினைத்துப் புலம்புவதையும். சுடுகாட்டிற் சென்று நாச்சன் அரியாத்தையுடன் நெருப்பில் உடன்கட்டையேற முயற்சிப்பதையும் கூறி, இறுதியிலே

பரமசிவன் பதியில்
வேலப்பணிக்கரும் பெண்சாதியும் — அவை
பரங்குடனேபோய்ச் சேர்ந்தார்கள்

என்று கதையின் திட்டமரன முடிவினையும் வழங்குகின்றன.

ஏட்டுப் பிரதியினைச் சீர்பிரித்து அமைக்குமிடத்து, நூற்பிரதியுடன் ஒப்பிட்டு சொல்லோ, சொற்றொடரோ வேறுபட்டுக் காணுமிடங்களெல்லாம் அடிக்குறிப்புக்களாக வழங்கப்பட்டுள்ளன.

பணிக்கர் என்பவர் தமிழ்நாட்டு வரலாற்றிலே போர்வீரர்களாகக் கடமை புரிந்தவர்களாகும். ஆனால் ஈழநாட்டிலே யானைப்பணிக்கர் என்றொரு பிரிவினர் வன்னி இராச்சியத்திலே இருந்தனர். வன்னிப் பகுதி யானை மலிந்த இடம். யானைகளைப் பிடிப்பதற்கும் தந்தங்கள் பெறுவதற்குமென இராச்சியத்தில் ஒரு பகுதியினரை அமர்த்தி வைத்திருக்க வேண்டிய தேவை இருந்தது. அவர்களே யானைப்பணிக்கர். அத்தகைய பணிக்கருள் ஒருவராகிய வேலப்பணிக்கரைப்பற்றியும் அவர் மனைவி நாச்சன் அரியாத்தைபற்றியும் வேலப்பணிக்கர் ஒப்பாரி கூறுகின்றது.

ஈழத்தமிழருடைய பண்பாட்டு வரலாற்றிலே ஈடுபடும் மாணவர்களுக்குச் சில தரவுகளை வழங்கக் கூடியதாக இக்கதைப்பாடல் அமைகின்றது. ஈழநாட்டின் ஏனைய பிரதேசங்களிலுள்ள ஒப்பாரிப் பாடல்களுடன் இதனை ஒப்பிட்டு நோக்குவதும் பயனுள்ள முயற்சியாகும். வீரம் சோகம் ஆகிய ரஸங்கள் இழையோடப் பாடல்கள் அமைந்துள்ளன. வன்னிவளநாட்டின் நாட்டார் பாடல் தனித்துவத்தினை எடுத்துக்காட்டும் பாடல்களுள் வேலப்பணிக்கர் ஒப்பாரியும் ஒன்றாக அமைகின்றது.

அ. சண்முகதாஸ்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.
18 - 4 - 80

பதிப்புரை

வன்னிவள நாட்டிற் சிதறி, ஆங்காங்கே பல முதியவர்கள் மனதில் இருந்த பாடல்களையும், பழைய பெட்டிகளுக்குள், கறையானால் அரிக்கப்பட்ட கையெழுத்து, ஏட்டுப்பிரதிகளில் இருந்த பாடல்களையும் தொகுத்து நூலாக வெளியிட முயன்றேன். இம்முயற்சியின் முடிவாகவே ''வன்னிவள நாட்டுப் பாடல்கள்'' என்ற முதற் தொகுதி முல்லை இலக்கிய வட்டத்தினரால் வெளியிடப்படுகிறது.

இம்முயற்சியை நான் மேற்கொள்ளுவதற்குத் தூண்டுதலாக இருந்த காரணம், இந்நூலிற் காணப்படும் நாட்டுப் பாடல்களைக் கேட்கும் வாய்ப்பைப் பெற்றுள்ள வன்னி மாவட்டத்தைச் சேர்ந்தவன் என்றளவிலல்லாது, இப்பாடல்களை ரசிப்பவனுமாக இருந்ததுவே எனலாம். வன்னி நாட்டுப் பாடல்களில் வரும் பண்டிப்பள்ளு, குருவிப் பள்ளு, வேலப்பணிக்கர் ஒப்பாரி, சிந்து வகைகள் ஆகியவை இலக்கியச் சுவை மிகுந்தனவாகவும் நயமுள்ள பாட்டுக்களைக் கொண்டனவாகவும் இடப்பெயர்களைக் குறித்துவரும் பாடல்களில் வரலாற்று கருவூலங்களுடையனவாகவும் இப்பகுதித் தெய்வங்களின் புதுமைகளை எடுத்துக்கூறுவனவாகவும், எமது மூத்தோர்களின் வாழ்க்கையுடன் தொடர்புடைய, பொருளாதார, சமூக அமைப்பு முறைகளை காட்டுவனவாகவும் இருந்தன.

இந்நூலில் வரும் பாடல்களைத் தொகுப்பதற்கும், முக்கியத்துவம் கொடுப்பதற்கும் ஆன காரணத்தை விளங்கிக்கொள்ள அக்கால சமூக அமைப்பைச் சற்றுச் சுருக்கமாகநோக்கி, அவர்களுடன் இப்பாடல்கள் எவ்வளவு தொடர்புடையன என்பதை ஒப்புநோக்குவது அவசியம். வன்னிநாடு மிகவும் பிற்காலத்திலேயே அபிவிருத்திக்கு உட்பட்ட நாடாகும். அப்பிரதேசத்தில் முன்பு கிராமங்களுக்குக் கிராமங்கள் போக்குவரத்துத் தொடர்புகள் இருக்கவில்லை. அதிகமாகக் குளங்களையடுத்தே மக்கள் வாழ்ந்து வந்தார்கள். நவீன வசதிகள், உபகரணங்கள் இருக்கவில்லை. அவர்கள் ஜீவனோதய உழைப்பு, விவசாயமாகவே இருந்தது. மாரியில் விவசாயம் செய்வது, கோடையில் அவ்வருவாயைக்கொண்டு செலவழிப்பது என்ற நிலையில் அவர்கள் வாழ்வு அமைந்து இருந்தது. பெரும்பான்மையாகப் பண்டமாற்றுச் சமுதாய அமைப்பாகவே இருந்தது. இக்காலகட்டத்தில் விவசாயத்திற்கு முக்கியத்துவமளித்த சமூகத்தினருக்கு நெற்பயிரிடுதலே முக்கிய தொழிலாகும். பாடுபட்டு விதைத்து நெல்லை வளர்த்து நெல் பழுத்தவேளையில், பண்டியும், குருவியும் நெல்லை அழித்துவிடுகின்றன. இதனால் கமக்காரர் தமது விளைந்த நெல்லைக் காப்பாற்றமுக

மாகவும், தமது அன்றாட உணவுக்காக பண்டிகளையும், குருவிகளை யும் பெருமளவில் வேட்டையாடுவது வழக்கத்திலிருக்கின்றது. அத னால்தான் அக்கால கவிஞர்கள் மற்றைய மிருகங்களைப்பற்றிப் பாடா மல் பண்டிவையும், குருவிகளையும் பாடினார்கள். மேலும் கமக்காரர் களுடைய பொருளாதார முன்னேற்றத்தைக் கூடுதலான அளவு தடுக் கும், குறைக்கும் நிகழ்ச்சிகளில் ஈடுபட்டனவாக அவை இருந்தன. எனினும் பண்டிகளையும், குருவிகளையும் ஜீவகாருண்ய நோக்கில் அவ தானித்த ஒரு கவிதை உள்ளத்தின் உணர்வுபூர்வமான வெளிப்பாடு களாகவே அமைகின்றன. அப்பாடல்கள் குறிப்பாக பண்டிப்பள்ளு உ-ம்: (பா. 31) (பா. 63) (பா. 34)

முன்பு கூறியதுபோல நவீனவசதிகள் இல்லாததுடன் மருந்து வசதிகளும் இப்பகுதிகளில் இருக்கவில்லை. இதனால் மனிதருக்கோ, வளர்ப்பு மிருகங்களுக்கோ ஏதும் நோய்கள், தாக்கங்கள் ஏற்பட்டால் தெய்வ நம்பிக்கைதான அவர்களுக்கு மாத்திரம் மருந்தாக இருந்தது. இதனால் ஒவ்வொரு கிராமங்களிலும் பல்வேறு பெயர்களில் தெய்வ வழிபாடு இருந்ததை இந்நூலைப் படிக்கும்போது தெரியவருகின்றது.

கமக்காரர்கள் நெல் உற்பத்தியுடன் மாடு வளர்ப்புத் தொழிலும் செய்துவந்திருக்கின்றார்கள். மாட்டுக்கு நோய் வரும் நேரத்திலோ, மாடு காணமல்போனாலோ தாம் நம்பியிருக்கும் தெய்வத் திற்கு நேர்த்தி வைப்பது வழக்கம். "நேர்த்தி" என்பது அப்பகுதியின் வழக்கிலுள்ள சொல். அதாவது நாணயக் காசை வெள்ளைச்சீலையில் முடிந்து, ஒரு கட்டையிலோ, தமது வீட்டு வளையிலோ கட்டி, தெய்வத்தை வணங்கி 'நம்பிக்கை' வைப்பார்கள். பலித்தவுடன் தாம் வழிபடும் தெய்வத்திற்குப் பொங்கல், மோதகம், வடை வைத்தும், பெரிய அளவில் குலைகுலையாக வாழைப்பழம வைத்தும், மடை, 'நிறை மணி' போடுவது வழக்கம். 'மடை'. நிறைமணி' என்பவை பூசை என்னும் சொல்லுக்குப் பதிலாக இப்பகுதியில் தெய்வத்தை மகிழ் விக்க வழங்கும் சொற்களாகும். இம்முறைகளை ஐயனார் சிந்து, நாச்சி மார் சிந்து, அண்ணமார் சிந்து ஆகியவற்றிற் காணலாம்.

சிந்துகளில் வரும் இடப்பெயர்கள், குளங்கள் எல்லாம் வரலாற்று ரீதியில் முக்கியத்துவம் அடைந்து நிற்கின்றன. உ-ம்: வற்றுப்பளை, முள்ளியவளை, மாத்தளன், குமுழமுனை, வேணாவில், நந்திக் கடற்கரை, தனங்கிளப்பு, கோடலிக்கல்லையன், அச்சிலாய், கொக்குளாய், ஆன கூளாவடி, வட்டுவாகல், செம்மலை, குருந்துமலைகண்டல், தம்பங்கடவமலை, சடவக்கன்குளம், முறிவுக்குளம், சச்சாய்க்குளம், செம் பெடுத்த குளம், ஆராட்சியார்குளம் என்பவற்றைக் கூறலாம். இவ்விடப் பெயர்களும், குளங்களும் தெய்வ வரலாற்றுடன் தொடர்பு உடையன

அத்தோடு இப்பெயர்கள் வரலாற்று ஆசிரியர்களின் ஆய்வுகளுக்கு உதவியாகவிருக்கும் என்பதில் எனக்கு நம்பிக்கையுண்டு. உ-ம், வற்றாப்பளை அம்மன் கோவில், காட்டுவிநாயகர் கோவில்.

பொதுவாக ஒப்பாரி அமங்கல நிகழ்ச்சிகளிலேயே பாடப்படுகின்றது, வன்னி நாட்டில் இப்பொழுதும் அமங்கல நிகழ்ச்சி ஏற்படும் பொழுது ஒப்பாரி பாடுவது வழக்கமாக இருந்துவருகின்றது. அதாவது ஒருவரைப்பற்றி இன்னொருவர் அல்லது பலபேர் சேர்ந்து பாடி அழுவதாகவே இருக்கும். ஆனால் இந்நூலிற் காணப்படும் வேலப்பணிக்கர் ஒப்பாரியோ வடபகுதியில் ஒரு தனித்தன்மையுள்ளது. என்று கூறமுடியும். ஒரு வரலாற்றை ஒப்பாரிமூலமே கவிஞன் எடுத்துக் காட்டுகின்றான். இந்த ஒப்பாரியில் நான்கு ஐந்து பாத்திரங்கள் இடம் பெறுகிறார்கள். இதைப்பற்றிக் கலாநிதி அ. சண்முகதாஸ் அவர்கள் விளக்கந் தந்துள்ளார்கள். இந்நூல் தொகுத்தபின்பு முல்லைத்தீவுத் தொகுதியிலுள்ள வெள்ளாம் முள்ளி வாய்க்கால் கிராமசேவகர் எஸ். வேலாயுதம் அவர்கள் "வேலப்பணிக்கர் ஒப்பாரி" ஏடு ஒன்று வைத்திருப்பதாகத் தெரிவித்தார். அவ்வேடும் இன்னும் புதிய தகவல்களைத் தரக்கூடும். வேலப்பணிக்கர் ஒப்பாரியில் வரும் அரியாத்தை பெலி விட்டு இறந்ததாக இந்நூலில்வரும் பாட்டுக்கள் கூற நஞ்சு கொடுத்து அவள் இறந்ததாக வாய்மொழியில் கூறப்படுகிறது. புதிய ஏட்டுப்பிரதி இச்சந்தேகத்தை நீக்கும் என்பதில் நம்பிக்கையுண்டு.

ஆதிக்கமக்காரர்கள் நெல் அறுவடை முடிந்தபின்பு பொழுதுபோக்குவதற்கு கும்மி, கோலாட்டம், குடம் ஊதல், ஊஞ்சல் ஆடுதல் போன்ற நிகழ்ச்சிகளை நிகழ்த்துதல் வழக்கம். அவ்வேளைகளில் பாடப்பட்ட பாடல்களாக எமக்குக் கிடைத்தவையும் இத்தொகுப்பில் இடம் பெறுகின்றன. இப்பாடல்களில் "கொட்டுக்கிணற்றடிப் பிள்ளையார் கோவில் கும்மி" முக்கியத்துவம் வகிக்கின்றது. இது குமுழமுனையில் இன்றும் பிரசித்திபெற்று விளங்கும் கொட்டுககிணற்று விநாயகர் கோவிலின் புதுமையை வரலாற்றுரீதியில் கும்மி வடிவாக எடுத்துக்கூறுவதாக அமைந்துள்ளது.

இவ்வகையான சிறப்புக்களை வன்னி வள நாட்டுப் பாடல்கள் கொண்டிருந்ததை நான் கண்டேன். நவீன காலப் போக்கில் பாட்டின் பொருட்களும் ஓசைகளும், அமைப்புக்களும் மாறிவரும் சமுதாயத்திற்கேற்ப நவீனப்படுத்தப்படும் வேளையில், பழையன கழிதலும் புதியன புகுதலும் செயற்படும் வேளையில், பாதுகாப்பின்றி அழிந்தும் போற்றப்படாதும் கறையானுக்கு இரையாகியும் வருகின்றவையு

மான வரலாற்றுச் சிறப்பும் பொருட்செறிவும் கொண்ட இத்தகைய பாடல்களை அச்சேற்றிப் பாதுகாக்கும் முயற்சியை மேற்கொண்டேன்.

II

வன்னிவள நாட்டிலுள்ள பாடல்களைத் தொகுக்கும் முயற்சியில் ஈடுபட்ட நான் ஏட்டுப் பிரதிகள் கையெழுத்துப் பிரதிகள் அச்சுப் பிரதிகளைத் தேடி எடுப்பதற்கு முயற்சி எடுத்தேன். "அருவிச்சிந்து கதிரையப்பர் பள்ளு, பண்டிப்பள்ளு, குவிப்பள்ளு" என்ற தலைப்பில் முள்ளியவளையைச் சேர்ந்த சி.ச. அரியகுட்டிப்பிள்ளை அவர்கள் ஏட்டிலிருந்து தொகுத்து மு.வே முருகேசம்பிள்ளை அவர்களினால் கொழும்பு ஆனந்தாபவா அச்சியந்திரசாலையில் அச்சிடப் பெற்ற பிரதியும் (ஆண்டு குறிப்பிடப்படவில்லை) 1934ம் ஆண்டு வைகாசிமாதம் 12ந் திகதி கிழக்கிரவைப்பதி வ. கணபதிப்பிள்ளை அவர்களினால் வெளியிடப் பட்ட வேலப்பணிக்கர் பெண்சாதி அரியாத்தையின் ஒப்பாரி என்ற அச்சுப்பிரதியும் கிடைத்தன. யாழ் கலாசார மன்றத்தினாலே வெளியிடப்பட்ட 'வாய்மொழி இலக்கியம்' என்ற நூலில் பண்டிப்பள்ளு என்னும் பகுதியில சில பாட்டுக்களும் காணப்பட்டன. இவை தவிர வேறு அச்சுப்பிரதிகள் எனக்குக் கிடைக்கவில்லை. இவ்வளவு பிரதிகளில் உள்ள கதிரையப்பர் பள்ளு 'கதிரமலைப் பள்ளு' என்ற பெயரில் நூல்வடிவில் காணப்படுவதால் எனது முதலாவது தொகுப்பான இந்நூலில் அதற்கு முக்கியத்துவம் கொடுக்காது ஏனைய பாடல்களையே நூலில் இடம்பெறச் செய்துள்ளேன். பல அண்ணாவிமார்களினதும் பாட்டுப் பண் கலைஞர்களினதும் உதவி கொண்டு ஏட்டுப்பிரதிகளும் கையெழுத்துப் பிரதிகளும் பெறப்பட்டன. ஏட்டுப்பிரதிகளையோ கையெழுத்துப் பிரதிகளையோ தேடும் முயற்சியில் ஈடுபட்டபொழுது இப்பிரதிகளை வைத்திருந்தோர் தமது சொத்தாகவே எண்ணி வெளிவிட மறுத்ததால் கஷ்டம் ஏற்பட்டது. சிலர் அப்பாடல்கள் அச்சேறுவதை விரும்பவில்லை. சிலர் தமது பிரதிகளை யாரிடமும் கையளிக்க விரும்பவில்லை. எனினும் நான் அப்பகுதியைச் சேர்ந்தவன் என்ற முறையில் எனது விளக்கத்தையும் நம்பிக்கையும் ஏற்று சிலர் தமது ஏட்டுக் கையெழுத்துப் பிரதிகளைக் கையளித்தார்கள்.

அவர்கள் அளித்த ஏட்டுக் கையெழுத்துப் பிரதிகளை மூலமாக வைத்துக் கொண்டு, அச்சுப்பிரதிகளை ஒப்பீடு செய்து, பாடபேதங்களையும் மிகைப்பாடல்களையும் கணித்ததுடன் ஓசையை அடிப்படையாகக்கொண்டு பாடல்களை வகைப்படுத்தியும் தொகுக்கக்கூடியதாகவும் இருந்தது. ஏற்கனவே அரியகுட்டிப்பிள்ளை அவர்களினால் தொகுத்து அச்சிடப்பட்ட நூலில் பண்டிப்பள்ளு என்னும் பகுதி ஏட்டிலுள்ள முறைப்படியே சீர் பிரியாது பாடல்களாக அமைக்காது அச்சிடப்பட்டிருந்தது. எனக்குக் கிடைத்த ஏட்டுப் பிரதியின் படி ஏழாவதாக

வரும் பாடல் இவருடைய அச்சுப்பதிப்பில் எவ்வித இலக்கமும் பெறாது முற்பகுதியில் தொடர் வசனமாக பதிப்பிக்கப்பட்டுள்ளது. அச்சுப்பிரதியின்படி பின்வருமாறு அமைந்துள்ளது:

அந்தியும்சந்தியுமறிந்தே அதில்விந்தைகள் சிந்தைகள்புரிந்தே
பந்துபோலவே உருண்டேதனிப்பண்டியுமோடிவந்ததுவே.

இப்பாடல் ஓசையின் அடிப்படையில் வடிவம் பெற்று எளிதில் விளங்கக் கூடிய முறையில் சீர் பிரித்து பதிப்பிக்கப்பட்டுள்ளது:

அந்தியும் சந்தியு மறிந்தே — அதில்
சிந்தைகள் விந்தைகள் புரிந்தே
பந்துகள் போலவே உருண்டே — தனிப்
பண்டியு மோடி வந்ததுவே

இந்நூல் தொகுப்பினை ஆக்கும் பணியில் ஈடுபட்டபொழுது ஏட்டுப் பிரதியையே முதலில் நோக்கினேன். ஏடுகளில் உள்ள பாடல்கள் வரிசையாக வசனமாக எழுதப்பட்டு இருந்தன. எதுகை மோனை பிரித்து எழுதப்பட்டிருக்கவில்லை. மெய்யெழுத்துக்களுக்குப் புள்ளியிடும் வழக்கம் இருக்கவில்லை.

உ-ம் 'பொத்திக்கட்டி' என்னும் சொற்றொடர் 'பொததிசடடி' எனஎழுதப்பட்டு இருக்கும் (புள்ளியிட்டால் ஏடு கிழிந்து விடும் என்ற காரணத்தினால் இடவில்லை.) ஏட்டில் பாடல்கள் பிரிக்கப்பட்டு இலக்கங்கள் பெற்றிருக்கவில்லை. ஏட்டு ஓலைக்குத்தான் பக்க இலக்கம் தமிழ் எழுத்துக்களில் இடப்பட்டிருந்தது. '24' என்னும் இலக்கத்திற்குப் பதிலாக 'உச' என இடப்பட்டிருந்தது. தற்பொழுது வழக்கிலுள்ள எழுத்துக்களுக்குப் பதிலாக சம உச்சரிப்பையுடைய வேறு எழுத்துக்கள் கையாளப்பட்டு இருந்தன.

உ+ம்	ஏட்டிலுள்ள எழுத்துக்கள்
பிழை	பிளை
வேலை	வேளை
தமிழ்	தமிள்
கொழுப்பு	கொளுப்பு
பிரித்து	பிறித்து
வாழை	வாளை

இத்தன்மைகளைக் கொண்ட ஏட்டுப்பிரதிகள், கையெழுத்துப் பிரதிகளுடன் ஒப்பிட்டு நோக்கப்பட்டன. இயன்றளவு ஏட்டிலுள்ள எழுத்துக்கள் மாறுபடாது மெய்யெழுத்துக்களுக்கு மட்டும் புள்ளியிட்டும்

பாடல்கள் பாட்டுக்களாகப் பிரிக்கப்பட்டும் கையெழுத்துப் பிரதியில் சற்று விளங்கக் கூடிய முறையில் பிரதிமை செய்யப்பட்டன.

எனவே பதிப்பாசிரியன் என்ற முறையில் பல்வேறு பிரச்சினைகளுக்கு உள்ளானேன். ஏட்டிலுள்ளபடியே பதிப்பிக்க வேண்டும் என்று குரல்கொடுப்போருக்கும், பொருள் மாறுபடாத வகையில் தற்கால மொழிநடையிலேயே சீர்பிரித்து, உடுக்குறி, குறியீடு போட்டு பதிப்பிக்க வேண்டும் என்ற மறுசாரார் குரலுக்கும் இடைப்பட்ட நிலையில் நான் நின்று சில நியமங்களை அடிப்படையாகக்கொண்டு இந்நூலினைப் பதிப்பிக்க முயன்றேன்.

சென்னை சர்வகலாசாலைத் தமிழ் ஆராய்ச்சித்துறைத் தலைவர் எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்கள் பதிப்பித்த 'இனியவை நாற்பது' (1949) என்னும் நூலின் முன்னுரையில் குறிப்பிடும் சில கருத்துக்கள் எனக்குச் சாதகமாக இருந்தன.

> "ஆங்கிலத்தில் 'சாஸர்' இயற்றிய கவிகளைத் தற்காலத்துள்ளார் பொருளுணர்ந்து கொள்ளுதற்கு அருமையாயிருத்தல்பற்றி, சொல்லின் எழுத்தமைதியை மாற்றி அச்சியற்றல் தகுமா? இதுபோன்றதுதானே செய்யுளில் சொற்களைப் பிரித்து அச்சிடுதல்? இங்ஙனம் பிரிப்பதால் செய்யுளின் ஓசை கெட்டுவிடுமல்லவா? இவைகளுக்கு முற்றும் எளிதில் விளங்கும்படி அச்சியற்றவேண்டும் நோக்கமும் கைக்கொள்ளவேண்டுவதாயுள்ளதே. இருவகை மனப்பாங்கிற்கும் ஒரு சமரசம் ஏற்படவேண்டியது அவசியம். இந்நெறியில் நான் சிறிது முயற்சி செய்திருக்கின்றேன். அனுபவம் பெருகப் பெருக இந்நியமங்கள் திருந்தியமையலாம். தொகை அதிகரித்து வரும் இந்நாளில் இந்நியமங்கள் தக்கபடி ஆராயப்பட்டு அனைவர்க்கும் உடன்பாடான சில நியமங்கள் ஏற்படல் வேண்டும். அக்காலம் விரைவின்வரின் நலமாகும்"

என்கின்றார்.

கலாநிதி பா. ரா. சுப்பிரமணியம் அவர்கள் பதிப்பு செய்து, தமிழ்ப்புத்தகாலயம் 1975 ஆம் ஆண்டு மார்கழி மாதம் பிரசுரித்த "தமிழக நாட்டுப் பாடல்கள்" என்ற நூலில் 51 ஆம் பக்கத்தில்வரும் கூற்றாகிய,

> "வாய்மொழியாக வழங்கிவரும் நாட்டுப்பாடல்களுக்கு எழுத்துவடிவம் கொடுக்கையில் நாம் சில சிக்கல்களை எதிர்நோக்க வேண்டும். எடுத்துக்காட்டாக இப்பாடல்களுக்கு அடி அல்லது வரி வரையறை அமைப்பதைக் கூறலாம். நாட்டுப்பாடல்களிற் காணப்படும் எதுகை அடிவரையறை செய்வதற்கு உதவுகிறது.

எதுகை வரிகளின் துவக்கத்தைக்காட்டி, பாடல்களுக்கு வரிப்பத்தி வரையறை அமைய உதவுகிறது''

என்ற கருத்தும் எனக்குத் தென்பூட்டியது.

எனவே பின்வரும் நியமங்களைக் கையாண்டு துணிவுடன் பதிப்பிக்க முயன்றேன்.

அ) ஏட்டு ஓலையில் வசனம்போல் எழுதப்பட்ட பாடல்களை, நாலுவரிப் பாட்டுக்களாகவோ, எட்டுவரிப் பாடல்களாகவோ, ஆறுவரிப் பாட்டுக்களாகவோ எழுதுதல்.(இது ஒருவகைப்பாட்டு)

ஆ) சீர் பிரித்து, சந்தி பிரித்து, பாட்டுக்களை எழுதுதல்.

இ) ஏட்டில் உள்ள பாடல்களைப் பிரித்து, அவற்றுக்குத் தமிழ் இலக்கத்திற்கு (உச)ப் பதிலாக அராபியத் தொடர் இலக்கம் (24) இடுதல்.

ஈ) மெய்யெழுத்துக்களுக்குப் புள்ளியிடுதல் 'க' — 'க்'.

உ) பல்வேறு கையெழுத்து ஏட்டுப்பிரதிகளை, அச்சுப்பிரதிகளை ஒப்பு நோக்கிப் பாட ரூப பேதங்களை அடிக்குறிப்பாக இடுதல்.


என்னும் நியமங்களைக் கையாண்டு பதிப்பித்தேன்.

புகைப்படப்பிரதிமை செய்யப்பட்ட ஏட்டுப்பிரதியிலே "பொத்திக் கட்டிப்போட்ட ..." என்று தொடங்கி "...விளையும் தறைக்குள்ளே ஏகினேம்!" எனமுடியும் சுமார் நான்கு பாட்டுக்கள் ஆறுவரியிலே வசனம்போல் எழுதப்பட்டிருப்பதைக் காணலாம்.

இதற்குமுன் அச்சேற்றி வந்துள்ள முறைகளைக் கையாண்டு அச்சிட்டால் மக்கள் எளிதில் விளங்கிக்கொள்ள முடியுமா என்ற கேள்வி எழுகின்றது. எனவேதான் தனித்தனிப் பாடல் வடிவமாக எழுதும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

மேலும் சீர்களைப் பிரித்தல், இசையின்பத்தை உணர்தற்கும் பயன்பட்டது. ஏனெனில் இவ்வின்பம் சீர்களையே முக்கிய நிலைக்களமாகக் கொண்டது; எனினும்,

"சீர்பற்றிப் பிரிப்பதும், இசைபற்றிப் பிரிப்பதும் பொருளுணர்ச்சிக்கு உதவுவன அல்ல. தமிழறிவு மிக்கார்க்கும் இசை - அறிவு உடையார்க்கும் அன்றி, ஏனையோர்க்கும் இவை பயன்படமாட்டா.



இருதுண்டுகளாக்கிப் புகைப்படப் பிரதிமை செய்யப்பட்ட ஏட்டுப்பிரதியொன்றின் தோற்றம்

இதை மனதிற் கொண்ட வையாபுரிப்பிள்ளை அவர்கள் 1955 ஆம் ஆண்டு பதிப்பித்த திவ்வியப் பிரபந்தம் 'முதலாயிரம்' என்னும் தனது பதிப்பின் பதிப்புரையில் கூறுவதாவது,

> "பொருளுணர்ச்சிக்குச் சீர்பிரிப்பதைக் காட்டிலும், சந்தி பிரிப்பது அவசியம். தமிழ் இலக்கணத்தைக் கற்பவர்கள் இக்காலத்தில் அரியர். சந்தி சேர்ந்துள்ள தொடர்களை இவர்கள் பிரிக்க முடியாமல் தடுமாறுகிறார்கள். இம்முயற்சியும் பலராலும் ஒரு நியமமின்றிப் பலபடியாகக் கையாளப்பட்டு வந்துள்ளது. எனவே இது வேண்டும் பயனை அளிக்கவில்லை. இருபாலார்க்கும் எளிதில் பொருள் உணரக்கூடியபடி செய்யுளை அமைத்தால்தான் தற்காலத்தவர்க்கும் பயன்படுவதாகும். இந் நோக்கம் செய்யுளில் வரும் பதங்களில் பெரும்பாலானவற்றைப் பிரித்தாலன்றி முற்றுப்பெறாது. இந் நெறியே ஏனையவற்றைக் காட்டிலும் சிறந்தது. அடி பிரித்தல், சீர் பிரித்தல், சீருள்ளே சந்தி பிரித்தல், பதங்களைப் பிரித்தல் என வரும் பரிணாமக் கிரமப்படியும் இது உண்மையாதல் காணலாம்"

என்று கூறுகிறார்.

எனவே எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்களுடைய கூற்று இப் பதிப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள நியம முறைகளுக்கு அரண்செய்வதாக உள்ளது. ஏட்டுப்பிரதியில் பதிவுசெய்யப்பட்ட பாடல்களில் ஒரு வரியை எடுத்து, எவ்வாறு அடிபிரித்து, சீர்பிரித்து, சந்தி பிரித்து பதங்களைப் பிரித்துக் கையாளப்பட்டுள்ளது என்பதற்கு உதாரணம் வருமாறு: (ஏட்டிலுள்ளபடி பதிப்பிக்கப்பட்ட பாடல்களைக் கவனிக்கவும். - பக்: xxxvi)

"பொத்திக் கட்டிப்போட்ட பன்றிபோல் - பருப்
பூசனிக் காய்போல் வயிறும்
பத்துக் கட்டிப்போட்ட பொதிபோல் - தனிப்
பண்டியுமோடி வந்ததுவே."

என ஓசையை அடிப்படையாகக்கொண்டு பாடல்வடிவமாக்கப்பட்டுள்ளது.

பாட ரூபபேதங்கள் பற்றி இங்கு கூறுதல் வேண்டற்பாலது. பாட பேதம் என்று குறிப்பது ஒரு சொல்லுக்குப் பிரதியாக வரும் பிறிதொரு சொல்லையாகும். உ+ம் 'பொல்லு' 'கம்பு' (ப 26) என்பன பாடபேதங்களாகும். 'நூபுரம்' 'மூபுரம்' (ப 41) 'வன்னியரும்' 'கன்னியரும்' (ப - 29) என்று வருவன போல்வன ரூப பேதங்களாகும்.

இவற்றைவிட ஏடுகளுக்கிடையே வசனங்கள் வேறுபட்டும் காணப்படு கின்றன. கோவர்ணமொடு பொற்பட்டதுவும் ஏந்தி என்பதற்கு வர்ண ணப் பட்டொன்று கைதனிலே ஏந்தி என்றும் காணப்படுகிறது. சில இடங்களில் பாட்டுக்கள் முழுக்கவே வேறு பாட்டாக இருப் பதைக் காணலாம். பக்கம் (89) பாட்டு (32) இவைகளேயன்றிப் பிழையெனக் கொள்ளும் பல சொற்களும் தரப்பட்டுள்ளன. இவற் றில் பெரும்பாலும் ஏட்டை எழுதும்பொழுது பிழைவிட்டிருக்கலாம்; அல்லது ஏட்டைப்பிரதிபண்ணும் பொழுது பிழைவிட்டிருக்கலாம். தமக்குக்கிடைத்த கையெழுத்துப்பிரதிகளில் சிலவற்றைவிட்டும், சில வற்றைச் சேர்த்தும் வசதிக்கேற்ப எழுதியிருக்கலாம்; பாட்டுப் பாடும் உச்சரிப்பைக் கவனியாது] எழுதியதினால் ஏற்பட்ட பாடபேதங் களாகவும் இருக்லாம். பிழை என்று நாம் கொள்ளுபவை உயிர்த்தத்து வத்தோடுவிளங்குகின்றன. நாட்டுப்பாடல்களைக்கொண்டு அக்காலத்தில் எவ்வாறு உச்சரித்து வந்தனர் என்பதை 'ஐந்தாறு' அஞ்சாறு (பக்கம் 27) 'செந்நெல்' சென்னல் போன்ற ஒலி பேதங்கள் காணப்படுவதைக் காணலாம் கிராமிய மரபு மொழியிலேயே பாடல்கள் அமைந்திருப் பதை அப்படியே பதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஏட்டி லுள்ள மொழிநடை ஏறக்குறைய இப் பாடலில் பின்பற்றப்பட் டுள்ளது. அக் காலத்தில் வழங்கப்பட்ட எழுத்துக்கள் பிழையாக இருந்தபொழுதும் உச்சரிப்புச் சரியாகவே இருந்தது. தற்காலத்தில் கருத்துக்கள் வேருக அமைகின்றன என்ற எதிர்வாதம் ஏற்படலாம். எனினும் உச்சரிப்பைக் கொண்டும் முன்வரும், பின்வ ரும் வசனங்களைக்கொண்டும் கருத்தைப் புரிந்து கொள்ள முடியுமாகை யால் பாடல்பாடிய காலத்து மொழிமரபிலேயே பதிக்கப்பட்டுள்ளது.

"வாளைப்பழம்" என்ற சொல்லு பழம் என்று வருவதால் 'வாழைப் பழம்' என்று கருதிக்கொள்ள முடியும். பாடல்களைத் தொகுத்துப் பதிவு செய்யும்போது இடையிடையே சில பாட்டுக்கள் கிடைக்கவில்லை. இவை "......... ....." என்ற அடையாளத்தாற் குறித்துக்காட்டப் பட்டுள்ளன.

எனினும் இந்நூலில் வரும் 'அம்மன் சிந்து' பாடல்கள் இரு ரூபங்களில் பிரசுரிக்கப்பட்டுள்ளன கிடைக்கப்பெற்ற ஏட்டுப் பிரதியும், எழுத்துப் பிரதியும், சிலசில வரிகள் ஒற்றுமையாக இருந்தாலும் பாடல்கள் வரிக்குவரி வேறுபட்டிருந்தன. இதனால் இரு பிரதிகளி லுள்ள பாடல்களையும் வேறுவேருக பிரசுரிக்க வேண்டியதாக இருந் தது.

இவ்வாறு தொகுக்கப்பட்ட பாடல்கள் எக்காலத்தவை என்று கேள்வி எழுப்புவர் என்பது எதிர்பார்க்கக்கூடியது; எம்மிட

கிடைத்த ஏட்டினில் திகதி, ஆண்டு இருக்கவில்லை. ஆனால் இப் பாட்டுக்களில் வரும் சமூகம் பண்பாட்டியல் முறைகளைக் கொண்டும் சொல் பிரயோகங்களையும் வரலாற்று அம்சங்களையும் கொண்டு ஓரளவு காலத்தை வகுத்துக்கொள்ள முடியும். இச்சிறு பதிப்புரையினில் விரிந்த விளக்கமளிக்க முடியவில்லை. வன்னியின் புவியியல், சமூக, பொருளாதார அம்சங்களை தந்த ஜே. பி லூயிஸ் அவர்களின் 'த மனுவல் ஒவ் வன்னி' என்னும் நூலில் வரும் குறிப்புக்களுடனும், வேறு வரலாற்று நூலுடனும் ஒப்புநோக்கிக் காலத்தைக் கணிக்கக் கூடியதாக இருக்கின்றது. இந்நூலில் வரும் சில பாடல்கள் போத்துக்கேய, ஒல்லாந்தர் காலத்தைச் சேர்ந்தவை என்பதற்கு ஆதாரங்கள் உண்டு.

வன்னிப் பிரதேசத்திற்கு பொதுவகையில் உரிமைபூண்ட இப் பாடல்களுக்கு ஆதாரமான ஏட்டுப்பிரதிகள், கையெழுத்துப்பிரதிகள் என்பன, குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்தே கிடைத்திருக்கின்றன. இத் தொகுப்பில் இடம்பெறு வன்னிப்பிரதேச மரபு வழிப்பாடல்களை இனிவரும் பதிப்புகளில் வெளிக்கொணருவதற்கு ஆயத்தமாக இருக்கின்றேன்.

III

இத் தொகுப்பினை நூல்வடிவில் வெளியிடுவதற்கு முன்வந்த முல்லை இலக்கிய வட்டத்தினருக்கு எனது முதல் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள வேண்டியவனாக இருக்கின்றேன். 'நாட்டுப் பாடல்' தொகுப்பாக பதிப்பிப்பதற்கு ஏட்டுப்பிரதிகளையும், கையெழுத்துப் பிரதிகளையும் தந்துதவிய திருவாளர்கள் புதுக்குடியிருப்பு எஸ். கணபதிப்பிள்ளை, எஸ். தம்பிப்பிள்ளை, முள்ளியவளை சி. உ. நடனசபாபதி, புதுக்குடியிருப்பு சி. ஆறுமுகம், குமுளமுனை சி. தெய்வேந்திரம்பிள்ளை ஆகியோருக்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர் நா. சுப்பிரமணிய ஐயர் அவர்களின் ஊடாக முள்ளியவளை ஆழ்வாப்பிள்ளை, திரு. கோணாமலை, திரு. வே. மயில்வாகனம், திரு. சி. சதாசிவம், திரு. கைலாசபிள்ளை, திரு. வி. பொன்னையா ஆகியோருக்கும் நன்றியுடையேன். மற்றும் அனுபவங்களைத் தந்து உதவிய முதியவர்களுக்கும் நன்றிகள். மே. செபஸ்தியாம்பிள்ளை, அளம்பில் என்ற முகவரியில் ஒரு எழுத்துப்பிரதி கிடைத்தது, அப் பிரதியை எழுதியவர் இறந்துவிட்டாரெனினும் அப்பிரதிமூலமாக புதுத்தகவல்களைப் பெறமுடிந்தது. யாவருக்கும் எனது நன்றிகள்.

தொகுக்கப்பட்ட பாடல்களை தட்டச்சில் பொறிக்கும் பணியில் அருந்துணையாற்றிய செ. தனபாலசிங்கம் (கல்வித் திணைக்களம்), திருமதி சாரதாதேவி சிவசுப்பிரமணியம் (உள்ளூராட்சி திணைக்களம்)

திரு. ஆ. ஆனந்தராஜா (மதிப்பீட்டுத் திணைக்களம்), செல்வி. திருப்பதி பசுபதி (தேசிய வீடமைப்புத் திணைக்களம்), திரு. எஸ். இராஜேந்திரம் (யாழ். கச்சேரி) ஆகியோருக்கு என் நெஞ்சம் நிறைந்த நன்றிகள்.

இந்நூல் பதிப்பு முயற்சியின்போது பதிப்பு ஆலோசகர்களாக உதவிபுரிந்த கலாநிதி அ. சண்முகதாஸ், முல்லைமணி வே. சுப்பிரமணியம், திரு. நா. சுப்பிரமணிய ஐயர் ஆகியோருக்கும், பதிப்புரை எழுதுவதற்கு ஆலோசனைகள் வழங்கிய பேராசிரியர் க. கைலாசபதி அவர்களுக்கும், அவ்வப்போது பல்வேறு உதவிகளை வழங்கிய செல்வி தமிழரசி சந்திரசேகரம் அவர்களுக்கும் நான் நன்றிக் கடப்பாடுடையேன்.

இந்நூலை அச்சேற்றும் பணியில் இரவு பகல் பாராது அயராது உழைத்த செட்டியார் அச்சக முகாமையாளர்கள் இ. சங்கர் அவர்களுக்கும், பேரம்பலம் செட்டியார் சோமசுந்தரம் அவர்களுக்கும், அச்சக ஊழியர்களுக்கும் என்றும் நன்றியுடையேன்.

புதுக்குடியிருப்பு.
முல்லைத்தீவு.
16-1-1980

— செ. மெற்ருஸ்மயில்

பொருளடக்கம்

பள்ளு

பண்டிப்பள்ளு

சீர்பொருந்தும் உலகினில் மானிடர்
  சென்ன லான விளைவை யளிக்க
ஊர்பொ ருந்திய பண்டிமேல் இன்னிசை
  ஓத ஐங்கர னேயருள் தாராய்
பேர்பொ ருந்திய மேருமலைதனில்
  பின்னில்லா தொரு கோட்டை ஒடித்தோன்
பார்பொ ருந்திய[1] பாரதந் தீட்டிய
  பண்ண வன்கடைக் கண்ணருள் வீரே. 1

என்ன மாய்வள்ளி தன்னைநி னைக்க
  இணங்கி டாதவன் ஏகமுன் னோடி
வண்ண மாமத யானையாய் வந்தருள்
  வாரணுபத மீதருள் வீரே. 2

பார்த்த னுகிய பக்தர்க்க ருளும்
  பராபரா ஒரு பா கங்கொண் டோனே
கர்த்தனேபரி சுத்தனே நித்தம்
  கருணை வைத்தென்னைக் காத்தருள் வீரே. 3

செந்தி மானகர் தன்னிலே வந்திடும்
  செல்வனே பிழை யாவும் பொறுத்து
சொந்தமாக அடிமைப் படுத்திடும்
  துய்யனே கதிரைக் குமரேசனே. 4

பின்னு மிவ்வுல குள்ளதெய் வங்களைப்
  பேணி என்தலை மேல்பதம் வைத்தேன்
முன்ன மேவினை தன்னைய சுற்றும்
  முதல்வ னேயைங் கரமுடை யோனே. 5

---

1 பொருத்திடப்

பன்றிகள் வருகை

களகளத்த சுரிதனிலே காலை யோட்டி
களத்ததோர் சூள்தடியை கையிலேந்தி[1]
குழை குழைத்த[2] மண்ணெடுத்து உண்டை[3] செய்து
குண்டெடுத்து கவுணில்வைத்துக் கொண்டு போக[4]
பளபளென நிலவெறிக்கப் பனியும்[5] தூறப்
பண்டியனூர் தறைக்குள்ளேவந்து பாய்ந்திட் டாரே. 6

தரு: தெந்தென தெந்தென தென்ன — தென
தெந்தென தெந்தென தென்ன.

அந்தியும் சந்தியு மறிந்தே — அதில்
சிந்தைகள் விந்தைகள்[6] புரிந்தே — பரும்
பந்துகள் போலவே உருண்டே — தனிப்
பண்டியு மோடி வந்ததுவே. 7

காலையும் மாலையும் பார்த்தே — கரு
மேகம் போலேகிளை சேர்த்தே[7] — சின்ன
பாலரும் தாய்களுமாகத் — தனிப்[8]
பண்டியுமோடி வந்ததுவே. 8

குட்டியும் தாய்களுமாக — குறங்
கொள்ளிபோல் கால்களும் நோக
ஒட்டிம றைந்துநின் றேதான்
உல்லாசப் பண்டியும் வந்ததுவே. 9

கச்சையைக் கட்டியி றுக்கி — தங்கள்
கைதனிற் சூள்தனை மினுக்கி
பட்சமதாகவே நடக்கும் — ஆளைப்
பாராமற் பண்டியும் வந்ததுவே[9]. 10

1 தோளில் வைத்து 2 பெருகுளத்தில்
3 உருண்டை 4 குறித்தே போட 5 மழையுந்
6 விந்தைகள் சிந்தைகள் 7 கூட்டி 8 பரும்
9 பக்கமதாகவே நடந்தே தனிப் - பாராமற் பண்டியும் வந்ததுவே

நாலுகால் சத்தமு மடக்கி — நாய்க்
குட்டிபோல் மேனியையொடுக்கி
கூளைவால் சொள்ளியை மினுக்கி — பண்டி
கூட்டத்தோர்[1] டோடிவந் ததுவே. 11

மூண்டு முளத் தின்கீழ்[2] வைத்த — ஆமை
முட்டையைச் சோதிக்கும் வித்தை
தோண்டிய ருந்திடும்[3] சொத்தை — சொண்டு
சூட்ச்சியப்[4] பண்டியும் வந்ததுவே. 12

பீரங்கி போற்சொத்தை கொண்டு — மண்ணைப்
பேர்த்திடும் வல்லமைகண்டு
ஆரம்பி யாமலே நடந்தே — ஆள்
பார்த்துப் பண்டியும் வந்ததுவே.[5] 13

நண்டுகள் குஞ்சுகள் போலே - பல
பெண்டுகள் பிள்ளைகள் கூடப்
பண்டுள்ள பேர்களும் சூழ[6] — தனிப்
பண்டியுமோடி வந்ததுவே. 14

காடுகள் எங்கணும் திரிந்தே — அதின்
காலுகள் நாலும் ஓய்ந்திடவே[7]
பாடுகள் தானது தெளிந்தே — தனிப்[8]
பண்டியுமோடி வந்ததுவே. 15

பொத்திக் கட்டிப் போட்ட பறிபோல் — பரும்
பூசனிக் காய்போல் வயிறும்
பத்துக் கட்டிபோட்ட பொதிபோல் — தனி
பண்டியுமோடி வந்ததுவே, 16

1 கூட்டமாய் 2 முளத்துக்குள் 3 அருந்திய
4 சூச்சியப்/சூத்திரப்
5 ஆரம்பியாமலே நின்று-அங்கே-ஆள் பார்த்துப் பண்டியும் வந்ததுவே
6 சூழ்ந்தே 7 ஓய்ந்தே 8 பரும்

பன்றி சொல்வது

தரு: தெந்தென்னான தெனதென்னான
தென தென்னான தெனதெனா

வனத்தை யறுத்து நெருப்பைக் கொளுத்தி
மரத்தின் தடிகள் பொறுக்கியே
வளைத்துவேலி நிரைத்துக் கறுத்த
வளர்நெல் விதைகள் தூவியே. 17

புனத்தில் அடரும் கரிகண்டுடனே
புள்ளி மான்பல சாதிக்குப்
பிரித்துக் கொடுத்துத் தனக்கு மிஞ்சிய
பொருள் கொண்டேகு மனிதரே. 18

இனத்திற் பெரிய சாதி நாங்கள்
பிழைக்க வழியில் லாமலே
எவர்க்கும் பெருமை கொடுக்கும் சென்னெல்[1]
விளைவு தறைக்குள் ஏகினோம். 19

பன்றி கண்ட கனவு

கனக்க விளைவிங் கிருக்கும் செய்தியை
நமக்கிங் கொருவ னாரைத்திடார்
கன்னி துயிலில்[2] கண்ட கனவைக்
களறக் கேளும் மனிதரே. 20

நாமள் நம்மடை[3] பெண்டிலும் பிள்ளையும்
நடுவ னத்திலே திரியக்கே[4]
நயந்து கவலைக் கிழங்கு கிண்டி
நாங்கள் தின்று திரியக்கே. 21

1 செந்நெல் 2 துயிலிலாள் 3 நானும் என்னுடைய 4 திரிந்துதான்

வானிலிருந்து மழைகள் பொளிய
    மாரி வெள்ளம் பெருகவும்[1]
வாழைக் கிளங்கும் பாலைப் பழமும்
    மகிழ்ந்து பொறுக்கித் தின்னக்கே. 22

கானிலிருந்து மயிலும் குயிலும்
    கலந்து ஏசல்[2] பாடவும்
காட்டுக் கிளியும் கூட்டுப் புருவும்[3]
    கடிபட் டொருசொற் கூறவும். 23

தேனிலினிய மனைவி யருண்டு
    திடுக்கிட் டெழுந்து என்னுடன்
செப்பிடப் பொருள் தேர்ந்து பார்த்துநான்
    தேவி யாருடன் கூறினேன். 24

கன்னல் தழையும் சென்னெல் விளையும்
    கால மென்றறி வாயெடி
காட்டுப் பிழைப்பைப் போட்டு மானிடர்
    நாட்டில் சென்றிட லாமடி. 25

மண்ணில் நமது கண்ணுக் கினிய
    மக்களைத் துரந்தலையெடி
வல்ல வயலில் செல்லப் பயிரில்[4]
    நெல்லருந்திட லாமடி. 26

பன்னு மடியு நுணியும் தறித்த[5]
    பனந்துண் டம்போ லளகியார்
பாவை யெனது ஆசைக் கிசைந்த
    பருத்த உரல்போ லிடையினுள். 27

---

1 பாயவே 2 கடிபட்டு 3 காட்டுப் புருவும் கூட்டுக்கிளியும
4 வன்ன வயலில் சன்னல் கதிரில் 5 தரித்த

சொன்ன படிநம்முடனே நம்மைச்
சூழ்ந்து[1] பண்டிகள் யாவரும்
சுறுக்கு விளையும் தறைக்குள் வந்தோம்
துரத்த வேண்டாம் மனிதரே.

வேறு

பன்றி குட்டிகளுக்குக் கூறும் அறிவுரை

தரு: தெந்தெனு தெந்தெனு தெந்தென்னுன
தென தெனு தெந்தென்ன தெந்தென்னுன.

நாடியேயொரு பிள்ளையில் லாமலே
நாள்கள் தோறுந்த[2] வங்கள் புரிந்தே
தேடியே யெங்கள் சிவலிங்கப் பிள்ளையார்
சிந்தை கூர்ந்தொரு மைந்தனைத் தந்தார். 29

காட்டி லோடிவி ளையாடு மாப்போல்
கடத்திநே ரத்தைப் போக்கவும்[3] வேண்டாம்
நாட்டில் மானிடர் செய்திடும் சென்னலலை
நாளும் தின்னக் கிடையாது மக்காள். 30

தாயை விட்டுப் பிரியவும் வேண்டாம்
தனியே தூரத்தே செல்லவும்[4] வேண்டாம்
வேசை மக்கள் உலாவியே வந்தால்
வெருட்டு வார்ஓடித் தப்பவும் மாட்டீர். 31

ஒட்டும் எச்சையு மாகத் துரத்துவான்
ஊண்டிச்[5] சூளினுல் ஊட்டி முறிப்பான்
குட்டி யென்றும னமிரங்கான் குறங்
கொள்ளி யாலுயிர் கொல்லுவன் மாக்காள் 32

1 சமத்தைச் சூழ்ந்து 2 முழுதும் 3 இடத்திலே நீங்கள் போகவும்
4 போகவும் / அகலவும் 5 சளட்டி

பெற்ற தாய்க்கும் பிதாவுக்கு மல்லது
    பிள்ளைச் செல்வம் பிறரறி வாரோ
உற்ற தோர்எலி தன்விளை யாட்டில்
    உறங்கும் பூனைக் குவப்பில்லைக் கண்டீர். 33

தாங்கொணுத பசியின் துயரால்
    தளைக்கும் சென்னெல் தறைக்குள்ளே வந்தோம்
எங்கும் புண்கொண்ட எருதின் துயர்[1] கண்டு
    இரங்குமோ சொல் அருந்திய காகம். 34

மீண்டும்[2] உங்கள் பசித்துய ராலே
    விலகி[3] மானிடர் கைவச மாஞல்
பாம்பின் வாயில் அகப்பட்ட தேரை
    பறிக்குமோ[4] வீண் அவத்த மென்மக்காள். 35

தூர மீதிலே கண்டாலு[5] மும்மை
    தொடர்ந்து[6] நீங்கள் அடர்ந்து நின்ருலும்
பாரா மல்லும்மைப் பெற்ற வயிறு
    பதைத்து[7] நெஞ்சம் தரிக்குமோ மக்காள். 36

எங்கள் தன்னை வளர்த்த தகப்பனும்
    ஈன்ற தாயும் பிறந்தவர் போஞல்[8]
வந்து கண்டது[9] முண்டோ நீர் மாண்டால்
    மறுத்து[10] வந்தென் மனத்துயர் மாற்ற[11]. 37

கொல்லை எங்கும் குத்திடிற் கால்கள்[12]
    குளம்பு நோகும் குழந்தைகள் நீங்கள்
சொல்லும் புத்தியைக்[13] கேட்டெங்களொடு
    தொடர்ந்து[14] சென்னெல் அருந்திடுவீரே. 38

---

1 துயரத்தை 2 தின்னும் 3 இங்கு 4 பறிக்கலாமோ கூறுங்காள் 5 காட்டினில் 6 துரந்து 7 பதைக்குது 8 பின்னன் 9 காண்பது 10 பேந்து 11 மாறுமோ 12 காலில் 13 சொன்னசொல்லை நீர் / சொல்லும் வார்த்தையைக் 14 துரந்து

பன்றி மனைவியை நோக்கிக் கூறுவது

தரு: தெந் தென தென்ன தென தென தென்ன
தென தெனத் தென்னத் தென தென்ன

வங்கன வடிவே என்கிளி மொளியே
வஞ்சியரே குண ரஞ்சிதமே
தன்படி எனது மைந்தர்கள் தனியே
வருவளி[1] நீ விடலாமோடி. 39

பண்புடனுனது பெருவயிறதுதான்
பருகிற நினைவது தானேடி
கண்படு மெனது மைந்தர்கள் தன்மேல்[2]
எள்ளளவும் தயை இல்லையடி. 40

ஒன்பது சிறுவா தன்படி தனியே
உயர்[3] பெற உறுபெறுயிறது தாள்
கண்படு மெனவே உன்கொடு மனதில்
கடுகளவுந் தயவில்லையடி. 41

கண்டவர் நம்மைப் பண்டிக னெனவே
களறிடு மொளியது சரியெனவே
நன்றிகளறியாக் சண்டி யுன்மனதை
நானது கண்டது தானடியே. 42

முன்பது போலென் மைந்தரை விலக
விடுகில் எனியுனை நொடிதனிலே
புண்படு முடலைப் பொருதிரு கூருய்
போடுவனிது நிசமோடறிவாய். 43

சந்திர ருடனே சூரியர் வரினும்
தரைதனி லெனது கண் மணிமகளைப்
பிந்திட விடுகினில் இன்குட லெடுத்து
போடுவனிது நிச மோடறிவாய். 44

---

1 வரவழி 2 மேலே - மேவி 3 துயர்

மந்திர மறிவார் தந்திர முடையார்
மனிதர்கள் எனவரு சிறுவர்கள் தான்
புந்தியி லுணரா மைந்தரை விலகிப்
போகவும்[4] நீவிடலா மோடி. 45

பொங்கிய தடமும்[1] சங்கிலி வலையும்
பொறிகளும் வைப்பார் வழிதனிலே
கங்குலை விடுவார் எங்களை வெல்லக்
கருவொடு தப்பப் பாருமடி 46

பாய்கிறவழி தனில் நேரிய கழுவை
பரிவோட டிப்பார் பாருமடி
மேவியே வந்து பாயினிலிடம் வலம்
மீதிலடர்ந்து பாயுமடி[3] 47

வருபெரு வழியாய் வாசலை விடுவார்
வானிடிபோலே இடர்தனை வைப்பார்
அதுவழி சுகமென் றேகிடில் நம்முடல்[2]
அம்மியி லிடிபொரு ளாகுமடி 48

ஓடியேவரினும் உயிர்பறி கெடினும்
ஓச்சை கொடுத்துக் கேளுமடி
ஓடியே வருகிற வழிதனில் நின்று
உன்னிரு விழியால் பாருமடி[5] 49

ஓர்மைகள் சிறிது யோசனை பெரிது
உறுதியிதா மென்று ஏகுமடி
உயர் வயல் முழுதும் பரவிய கதிரை
உகப் பொடு தின்போம் வாருமடி. 50

---

1 வடமும் 2 சுகமென ஏகிடி னுடலம் 3 பாயிற வழியிற் கூரிய-பரவிய டிப்பார் குழியிடுவார்-மேவியே வந்து பாயவ மெமமுடல் விழவு முழங்கால் முறியுமடி 4 வருவழி 5 வாடியே வரினும் வாசலில் நின்று - வருவழியதனுல் பாருமடி

வேறு

பன்றி குட்டிகளை பசியாற உண்ணும்படி கூறுவது

தரு! தன்னத் தன தன்னத் தன்னத்தன்னனதன்ன
தானதனனன தன்ன தனன.

என்னைத் தொடர்ந்து வந்து
செந்நெல் கதிர் தன்னைத் தேடி
சேறும் பாடு மாயுழக்கித்
தின்னுங்கோ மக்காள். 51

தண்ணிசுரி யென்றெண்ணுமல்
தாறு மாறுமாய்த் திரிந்து[1]
சாறி யுளக்கிப் பசி
யாறுங்கோ மக்காள். 52

ஓடி ஓடித் திரிந்தாலும்
உங்கள் பசி தீராது
ஓரிடத்தில் நின்று உளக்கித்
தின்னுங்கோ மக்காள். 53

சொல்லிச் சொல்லித் திரிந்தீரே
நெல்லுத்தின்ன வேணுமெண்டு
சோட்டை தீர நீங்கள் வாரிக்
கட்டுங்கோ மக்காள். 54

நெல்லுத் தின்னும் ஆசையினால்
பல்லுங் கில்லுப் பேர்ந்திடாமல்
பைய மெள்ள நன்னி நன்னித்
தின்னுங்கோ மக்காள். 55

1 தாறுமாறுய் உழக்கி

உண்ணத் தின்ன இல்லாமல்
வண்ணத் தொந்தி வாட்டங் கண்டு
உண்ணுணே யென் கண்ணுறக்கம்
இல்லையென் மக்காள்! 56

கள்ளத் தனம் பண்ணுமலே
மெள்ளத் தசை துன்னத் துன்ன
கண்ட மட்டும் நீங்கள் வாரிக்
கட்டுங் கோமக்காள். 57

காவல்காரன் வருகைபற்றி பன்றி குட்டிகளுக்கு எச்சரிக்கை

கண்ணுலே பார்த்துக் கொள்ளும்
காதொலியாய்க் கேட்டுக் கொள்ளும்
கட்டுச் சூள் காரன் வந்து
கிட்டவே போருன்[2,3]. 58

பார்த்துப் பதுங்கி நின்று
பண்டி நெல்லுந் தின்னுதென்டு
பாரச்சூள் காரன் வந்து
ஓடியே போருன். 59

வாருன் உலாத்துக்காரன்
வந்த வழி தப்பாமல்
வாருங்கோ வேலிக்கப்பால்[4]
ஓடுங்கோ மக்காள். 60

ஓடிப் போருேம் என்று சொல்லி
தூரத் தேநீர் போகவேண்டாம்
ஓரிடத்தில் நின்றவனைப்
பாருங்கோ மக்காள். 61

---

1 தொண்டை மட்டும் நீங்கள் நின்று தின்னுங்கோ மக்காள்
2 கண்ணுலே பார்த்துப் பார்த்து காதாலே கேட்டுக் கொண்டு கச்சைச் சூழ்க் காரன் வாரான் தின்னுங்கோ மக்காள் 3 கிட்டியே போவான்
4 வந்தவழி தன்னைவிட்டு வாருங்கோ முன் வேலிக்கப்பால்

புறங் காட்டிப் போனபின்பு
திறங் காட்டிச் சென்று நீங்கள்
பின்னே முன்னே பாராமல்[1]
தின்னுங்கோ மக்காள். 62

துப்பாக்கிக் காரன் வந்து
சூத்திர மாய்ப் பதுங்குவான்
சொல்லும்வாடைக் காற்றுக்[2] கண்டு
ஓடுங்கோ மக்காள். 63

மானிடவர் செய்த செய்கை
யாவருக்கும் பங்கதாகும்
வன்னிமை இல்லாமல் நின்று
தின்னுங்கோ மக்காள். 64

வெட்டிக் கட்டிச் சூடு வைத்தால்
எட்டிப்பார்க்க முடியாது
கெட்டித்தனமாக நின்று
தின்னுங்கோ மக்காள்[3]. 65

செய்தவர்க்கு நோவல்லாது
திண்டவர்க்குத் தெண்டமில்லை
செல்லுமட்டும் நீர்செலுத்தித்
தின்னுங்கோ மக்காள். 66

கெட்டிக் காரன் காவலிலே
சுட்டிப்பாயே தூங்குகிறுன்
கெறுவமாய் நின்றுளக்கித்
தின்னுங் கோமக்காள். 67

1 செல்லுமட்டும் நீர் செலுத்தி 2 காற்று வாடை
3 வேண்டுமட்டும் நீங்கள் திண்டு தேறுங்கோ மக்காள்

பெண்டுகள் உலாவி வந்தால்
கண்டு குறிப்பாய்த் துரத்தும்
பேசாமல் ஓடுவார்கள்
கூசாமல் தின்னும். 68

வண்டராம் சிறிது பேர்கள்
கொட்டனும் கைக் கொண்டு செல்வார்
வாறது அசுகை கண்டு
ஓடுங்கோ மக்காள். 69

பொழுதோ விடியுதாகும்
பூமிவெளிப் பாகுதிங்கே[1]
பேசாமல் வேலிக்கப்பால்
ஓடுங்கோ[2] மக்காள். 70

பத்தைக் குள்ளே போய்க்கிடந்து
எப்போ வெய்யில் சாயுதெண்டு
பாங்குடனே தான்கிடந்து[3]
தூங்குங்கோ மக்காள். 71

தூங்கும் போது நீங்கள் இந்தத்
தொல்லுலகில் மானிடர்க்குச்
சோபனங்கள் சொல்லி வாழ்த்தித்
தூங்குங்கோ மக்காள்[4,5]. 72

பாங்குடன் அருந்து சென்னெல்
மாடுகண்டு நாடு நகர்
பாக்கியம் உண்டாக வென்று
பாடுங்கோ மக்காள். 73

1 பாகுதிப்போ 2 வாருங்கோ
3 வெப்பவெயில் சாயுமட்டும் பாங்குடனே போய் மறைந்து
4 வாழ்த்துங்கோ மக்காள் 5 நன்றாய் வாழ்த்தித் தூங்குங்கோ மக்காள்

மக்கள் தழைக்க வேண்டும்[1]
    மாதா பிதா வாழ வேண்டும்[2]
வஞ்சக மின்றிச் சிவனைக்
    கெஞ்சுங்கோ மக்காள். 74

துக்கம் அகல வென்றும்
    துன்பந் துயர்நீங்க வென்றும்
சோறு பொலி வாக வென்றும்
    செப்புங்கோ மக்காள்[3]. 75

வானமும் புவி கடலும்
    வல்ல படை யெவ்வுயிரும்
வாழ்வு பெற வேணுமென்றும்
    வாழ்த்துங்கோ மக்காள். 76

ஞானமும் பலகலையும்
    நல்லோரும் இந் நிலத்தில்
நாள்தோறும் வாழவென்று
    வாழ்த்துங்கோ மக்காள். 77

சென்னெல் விளைவாக வென்றும்
    தேசம் செளிப்பாக வென்றும்
சேயிளைகற் புய்ய வென்றும்
    வாழ்த்துங்கோ மக்காள்[4]. 78

பாடும் தமிள் வல்லோரும்
    பாராட்டிக் கேட்பவரும்
நீடுழி வாழ்கவென்று
    வாழ்த்துங்கோ மக்காள்[5]. 79

---

1 தழைய வென்றும்   2 வென்றும்
3 துக்கம் அகல வென்றும் சோறு மலிவாக வென்றும்
துன்பந் துயர் நீங்கவென்றும் சொல்லுங்கோ மக்காள்
4 தேடுந் தவங்கள் பலதேச நெறி நாமுமுள்ளே
சேயிளை கற்புய்ய வென்று செப்புங்கோ மக்காள்
5 பாரேளும் வாழவரம் கேளுங்கோ மக்காள்

குருவிப்பள்ளு

சீருலாவிய காவேரி நாட்டில்
சிறக்குஞ் செந்நெல்[2] உறந்தின்ன எண்ணி
காருலாவு தினையன் குருவி
கதித்த தூக்கணை யன்கிளிக் கூட்டம்
சேருமா மயில் பட்சி சிறந்து
திருந்தி நெஞ்சில் நினைத்து வருமாம். 1

வானின் மேகஞ் சிறந்து கதிரவன்
வந்து தோன்றிடும் வேளை யறிந்து
வானமாக யுயர்ந்த மரந்தனில்[1]
வன்மையாகிய கூட்டிலிருந்து
தானதான தனந்தன தா வென்று
சங்கீதம் பாடித் தாளம் மிசைத்து
ஈனமானிடர் செய்திடும் சென்னெலை[2]
இசைந்து கொண்டு பறந்து வருமாம். 2

வாறபோது மனஞ் சலிப்பாக
வருந்தும் பேட்டுக் குருவி இசைக்கும்
செல்வமாகிய குஞ்சதை விட்டு நாம்
சிறந்த சென்னெல் அருந்திடலாமோ
அல்லக் காணும் மனைவியரே கேளும்
ஆசை மைந்தரை நாம் கொண்டு சென்றால்
வல்லமானிடர் கல்லாலெறிந்தால்
மனத்தென் போடு பறக்கவு மாட்டோம். 3

செல்வமாகிய குஞ்சு மிளந்து
சிறக்குங் கூடும் வெறுத்திடலாமே
கொல்வர் மானிடர் சண்டாளர் காணில்
குணமல்ல எந்தன் கோதையே கேளும்
பத்தை மேல்பருந் தொண்டு துளைத்து
பரந்து வைத்து விரைந்து பிடிப்பார்
சுத்தமான மரத்தினிற் கண்ணி
தொடுப்பன் பாவி அகப்பட்டுக் கொள்வீர். 4

---

1 மரத்தில் 2 செந்நெல்

சுண்டு வில்லினி லுண்டையை வைத்து
சுட்டிப் பாகவே பொட்டென எய்வான்
துண்டந் துண்டமாய் அம்பினா லெய்தவன்
சுட்டுத் தின்பனே பச்சடி யாக
ஆமடி உனக்கின மிரக்கம்
அறிவுமில்லை பறவை யென்றேதான். 5

தட்டி ஓட்டி அவமடிப் பாயுயிர்
தட்டு வான்தலை தப்பிட லாமோ
கெட்டி கெட்டி உன்பெண் புத்தியோடி[1]
கெடுக்க வோநீ குடித்தலைப் பட்டாய்
சில்லென்றே நாம் இரைந்து பறந்து
சிறகு மோந்து பறக்கிறோம் நாங்கள்
பச்சை பாலன் குருகு குழந்தை
பறக்கு மோவீணி லிறக்குமோ போடி
கொச்சை மக்களி றந்தா லுனது
குலமும் போய்வெறுங் கூடது வாமே. 6

பட்டபாடு வீணாகும் புவியோர்
பளிப்பரே பேசி இளிப்பரே போடி
வட்ட மிட்டுப் பறந்து பனிமயம்
மாற முன்னம்போ யாறும் பசியை
கங்குல் காலம் முளித்த கயித்தியில்
கண்ணுறங் குவான் திண்ணென ஓடும்
திக்கட் சொண்டா லரிசியை வாரியே
சொண்டிற் கொணர்ந்து மக்களுக் கீவோம். 7

வன்ன வன்ன நற்பட்சிகள் வந்து
வயல்கள் தோறும் நிரவுது வாடி
கொங்கு லங்[2]கிளி மாமயில் செங்கால்
குருவிக் கூட்டம் வருகுது வாடி
ஆகடியன் தினையன் புருவுடன்
அம்முதே யிருந் திம்மன வாடி[3]. 8

1 போடி 2 கோகிலம் 3 அன்ன மேயிருந் துண்ணுவோம் வாடி

குஞ்சுப் பட்சி பசித்துத் தவிக்குது
கொத்தி வாரும் சுறுக்கினில் நெல்லை
இந்த மாதம் முடிந்தாலு மக்கினி
யெங்குங் கிட்டாது செங்கதிர் நெல்லு
பண்டி தின்னிடும்[1] கட்டையில் நெல்லாம்
பறந்து பத்தை யொதுக்கிலிருந்து
குண்டியாலே பிறப்பிடத் தின்று
குஞ்சுக்குக் கொண்டு செல்லுவோம் வாடி. 9

வெய்யி லாகிம தியமு மாகுது
மேவிக் கூட்டி லிராகம் பயின்று
பய்ய வந்து பரவி நெருங்கிட
பரவு வோம்பல கூட்டமாய் வாரும்
கண்ட கண்ட விடங்களிற் சென்று
கலந்து தின்பது காரிய மல்ல
திண்டடம் வெளி கண்டிட வேணும்
சிறக்க வேநம் மினத்தொடு வாரும். 10

இந்தாடி நெல்லு நாங்களும் தின்று
ஏகொ ணுதுநீ ரிவ்விடம் வாரும்
வந்து நான் சொன்டி லுன்னையே தொத்தி
வருத்தி யாகாரன் வாங்கிடுவேன்
கூட்டிலில் வந்து ராகங்கள் பாட்டுகள்[2]
கிளப்பி[3] யோசை யெழுப்பிய[4] போது
கேட்டுப் பேட்டுக் குருவி துயரால்
கெட்ட[5] தோசை கிளந்திடு மென்ன. 11

பழுத்த நெல்லுப் பளுப்பென்ற றியாமல்
பச்சை நெல்லென்று பாராம லுண்டேன்
அந்தச் சொண்டு கெலித்தது நெல்லும்
அதினு லிராக மிசைக்கக் கூடாதே
பளுத்த நெல்லும் பளுப்பென்ற றியாமல்
பாவை மார்களை பார்த்திருந்தீரோ
பாவைஅல்ல யென்பைங் கொடியாளே
பறந்து நான்போ யிருக்கும் சமயம்[6]. 12

1 தின்றிடும் 2 பாடி 3 கிளம்பி 4 குளப்பிய 5 கேட்ட 6 யிருக்குக்கே

வீறிட்டாளவன் தன்னையே பாாத்து நான்
    வீசமாய்க் கொத்தினேன் மயிலாளே[1]
பாரிலுன்னைப் புணர்ந்த சடலம்
    பரத்தை மாருடன் சேருமோ போடி
சாயும் வெய்யிலும் நேரமு மாகுது
    வாரும் சென்னெல் தறைதனில் செல்வோம்
ஆசையாலே யதட்டி யா யா யென்பான்
    அதற்கு நீ சற்று மஞ்சவும் வேண்டாம். 13

கோசு போகாமல் நாளொரு கொத்தாய்
    கொறியடி யென்னுடன் சரியாய் நீயும்
இந்த நெல்லுக்கொ றிக்கக்கூ டாது
    எழும்படிசிறு சம்பாக கொறிப்போம்[2]
அந்த நெல்லுப்ப சியடங் காது
    அகலடி பச்சைப் பாலடை நெல்லில்
பாலடையும் பருவ மிதுநான்
    பருக்கத் தின்று கொளுத்திடும் பெண்ணே. 14

கொக்குடன்க ரடிநோய்கள் கூடநெருங் கும்போது
    விக்கினேசு பரனுக்குப் புக்கைக்கு நேர்ந்தோம்[3]
வானத்தில் மழையில்லாமல் வாடும்பயிர் தன்னைக்கண்டு
    வானவர்கோ இந்திரற்கும் பூசை முடித்தோம்
இப்படியக் குபகாரம் பட்சிசாதி நாங்கள் செய்தோம்
    எள்ளவும் தயவில்லை யிவள் மனதில்
சித்திரமாய்க் கோளி கத்தி நந்தவனமாய் பொளுது
    சேரவிருளாகு தினியேகு வோம் வாரும். 15

1 வீசமாக க்திர் கொத்தினேன் பெண்ணே

2 சம்பாநெல் லுத்தின்போம் 3 கொடுத்தோம்

சோபனம்

சோபஞ்சோ பனமெங்கள் துய்யமக்க ளேநீங்கள்
சோபனங்கள் சொல்லிவிழி துஞ்சுங்கோ மக்காள்
துஞ்சியகண் தூங்கமுன்னம் சொண்டிலிரை கொண்டுவந்தோம்
சோபனங்கள் சொல்லிவிழி துஞ்சுங்கோ மக்காள்.

கோயிலென்ற கோயிலெல்லாம் கும்பிட்ட நாங்கள்
குஞ்சுதர வேணுமென்று நாங்கள் நின்றோமே
சொல்லமுடி யாதுதுயர் நாங்கள்பட்ட பாடுகளால்
சோபனங்கள் சொல்லிப்பசி யாறுங்கோ மக்காள்.

எத்தவசிகட்கும் நாங்கள் பச்சைமடி தன்னிலிட்டு
என்னபாடு பட்டுயுங்கள் தன்னைப் பெற்றது
சற்றே தவசு செய்து சங்கரன்மன மிரங்கி
தந்தமடிப் பிச்சை நீங்கள் தன்னுலோ மக்காள்
உற்றமொழி சொல்லுகிறேன் யோவியமே கேளுங்கடி.

சிந்து

பிள்ளையார் சிந்து

வீசுகர மேகநிற வேதநுத லான்கருணை
 மேவுமத வரண விநாயக விநோத
கூசுதமிழ் சேர்முதல் கோமளவள்ளிக் கிளைய
 குஞ்சுமத ழைக்கிளைய குஞ்சரமு கத்தோன்
பேசுதிக ளுன்கதைகள் ளிசைபாடு தற்குமொரு
 பிழைகள் வராமலே கார்பேளை வயிரு
கொம்பிற் சிறந்தகனி பால்பருப் பெள்ளுருண்டை
 குடவயிறு நிறையவரு குஞ்சர முகத்தோன். 1

உம்பற்கும் மெட்டாத ஒருமருப் பவனே
 உலகுபதி னாலையும் ஒன்றாகி நின்றாய்
அம்பொற் றடங்கிரி யிலேபாரதம் தன்னை
 அழகுபெற வேஎழுது மானைமுக வேனே
தம்பிக்கு வந்துதவு தும்பிக்கை யோனே
 தாடானை மீதேறி வரவேணும் முருகா. 2

கொம்பொன்று குடவயிறு கொண்டபுரி நூலொன்று
 கோவர்ணமொடு பொற்பட்டதுவும் ஏந்தி[1]
கம்பொன்று கையில் கமண்டலமும் மொன்று
 காதுதனி லேகவிஷச குண்டலமி ரண்டு
நம்பொன்று விளியொன்று நானுனை நினைந்தேன்
 நாராயண சுவாமிக்கு நல்மருகன் நீரே
வம்பநெதிர் கொம்பனே வள்ளியைத் தம்பிக்கு
 வாரணத்தாலே வதை செய்யலாமோ[2]. 3

---

1 வர்ணப்பட்டொன்று கைதனிலே ஏந்தி 2 வதுவை செய்யலாமோ

மட்டுப் படாதடி யார்உனை வணங்க
வலம்வந்து செங்கைதனில் மாங்கனியை வாங்கி
முட்டுப் படுத்தியே முருகர்முன் வள்ளியை
மோகனம் செய்வித்த முத்தமிழ்க் கரசே
அட்டத்தில் முப்புரத் தோர்களை எரித்தாய்
அரநேறு தேர்புரவி அச்சறுத் தாயே
கொட்டுக் கிணற்றேடியில் வாழுமைங் கரனே
குடவயிற்ற னேகுமாரர் முன்வந்த கோவே; 4

எண்ணரிய வேதமுத லாகிநின் றவனே
ஈசருடை திருமடியில் இறைவர் திருமகனே
வெண்ணெயுட னேமண்ணை யுண்டமால் மருகனே
வேடர்முன் வேங்கையாய் நின்றவன் தமயன்
கண்ணுதல் படைத்தசக் கிரவான முனக்கென்று
சகலகலை தனில்உதவு தந்திமா முகனே
விண்ணவர்கள் துணைவனே விக்கினே சுபரனே
விநயகனை மனதிலுன்ன வினைஅடவி போமோ. 5

பரமசிவன் சிந்து

நாவியும் கீரியும் நுழையாத குருமனில்
நாங்கள் நுழைந்தொரு குறும்பொல்லு[1] வெட்டி
பொல்லுநல்ல பொல்லு இதுவெள்ளி கட்டிய பொல்லு
மதியாமல் வாறவரை மட்டடக்கும் பொல்லு
எண்ணமுள்ள பொல்லுஇது எதிரேறு பொல்லு
ஏழை அடியார்களை யீடேற்றும் பொல்லு
வண்ணமுள்ள பொல்லுஇது வரிசையுள்ள பொல்லு
வாவென்று அழைத்தாலும் மகிழ்ந்தோடி வருமே. 1

1 கம்பு

கூளா வெடியாம் குளிர்ந்த நிளலாம்
குளக்கட்டு நீளம் புளியம் நிளலாம்
ஆரடா எந்தன் புளியடி தன்னில்
நாங்கள்தான் அஞ்சாறு[1] சிந்துகவி பாடிகள்
நாயைப் பிடித்ததின் தெள்ளே யுறத்து
நல்லதோர் ஈட்டி வாள் கைதனிலெடுத்து
பாசக் கயிறுருவிப் பண்டிக்கு நாய்விட்ட
பரம சிவ னையனைப் பாடியே வாருேம். 2

அலைகடல் கடைந்தமிர்த நஞ்சையள்ளி யுண்ட
அன்றுதலை ஓடுதனிலே இரந் துண்டாய்
புலையனுடை எச்சிலை இனிதென்று கந்தாய்
புல்லரவர் வில்லினுல் யானடிகள்[2] பட்டாய்
தலையிலே மாறுசடை தன்னைத் தரித்தாய்
தையலுக் காகவே தூது நடந்தாய்
மலைமகளை ஒருபாக மிடமீதில் வைத்தாய்[3]
வள்ளலே வாரிவன நாதன்எனவரு தம்பிரானே[4]. 3

நாகதம்பிரான் சிந்து

வாசுவுடனே சேடன் வாதாடி நின்ருன்
மகா மேரு தன்னைப் படத்தால் மறைத்தாய்
கூசுபுனல் வாயுவின் கோபம் பொருமலே
கொடுமுடிகள் சிதறநின் றலைபொருத நேரம்
வீசுபுகள்[5] ஈசரும் சந்தோசம் ஆகி
பேரரவின் ஓர்படம் தாள்தனை ஒதுக்கி
நீடுபுகழ் சேடனென நின்ற நாயகமே
நீர்தங்கு வேணுவில் நாக நயினுரே. 1

1 ஐந்தாறு 2 வில்விசயன் கையினுல் நீயடிகள்
3 இடபாக சடைமீதில் வைக்கின்ற 4 வாகுபுரி வாழு தம்பிரானே 5 பேசுபுகழ்

ஆயனுர்க் கன்றுநீ பாசமு மானுய்
    அன்றுநீ பாதாள மூடுவளி சென்ருய்
ஈசனுர் உறைகின்ற தில்லையின் மீதே
    இயபாக வேநடங் கொண்டு சென்ருயே
நாயகன் வேணுவிலுறை நாகரா சாவே[1]
    நற்பொருளை ஒருநாளும் நாவிலய ரோமே. 2

கோணமலை நாதருக் காபரண மானுய்
    கோவிந்த நாதர்க்குப் பாசமு மானுய்[2]
வேணுவில் உறைபதிக மானதுவும் நீயே
    வெற்றிப் புதுமையும்[3] மெய்கதியும் நீயே
காணுத கண்டுகா லிக்கிடறு வாரமல்
    காக்கவும் வல்லநீர் காத்தருள வேணும்[4]
நாணுத வினைமிருகம் காணுமற் போகவும்
    நன்மை தாரும்நாக தம்பிரானுரே. 3

பெருத்த தவில் முரசோடு பேரான மத்தளம்
    பேதையர்கள் வெண்சா மரைகவரி வீச
வருத்தமென் றெண்ணியே மானிடர் தமக்கு
    மாநிலம் வாளவே வந்தவ தரித்தாய்
பெருத்துவரும் நோயையும் பேயையும் அகற்றுவீர்
    பேதையர்க் கென்று பிணி பாங்காகத் தீர்த்தாய்[5]
பருத்திபுலம் வாளவரும் நாகதம் பிரானே
    பாதமலர் ஒருபொழுதும் நாவில் அயரோமே. 4

நனையாத தவிலுண்டு தம்பட்ட முண்டு
    நல்விருது குளலுண்டு நற்சங்கு முண்டு
நினைவான துண்டு பனி நீரான துண்டு
    நெற்றியில் நிறைந்ததோர் சந்தணமும் உண்டு
சுனையான துண்டுநல்ல தூயமலர்[6] உண்டு
    சுற்றிவினை யாடநல்ல பொற்கோவி லுண்டு[7]
மனையான துண்டுநல்ல மாடுண்டு கண்டுண்டு
    வன்னிநயி னுநண்டு மானிடர் தமக்கே. 5

1 நாகநயினுரே   2 சாமிக்கு பாசுபத மானுய்   3 வெற்றியுரு புதுமையோடு
4 வாயே   5 பேதையர்கள் கெற்ப நோய் பாங்காய கற்றுவீர்
6 பொற்கோவில்   7 கண்டுகட்கு

முருகையன் சிந்து

மட்டுருக் காலே அரு வாளைத் தட்டி[1]
    மாவிலங் கம்பிடி தன்னி லிறிக்கி
வெட்டும் பிடியை சிறக்கவே வெட்டி
    வெள்ளித் தகட்டால் விரல்கூட்ட மிட்டு
நல்லைநகர் வாளவரு கந்த சுவாமியை
    நன்ருய் நினைந்து கையில் அருவா ளெடுத்து
தொல்லுலகு கயிலையூர் வாளிளந் தாரிமார்
    தோராமல் நிலைஅருவி விளையாடி னூரே. 1

ஆத்திலே தண்ணீர் அலைந்துவரு மாப்போல்
    அதன்பிறகே புள்ளுத் துரந்துவரு மாப்போல்
சேத்திலே தண்ணீர்[2] தெளிந்துவரு மாப்போல்
    செங்கவள நாரையினம் மேய்ந்துவரு மாப்போல்
வன்னவரி[3] வேங்கை மதத்துவரு மாப்போல்
    வாதரா கன்காற்று மோதிவரு மாப்போல்
வீட்டிலே கடிநாய் வெருண்டுவரு மாப்போல்
    சீனப்புலி தண்டையை முறுக்கிவரு மாப்போல்
நாட்டிலே வாழ்கின்ற நல்லிளந் தாரிமார்
    நணுகாமல் நிலைஅருவி விளையாடி னூரே. 2

கரியதொரு விறுமனும் வைகாளி அப்பரும்
    கஞ்சவீர பத்திரரும் யாப்பை வன்னியரும்[4]
அறுஅறு பூதனும் ஐயனும் காளியும்
    அம்புவியு லுள்ளவோர் தெய்வமத் தனையும்
குபேரன்[5] அறுமுகக் குமரவேலாயுதன்
    குன்றுதைத் குறமகன் வள்ளிபங் காளன்
முருகன் முள்ளியவளைக் கலியாண வேலவரை
    முதல்வனைச் சேவிக்க முழுதும் வந்தனரே. 3

1 செய்து   2 வெள்ளம்   3 காட்டிலே   4 கன்னியரும்   5 குருபரன்

பொன்னி ளுலேபூனை நூல்பின் குடும்பியும்
    பொருதுவிளை யாடநல்ல வேலும் சிலம்பும்
என்னுனே எந்தன் நாவுக்குள் அரசே
    எந்தன்வினை தீர்க்கவரு வள்ளி மணவாளா
உன்னும மேசொல்லி ஓதுமடி யார்க்கு
    ஒரு நொடியில் மயிலேறி வரவேணும் முருகா
பொன்னுன வள்ளிதெய் வானை மணவாளா
    புவியிலுயிர்[1] யாவையும் காத்தரு ளுவாயே. 4

அம்மன் சிந்து

திருமருவு கயிலாய மலைதனில் திலவுபுனை
    சிவனுமுமை யவருமொரு சிங்கா சனத்தில்
மருவும்பொழுது உமையவள் எழுந்தடி பணிந்து
    வன்னலே மதுரைநகர் வந்தமிழ் மாறன்
வெருவுநுதலின் லாமலே யவர்மனதில் விளிகண்டு
    வெட்கினே னென்றுதுயர் விடையக லுமென்றூர்
தருமவுரு மீதனித்[2] கண்டிங்கே தானும்
    தையலுன் மனநினைவு தவமுயலு மென்றூர் 1

என்றபனி விடை கொண்டு கையிலலையங் கிரிநின்று
    இறங்கியே விண்ணுலோக கந்தனி லிருந்து
துண்டுமின் டினகொடிய கணிதிநித மும்வளுதி
    குதுமர வின்கணியி லேயுறைந் ததனுல்
அண்டுமா யோதனற்க் கொண்டருளி தன்வளுதி
    இனியமறை நுதலிவ்விளி தனைமறைத் ததுவே 2

1 புவியிலும்   2 தருமருவு மீசனும்

தவமனைய நுதலின்விளி மதியலறலை வளுதி
    தன்கையில் நற்கணித னைக்கொடு நடந்து
நவமணிக ளுமொரு பேளையில் அடைத்து
    நடுவிலும் முடிவைத் தந்தநாள் விட்டு
பவனமற மற்றநா ளில்அதைத் துறந்தே வளுதி
    பார்த்தவுட னேமதலை யாய்க்குறவை கண்டு
கவனமொடு கெணிதரை அழைத்தென்ன மாயம்
    கட்டுரை யெனக் கெணிதர் கட்டுரைத் தனரே 3

கட்டளது தருமதலை தன்னுலுன் அரசுரிமை
    கனநெதியும் நிதியுமுன் கனமதுரை நகரும்
கெட்டிடுமெனக் கெணிதர் சொன்னதை அறிந்து
    கிரணிமணி வகைபசும் பொன்னுற் சமைத்த
பொட்டகமதிற் படவு செய்துநதி வையகம்
    பேராத்தில் விடவுமந்த நீரோட்டம் வளியே
மட்டற மிதந்துசுளி யலைகடலில் தோற்றி
    மானுகர் மகளாக வளருகின்ற நாளையில் 4

வலியகரு விடநாகம் மணிபுனை வதென்றே
    தானுறு தானுதயாய் ஊர்வளுதி யார் கொண்டு
மீகாமனை அழைத்துக் கனவரிசை செய்தாய்
    ... ...
செய்துனது கப்பல்கள் கொடுத்த வரைவிட்டு
    செத்தவர் பிழைக்கவர உத்தமி அளித்தாய்
எய்திநர கிற்புகுந்த பேர்களை வருக்கும்
    ஈடளிவில் லாமல்வர நாகமலை சென்றுய் 5

பையரவனைத் தொளுது பத்தியுடன் நாகம்
    பாலிக்க வேண்டியவ ரசலித்து நிண்டார்
தூய்யபுகள் வளுதிமுன் வைத்திட மகிந்து
    சொல்வரிசை மீகாம னுக்கருளி விட்டால்
விட்டவுட னேசெய்வித் திலகு மாசாத்தர்
    சிறுவனுய் கோவலற் கேமண முடித்தார்
மட்டவிள் விருதுகுளல் மாலுமெனவே தான்
    வையகம் அன்றுபகல் வாழ்ந்திருந் தனரே. 6

வாள்பொழுது சோளன்முன் ஞடகம் நடக்க
மாதவி தன்ஞவிமனது கோவலர் மயங்கி
நாளோரிர வைக்கோரா யிரத்தெண் களஞ்சுபொன்
நல்கியுள்ள கைபொருள் பத்தற் கிளர்ந்து
வாழரவு மணியிடு சிலம்பாயி னும்விற்க
வாங்குவா ரில்லையென மதுரைநகர் சென்ருர். 7

பொன்னே மணிவிளக்கே புருடராகமே
பொதுவர்குல நாயகியே[1] பொற்கொடியே
அன்னே தவமே அறத்தின் பயனே
அடைந்தவர்[2] தமக்குதவு மாருயிர்த் துணையே
மின்னேர் பசும்பொற்சி லம்புதனை[3]யான் கொண்டு
வெற்றிமது ராபுரியில் விற்றுவருவளவும்
தென்னே ரிதனதங்கு[4] வார்குளற் கண்ணகை
சேய்யிளை[5] உந்தன டைக்கலம் நானே. 8

தேனுகி அமுதாகி மினியதொரு[6] பாலாகி
தெய்வப்[7] பெருஞ்செல்வ மாயுதங்களுக்கு
ஊனுகி உயிராகி உயர்வாகி ஆயர்குலம்
ஒளியாகி வெளியாகி நின்றஓ வியமே
மாஞகர் சமைப்பித்த கனகச் சிலம்பை
வழுதி மதுராபுரியில் விற்றுவரு மளவும்
காஞறு மாலைக் கனங்குளல் எண்கின்ற
கணணகை உந்த னடைக்கலம் தானே. 9

முன்ஞளி லேசோளன் முன்ஞடல் கண்டபின்
மொய்குழல் மாதவிக் கன்பான நாளில்
பொன்ஞ யிரத்தெண் களஞ்சுதனை யான்கொண்டு
பூதல மதிக்கவே தான்வந்த தன்பின்
என்ஞடு மென்நகரும் விட்டிங்கு வந்தோம்
எங்களுக் கின்ப மிடைக்குல மாதே
மின்ஞரு மென்குளற் கண்ணகை என்கின்ற
மெல்லிய லுந்தான டைக்கல மேகாண். 10

1 நாயகமே
2 அடைந்தவர்
3 மின்னேரிலட்டியாகப் பொற்காலில் சிலம்பதனை
4 ரணிதங்கு
5 செய்யிழை
6 இனிதாகின்
7 செல்வப்

விறலெயினர் கொடுமறவர் வனமருவுகா னவர்கள்
வெற்றிபுனை குலவேடர்[1] மற்றுமுள சாதி
குறவரொடு புலிகரடி மதகரிக ளினமொடு[2]
கொலை அடைவி வளிநடந்[3] திங்குநாம் வந்தோம்
இறைவணிகர் புகல்வளுதி தமிழ்மதுரா புரியிலே[4]
இதனை விலை பேசியே[5] விற்றவரு மளவும்
நறைமகளும் வனயமலர்[6] மருவுகுளற் கண்ணகை
நண்ணுத லுந்தன டைக்கல மேகாண். 11

வெற்றிபுகள் மீகாம ஞயிரம் கப்பல்
வேலைமிசை கொண்டோடி வெடியரசத்துடனே
அன்றுபடை பொருதவன் தன்படை தொலைத்தோர்
அரவின்மணி அதனை அவன் வாங்கியே வரவே
நன்றியுடனே சமைத்தபொற் சிலம்பை
நான்மாறஞ் கடலில் விற்றுவருமளவும்
என்றுமுசி யாமலே இன்குளற் கண்ணகை
எப்போது முந்தன் னடைக்கலமே காண். 12

காராளி மீதிலே செங்கண் ஆயின்றவன்
கண்டுகொடு நின்று விளாங்கனி எறிந்தவன்
தாரா தலங்களோ ரடியால ளந்தவன்
தயிரோடு பால்வெண்ணை திருடிஅடி யுண்டவன்
சீராரும் வானரக்கன் முடிகள் பத்தும்
சிதறவே மண்ணில் விளக்கணை தொடுத்தோன்
நாராயணனை வளர்த்த நா யகியே
நண்ணுத லுந்தன் அடைக்கலம் தானே. 13

வீடுதனிலே கவச மானதுதெ ரிந்து
மேவுகுள லூதியே ஆயர்மனை தோறும்
மாடுதனிலே சுரபி யானது தெரிந்து
வந்துசில கன்று மடியமுது செய்து
காட்டியதன் கன்றைக் கயிற்று லணைத்து
நாலுகா லுக்கும் நடுவே முளந்தாள்
பாடியதன் பாலைக் கறந்துவா என்கின்ற
பைங்கொடி உந்த னடைக்கலம் தானே. 14

1 சிலவேடர் 2 ளென்னும் 3 வளிகடன்
4 புகழ்வழுதி மதுரா அளவுதனிலே 5 கூறியே 6 வசைமுலை

நன்ருகவே இருந்த நாச்சிமார் நால்வரும்
நல்லுயி ரானதோர் நல்மாமி யாரும்
ஒன்ருலும் வேறுகுறை இல்லை உமக்கு
உள்ளமது தன்னிலே கவலை நினையாதே
சென்ரு ரகத்துட னேஇப் பொளுது நீரும்
சிலம்பையா பாரம் செய்து நீர்வாரும்
குன்ருரு மென்முலைக் கொம்பனை யாரை
குறைகள்வா ராமலே கொண்டிருப்போமே. 15

மாலைக் கிசைந்த தடந்தோள் வணிகளீ
மாசாத்தர் தந்ததோர் வஞ்சிய ளுரே
ஆலைக் கரும்பை அமுதைப் பசுந்தேனை
அன்புடனே நாச்சிமார் தன்னுடனே நான்
கோலக் கிரியிலே கயல்வைத்த கொற்றவன்
கூடற் பதியிலே மாறிவரு மளவும்
வேலைப் பொருதகயல் விழியாரே
விதமைற வேகொண் டிருப்பே னியானும். 16

கற்றவர்க ளுற்றதோர் கவியைக் கடந்து
காராளர் தெருவிலே கோவலனும் வந்தார்
மற்ருெருவ ரொவ்வாத வங்கக் குலாதிபரே
வண்டுசெறி செங்கமல மாலைஅணி வோரே
வெற்றிபுனை வேல்மன்ன ரரகமே தினியையும்
மேளியால் விளைவிக்கும் மிக்கவே ளாளரே
குற்றமறவே பொற் சிலம்புகொடு வந்தேன்
கொள்ளுமென் றேவிலை கூறியே போனர். 17

சிலையான வல்லரசர் மண்டமுடி மன்னர்
செந்தமிள் பாவணர் தன்தெருத் தோறும்
மலையாளர் துளுவரொடு மறவர் கைக்கோளர்
மற்றுமுள பலசாதி தன்தெருத் தோறும்
விலையாக இப்பொழுது விக்கணு மென்று
விரதுடைய மாசாத்தர் தன்கோவ லனர்
கொலையான அரவின்மணி இடுபொற் சிலம்பை
கொண்டருளு மென்றுவிலை கூறியே போனர். 18

அந்தத் தெருவிலே இருக்கின்ற நாலு
சாதித் தலைவர் தம்மை அழைத்து
எந்தச் சிலம்புநீர் விற்கிறீர் பிள்ளாய்
இதுவே சிலம்பென் றெடுத்தவர் காட்ட
கந்தக் கருணாகர னென்றொரு செட்டி
தான்கண்டே இருசெவி தன்னையும் மூடி
சிந்தை குலிங்கிவிலை செப்புவா ரில்லை
செட்டியாரே கொண்டு செல்லுமென் றாரே. 19

முத்திரை செம்பொன் மாணிக்க மிவையெல்லாம்
முழுதும் நிறுத்துவிற் போர்களைப் பார்த்து
எத்தல மதிக்கும் புகர்நின்று வந்தேன்
என்மனை யாள்காற் சிலம்புவிக்க வென்று
சித்தமிகு ஆசையால் நாமிங்கு வந்தோம்.
தேசிகரே கொள்ளு மெனஉரைத் தாரே
அங்கவரு ரைக்கவே தேசிகர்க ளெல்லாம்
அனைவரு மிருந்துவிலை யதனைக் கேட்டாரே. 20

இங்கு இதற்குநீர் விலைசொல்லு மென்ன
எண்ணரிய நாகமணி என்று முன்னிடு
நீங்கள் நடுவாக விலைஇதனை யேகூறி
நிச்சயித்தே சொல்லு மென்றிவ ருரைக்க
நாங்களிது கொள்ளவில்லை இந்தச் சிலம்பு
நடவும்நீர் பினனரும் நடவுமென் றுரே
ஏகு மென்றவ ருரைக்கவே அந்தத் தெருவில்
இருந்தவோர் செட்டியார் சொல்வார். 21

பாங்காக இங்கே நடப்பதே பிள்ளாய்
உம்மானை எம்மானைப் பரமாண்ட ரானை
ஆங்குள்ள நாங்கள் எல்லோருந் தானும்
சற்றறி வுறுத்தல்போ லிருக்கிறது காணும்
தீங்கில்லை நம்மருகே வந்து நீர் சிலம்பை
எடுத்துப் பெறும்விலை சொல்லுமென் றுரே
என்றவர் சொல்ல இயல்கோ வலனர்
இசைந்ததோ ரரவின்மணி ஈடார் சிலம்பை: 22

துன்றியவர் கையா லெடுத்தவர் முன்னே[1]
சொல்லு மிதற்குவிலை என்றவ நுரைக்க
நன்றிது தாருமென வாங்கியே பார்த்து
நாவிலும் பல்லிலும் தண்ணீரு மற்று
சென்று விழுந்து திகைத்துமே இப்போ
சிலம்பு கொள்ளில் கடவுளே துணை என்றார்
என்றவ நுரைக்கவே தேசிகனு மப்பால்
ஏகவே வேறுசில தேசிகர றிந்து. 23

மன்றல்கமன் கஸ்தூரி புனுகுசா திக்காய்
வசுவாசி ஏலம் இலவங்கம் கராம்பு
நன்றியுள்ள கொத்தமல்லி திற்பலி வசம்புள்ளி
நற்சீரகம் கரும் சீரகம் மிளகு
குன்றிச் சரக்குப் பலவகை விற்கும்
கடைத் தெருவீதி தனைக்கடந்தாரே. 24

அப்பாலே சென்றபின் நீர்வாழும் சாதி
அஞ்சுவண்ணக் கரையா ரென்றெருசாரார்
செப்பாரும் நெறியுடையர் மால்வளிக் கரையார்
தேச்கருடனே உடன் சிந்து நாடார்
இயல்பான பாவனர் தன்தெருத் தோறும்
... ...
கைப்பாரி லெனவுதவு மாசாத்தார் கோவலன்
கையிற் சிலம்புவிலை கூறியே போனார். 25

கூறுத் தெருவெல்லாம் கூறித் திரிந்து
கோவலன் கையிற் சிலம்பு விலை தானும்
ஏறும்படியாக இந்த ஊர் தன்னில்
யாவரும் கொள்வாரில் லாதபடி யாலே
வேறென்ன செய்வேனென்று விசாரித்து
மேலைத் தெருவீதி தன்னைக் கடந்து
சீரும் படியைக் கடந்துமே மாரனை
சேவிக்கும் பெண்கள் தெருவிலே வந்தார் 26

1 காட்ட

வண்டணியும் மதுமாலை மேவுகுழ லாரும்
மாமலையை வெண்டதோர் சாய்கை யதனாலும்
விண்டிணியு மிருபாரக் கொங்கை யதனாலும்
வில்லணைய நுதலாலும் முல்லைநகை யாலும்
கண்டணியு மொளியாலும் அன்னநடை யாலும்
காசினியில் இளைஞருயிர் கவர்கின்ற பெண்காள்
கொண்டிணி யுமிந்தச் சிலம்பை நீரென்று
கோவலரும் விலை கூறி வந்தாரே, 27

நீள்தெருவில் விலைகூறி வருகோவ லன்தன்னை[1]
நேர்கண்டு[2] தட்டானும் நின்றேது சொல்வானும்[3]
சொல்லுவேன் கடல்வழுதி யல்லாது மற்றொருவர்
தொல்புவியில் நல்லவிலை யார்தருவா ரென்று[4]
நல்லமணி வாசலில் வாருமிதை வித்து
நான்தரு வேனென்று போந்த[5] கம்மாளன்
சொல்லமுன்னம் விலங்கிட்ட குல வழுதி
தேவிபுனை பரிபுரந் திருடனும் இவனைக்[6]
கொல்லும்நீர் கள்வ னிவனென்று தட்டானும்
கொற்றவ முன்வந்து[7] கும்பிட்டுச் சொன்னான். 28

கொற்றவனும் நம்முடைய சிலம்போயி தல்லவே
குலமனைவி கையிற் கொடுத்தறிவ மென்றூர்
சேத்றமொடு செம்பொற் சிலம்பு அதுதன்னை
தேவிபெரு மாட்டிமா தேவிகையில் வாங்கி
மாத்றெனது பரிபுரமி தல்லவே நாகமணி
மண்ணிலுள் ளோர் அணிய வுன்தலை பொருது

1 முன் 2 நேர்கொண்டு 3 சொல்வான்
4 சொல்லரிய விலை இதற்கல்லாது திறல்வழுதி தொல்லுலகி லுள்வரி லார்தவ [ரெனவே
5 கொடுபோந்து
6 சொல்லமுன்னம் விலங்கிட்ட குலவழுதி தேவிபுனை பரிபுரந் திருடனும் இவனைக்
7 முன்னின்று

சொல்லிவிடும் மன்னவற் கோனது தாதியர்கள்
சொல்லினர் கம்மினும் மல்ல வென்ருனே
அல்லவோ செய்தொளில் அடியேனு மறியேனே
அண்ணலே பெண்மதியி னுலவ உரைத்தார்[1]. 29

கொல்லும்நீர் கள்வனிவ னென்று தட்டானும்
கொற்றவன் முன்னின்று கும்பிட்டுச் சொன்னுன்
வில்லசுரா மேகநா கந்தனை அழைத்திவனை
வதையுமென மதயானை வதையாத படியால்
கல்லின்மேல் மளுவினுலே பிளப்பிக்க[2]
காரணங் களிவனிடை கண்டகண் ணகையே. 30

கண்ணருவி தனபமுலை தழுவி யாருடைய
கடிமனை அகன்று திருமருகினில் நடந்து
தான்மரவேங் கைசென்று இருபிளப் பானதோர்[3]
தன்கணவனைக் கண்டிரு கண்களி லறைந்து
மண்ணதில் வீழ்ந்துதன் கணவனென்றே தான்
மரணமுற வந்தவகை அறியவேணு மென்று
வின்னுலகு தனை நினைக்க பொன் னுசிநால்[4]
மீழவு மெடுத்துயிரை மீட்ட பத்தினியே. 31

1. கொற்றவனும் நம்முடைய சிலம்போயி தல்லவே
கொடுமனைவி கையிற் கொடுத்தருளு மென்ன
சேற்றமொடு செம்பொற் சிலம்பு அதுதன்னை
தேவிபெரு மாட்டிமா தேவிகையில் வாங்கி
மற்றனது பரிபுரம் அல்லனது நாகமணி
மற்றிலுள் ளோர்புனை யவுந்கலை பொருது
சொற்றிடும் மன்னனுக்கென வந்து மெல்லியர்கள்
சொன்னர்கள் தேவியவ ளல்லவே என்றுர்.

2, வல்லையில் மேக நாதனைப் அழைப் பித்து
வதை செய்யும் மதயானை மதைசெய்யா ததினல்
கல்லின்மிசை மருவாலே பிளப்பிந்த

3. கண்னருவி கனயமுலை கருகிவின் ஆயரிடை
கடிமனை அகன்று திருமகளில் நடந்து
தண்ணமர வேங்கை அடியினிரு பிளவாக

4. பொன்னி னூனிநால்

மீட்டுயிரை அவரை ஏதுஞ் சொல்லு மெனவேதான்
    வினவி வருகோவலர் விடுத்தே துரைத்தார்
கேட்டேனே நூலேணி கிடவுமென வேதான்
    கிரணமணி வாள்சிலம் பொருகையி லேந்தி
நீடுதெரு விற்குளா வலக்கையி லேந்தி
    நெற்றியில் கண்ணிடை மணிநெருப்பு மழைதூற
பாட்டோலி மதிட்பெருகு விண்மணி புயத்தோன்
    பார்த்திப னிருந்த திசை பார்த்து வந்ததுவே[1]. 32

வந்துதிரு வாசல்தனில் நின்றவனை நோக்க
    வழுதியு மெழுந்திரு வாசல்தனில் வரவே
கொந்தளகு மதுகுலைய நின்றவனை நோக்கி
    கொலைகார னேகொடிய அரசு நீதானே
என்கணவ னைப்பளி படைத்தவனும் நீயோ
    என்சிலம் புக்கிணைச் சிலம்பெங்கே தந்துபார்
என்றுமே ஆதியாங் கெருடனை நினைக்க
    அப்போது பாண்டியன் சிலம்புவர வேதான்
உனதோ இதெனதோ இந்தச் சிலம்பு
    சபையிலுள் ளோர்களே தானறியு மென்றாள்[2]. 33

1. மீட்டுயிரை வரவேற்று விரைவினிற் கேட்க
        மீண்டுவரு கோவலன் விளித்தினி துரைப்பான்
    கேட்டுவிட்டு நூலைக் கிடவுமென் றேதான்
        கிரணமணி வாள்சிலம் பொருகையி லேந்தி
    நீட்டுதரு விற்குளா வலக்கையி லேந்தி
        நெற்றியில் கண்ணினிடை நெருப்பு மழைதூ[ற]
    பட்டரிமெதிப் பரிவு தின்பரி புரத்த
        பார்த்திபன் வந்தவழி பார்த்தவள் நடந்தா[ள்]

2. வந்துமணி வாசலில் வந்தவ னுரைக்க
        வழுதியு மெழுந்திரு மறுகினி நடந்து
    சொந்தநகை மதிகுலைய நின்றமயில் கண்டு
        கொலைகார னேகொடிய கோமாறன் நீயோ
    என்தலைவ னைப்பிளப் பித்தவனும் நீயே
        இந்தச் சிலம்பிற கிணைச்சிலம் பெங்கே
    தந்தா ருந்தேவி தனதோ இ தெனதோ
        சபையினுள் ளோர்களே தானுரையு மென்றாள்.

தானறியு மென்று கையில் நுபுர மெடுத்து
    தரைதனில் அடித்திட நெருப்பொறிக ளார்த்து
புல்லூர்தி மணிவகை தெறித்ததென வேதான்
    புரவலன டுங்கி உயிர் போய்க்கதவ டைத்தான்
தானணுகி நின்றதட் டானையுமெ ரித்து
    தனமுலை தனைத்திருகி எறியவர முற்று
மீனவ னடைத்தகத வேளையுமெ ரித்து
    வேந்தனுடைய மார்புருகி வீழ்ந்துயி ரிளந்தான்[1]. 84

வீழ்ந்து யிரிளக்க மதுரேசனை யெரித்த
    மெல்லியர் தன்மனது வேகம் ஆற்ருமல்
காய்ந்து கணலிட்டு மதுரைப் பதியெரித்த[2]
    கன்னிவரும் போதிடைக் கன்னியர்கள் பயந்து[3]
வேந்தனை அளிக்கவென் றேதிருக் கொங்கைதனில்[4]
    வெண்ணை தனை அப்பியவர்[5] மண்ணுற வணங்கி
பேந்தபொழு[6] தேஅந்த மாசாத்தர் வந்து
    பூவையே நின்கோப மாறிவிடு மெனவே[7]
ஆறிநின் றேதேவ லோகந்தனை[8] நோக்க
    அங்கிருந் தேளுபெண்கள் அப்போ திறங்கினர். 85

நேரிளையு மோர்கலை யிலானகலை கொண்டு
    நிலவுபோல் உலகெங்கும் நிறைபூசை கண்டு
தாரிநின் டேஇலை பாக்குட னருந்தி
    தையல்நின் றம்மனுய் தானு டினுரே

---

1. தானுரையு மென்று கையில்நுபுர மெடுத்து
    தாரையிடை யடிக்கத் தகர்ந்து நெருப்பாய்
பொன்னுருவி ஓர்மணி எறிந்தவகை கண்டு
    புரவலன டுங்கியே போய்க்கதவ டைத்தான்
தன்முலை தனைத்திருகி எரியவகை கண்டு
    தன்னருகு நின்றதட் டானையுமெ ரித்து
மீனவ னடைத்தகத வேழையுமெ ரித்து
    மெல்லியல் தன்னுடைய வேகமமை யாமல்

2 பதியழித்து 3 கண்டு 4 கொங்கையில் 5 அப்பியே 6 போந்தவளை
7 மறிநில் லென்றுர் 8 லோகமதை

தாரிநீண் டதலை மாசாத்தர் வந்து
தம்மாலையே உலக மீடேற வேணும்
நாளுமோர் புவியை ஆள்நாளே தினத்தாளே
நன்னுதல் வைகாசி மாதம்நான் வருவேன்
என்றுனதோர் கலைமண் ணில்நிறுத்தி
அம்மனும் வானுலகம் ஏகி நின்றனளே. 36

ஏர்கொண்ட வணிகேசர் மாசாத்தர் கோவரும்[1]
இயல்பாகவே[2] மணமுடித்த இக்கதையால்
பார்கொண்ட மாதுபயில் மாயன் மருகோனே
கரிமுகவ னேவந்து காத்தருள் செய்வாயே[3]
சீர்தங்கு கமலத்தின் மேவுசெந் திருவே
திங்களுக் கொப்பான மங்கையர்க் கரசே
ஊர்தங்கு தென்மதுரை மன்னனைப் பணிசெய்து
இம்பருல[4] கத்தில்வாழ் எங்கள்மா தாவே. 37

கூர்தங்கு வேல்விளிக் கொடியிடை யினளே
கொண்டலுக் கரியகொந் தளகத் தினளே
வார்தங்கு கும்பமுலை யாளேவற் றுப்பளையில்
வாழுமா தாவையொரு நாளும்மற வோமே. 38

கோலமா மாமதக் கும்பபொற் பாளே
குலவணிகர் தங்குடிக் குகந்தநற் பாளே[5]
ஞாலமாகப் புகழ் படைத்தபத் தினியே
நாகமணி நூபுரந்[6] தரசுபெற் றவளே
சாலிவயல் சூளவரு வற்றுப் பளைதனில்
சவளமொடு பவளநிறை தண்டிகை பரப்பி
காலமழை பொய்க்கினும் உன்கருணை பொய்யாதே
கண்ணகையை ஒருபொழுதும் நாவிலய ரோமே. 39

1 கோவலர் 2 இயல்பாக 3 செய்வாய் 4 பேருல
5 கற்பாளே 6 நூபுரந்

அங்கொனா மைக்கடவை செட்டிபுர மச்சேளு[1]
ஆனதோர் வற்றாப் பளைமீ துறைந்தாய்
பொங்குபுகழ் கொம்படி பொறிகடவை சங்குவயல்
புகழ்பெருகு கோலங் கிராய்மீ துறைந்தாய்
எங்குமே உன்புகழை மங்காமல் ஓதற்கு[2]
எந்தனது சிந்தைதனி லுறைந்த காரணியே
பாரினிற்[3] துயரங்கள் அகல[4] அருள் புரிவாய்
தயவுசெறி கொல்லங் கிராயில்மா தாவே[5]. 40

மாது திருவுள்ளம் மகிளவந் தாயே
மண்ணுளோ ரெலாம் வாழவந் தாயே
நெறியான மணமாலை ஒருகுலந் தன்னில்
நினைப்பதொன் றுனைவிட் டுரைப்பதொன் றறியேன்
குறியான நிலைமையுள குற்றமா நகர்
குற்றங்க ளாம்செய்த குறைகளோ அறியோம்
அறியாமற் செய்தபிழை பெரியோர் பொறுப்பது
அங்கொணா மைக்கடவை வந்தகண் ணகையே. 41

முந்தித் தடங்கிரி யிலேபாண்டியன் தன்மதுரையை
முதுகனல் கொளுத்தியே ஒருசிலம் பதனால்
பிந்திவந் தங்கொணா மைக்கடவை தனிலும்
பேரான முள்ளியவளைப்பதியில் வந்துறைந்தாய்
தந்திமுகன் கோவிலில் வந்துமடை கண்டு
தார்கட லுப்புத் தண்ணீர் விளக்கேற்றி
அந்திப் பொழுதினிலே நந்திக் கடற்கரையில்
வைகாசித் திங்களில் வந்தமாந் தாயே[6]. 42

அடவிக் கடற்கரையில் விடுதிவிட வந்தாய்
அழகான மாட்டிடையர் கண்ணில் அகப்பட்டார்
பாரப்பா என்தலையில் பேனதிகம் என்றாய்
அளகான தலையதனை பிளவாய் வகிர்ந்தார்
பாங்கான கண்களோ ளாயிரமும் முண்டு
... ...

---

1 மச்சூழ் 3 பங்கமுறு 5 பரிவுசெறி கோலங்கிராய் மாதாவே
2 ஓத 4 தீர 6 ஆலயந்தனில் உதித்தாயே

அம்மனே உன்தலையில் அதிசயம் கண்டோமே
அழகான எந்தனுக்குப் பசியதிக மென்றாய்
... ...
பால்புக்கை மீட்கப் பறந்திட்டாய் தாயே 43

இருந்த படவாளும் இலைவிட் டெழும்ப
எல்லோரும் புதுமை என்று கோவிலும் கட்டி
குண்டத்தில் தானே குணமாக அப்போ
குருக்களும் நூலாலே வண்ண மாய்சுற்றி
வெற்றிலை யைதானே விளிம்பிலே கட்டி
வேதியர்கள் அப்போது வேடிக்கை யாக
மங்காத தேவிசூழ் நந்திக்கடல் கரையில்
ஆலயம் தன்னிலே பொங்கல் மடைசெய்து
பொங்கல் மடைசெய்தே அம்மன் நிறைவிளக்கேற்றி
பொன்னின் குடக்கும்ப மேதினில் நிறுத்தி
கங்கைசூழ் வன்னியோர் ஐந்துபற் றெல்லோரும்
காராள ரும்மட மாதர்எல் லோரும்
தஞ்சமென் றேஉனது தாளிணைப் பலரறிந்தோம்
தாயே நீவந்து காத்தருள வேணும். 44

மெய்யாக வந்துநீ எங்களுடை சோம்பலை
விலக்கியே இப்போது மாற்றுது இருந்தால்
தையலே உன்கிருபை தன்னை எல்லோரும்
தப்பாது பொய்என்று இயம்புவார் தாயே
நாலுகோணச் சாற்றுள் வீற்றிருந் தாயே[1]
நால்வேத மந்திரம் நமக்குரைத் தாயே. 45

சாலமிது மாறுகொண் டச்சாத் தாயே
சாத்திரமும் நான்குமுன் மாற்றி வைத் தாயே
கோலமிகு நந்திருவளி வந்தமா தாவே
தவளமொடு பவளநீரை தண்டிகை பரப்பி
சாவிவயல் சூளவரு வற்றுப்பளை தனில்[2]
எல்லோரும் உன்புதுமை கண்டோமே தாயே 46

1 இருந்தாயே 2 நந்திவெளி தன்னில்

முலைதிருகி ஏழுபொற் கதவுமூடு ருவவே
முடிமன்னன் மார்பில் எறிந்த கண்ணகையே
ஆறுநீ ருகவே முலைதிருகி அனல்செய்த
அங்கோரு மைக்கடவை தங்கு கண்ணகையே
அங்கொரு மைக் கடவை தங்கிவந் ததுமெய்
அன்புசெறி கோவலற் கமுதளித் ததுவுமெய்
பங்கமுறு பாண்டியன் தனைவதைத் ததுவுமெய்
பரிவுடனே முப்பரம் படியெரித்த ததுவுமெய். 47

துங்கமுற வேளனது காலைமேல் நோயை
சுருதியுட னேவந்து மாற்று திருந்தால்
எங்குமுளதாகவே நின்றபுக ளெல்லாம்
யாவரும் பொய்யென இயம்புவார் தாயே
சீராகத் தாரண சேர் மாறனுக்காய் அன்று
செப்பு நிகருற்றமுலை யைத்திருகி விட்டாய்
ஊரகத் தேயுலகில் மானிடர்க் காய்என்று
உனதுபணி விடைசெய்ய எனதுமனை வந்தாய். 48

சேர்ஒப்பு வாகியே யுரைவிட் டுப்புறஞ்
செல்லெனப் பூலோகர் செய்திசொல் முன்னே
ஆரனுப் பினபிணிக ளாறுலு மென்துயர்
அருள்புரிய வேணுமன் பானகண் ணகையே
கொத்திஒரு மண்வெட் டியாலே விதைத்து
குடில்களுங் கூட்டியே காவலும் காத்து
அத்தகிரி வந்துபயிர் தன்னையு மளித்து
ஆனையும் போடவென் றணிகி வருகையிலே
நித்திரையோ டாவென்று தட்டி யெழுப்பி
நீபிலைத் தோடென்று கரைசேர விட்டாய். 49

புனத்திலே மதயானை வந்ததும் போனதும்
புற்குளம் வானவரு மூலக மாதாவே
உலகமா தாவென்று நாமந் தரித்தாய்
உம்பற்கு மெம்பற்கு மெட்டாமல் நின்றாய். 50

மாஞகர் செல்வி உனக்கோல மோலம்
மாசாத்தர் மருகி உனக்கோல மோலம்
கோஞடர் காரி உனக்கோல மோலம்
கோவலன் பாரி உனக்கோல மோலம்
தேஞர் மொளிச்சி உனக்கோல மோலம்
செட்டிச்சி அம்மை உனக்கோல மோலம்
கானர்க் குளவி உனக்கோல மோலம்
கண்ணகைத் தாயே உனக்கோல மோலம். 51

★

அம்மன் சிந்து, அளம்பிலேச் சேர்ந்த மே. செபஸ்தியாம்பிள்ளை அவர்களின் கையெழுத்துப்பிரதிப் பாடல்கள் முழுதும் வரிக்கு வரியும், சொல்லுக்குச் சொல்லும் வேறுமுறையில் மாறுபட்டு அமைந்து காணப்படுகின்றன. அப்பாடல்கள் அப்படியே பதிப்பிக்கப்படுகின்றன.

அம்மன் சிந்து

திருமருவு கயிலாசமலேயினிசைநிலவுமனே
சிவனுமுமையவளுமொருசிங்காசனத்தில்
மருவுபொளுதுமையவள்ளெனுந்தடிபணிந்து
வள்ளலேமதிபரவுவந்தமிழ்மாரன்
வெருவுநுதலில்லாதவிளியுநுதல்கண்டு
வெக்கினேன்னெனதுதுயர்விடையருளுமெண்டு
தருமருவுஇதளிமந்தாமகேதனனும்
தையலேஉன்னினேவுதவமுயலுமென்ன
உண்டைபணிவிடைதொண்டுகயிலயங்கிரிநின்று
இறங்கிவிண்தேவலோகந்தனிலிங்கும்
தண்டமறத்திருமாதுமுத்துமாளிகையிலொரு
சறடுகொண்டிளேகள்நாலேணிதனில்வந்து
துண்டுமினவன்கொடியில்வழுதுநிதமுங்கனி
சூதமாவின்கனியிலேயுறைந்ததிஞல்
இண்டுமாவோதண்டுஇனிதருளுமென்ன
இனியநுதலின்விளிதனேமறைந்தவளே
தகமனேயனூதலில்விளிமிகுபமெளுதி
தன்கயிறுதன்கணேதரைக்கொடுநடந்து
நவமணிகளுக்குமோர்அருகிலும்பொற்பேனே

நடுவிலும்முடிவைத்தனே நாள் விட்டு
மவனமுறமற்றநாளிற்றுறந்தேவளுதி
பாத்தபொளுதேமதலையாக்குரவைகண்டு
கவனமுடன்கெணிதரை அழைத்திதன்மாயம்நீ
கட்டுரையுமென்னவவர்கட்டளைபுரிந்தார்.
சுட்டழகிதிருமதலைகண்ணுலுன் அரசுரிமை
கண்ணெளியின் நீர்கேளும்கமள்மதுரைநகரம்
பொட்டகமதிற்படவுசெய்திமதிவையகம்
பேராற்றிலேபடகுநீர்ஒட்டம்வளியே
மட்டறம்மிதந்துவந்ததலைகடலில்தோற்றி
மாணுகர்மகளாகவந்தமாதாவே
மாணுகர்மகளாகவளர்கின்றநாளில்
வலியகருவிடைநாகம்மணிபுனைவளென்ன
மேனுளிலிட்டதை அறிந்துமாணுகர்
வேலைவளவனைத்தொணுதிவிண்ணப்பம்செய்து
காணுறுதாதையாகபுயல்வளுதிகோனும்
காமனை அழைத்துக்கனவரிசைசெய்து
செய்துசிலகப்பல்கள்கொடுத்துமிகவிட்டு
செத்தவர்பிளைத்துவரஉத்தமியமைத்து
ஈதிறற்கூற்றாதிபேர்களைவருக்கும்
ஈடளிவில்லாமலேநாகமலைசென்று
பையரவினைத்தொளுதுபத்தியுடன்நாகமணி
பாவித்துவாங்கியவர்ஆலித்துமீட்டார்
துய்யபுகள்வளபர்முன்வைத்திடமகிழ்ந்து
தொல்வரிசைகாமனுக்கருளிச்செய்து
வாள்பொளுதுசோளன்முன்நாடகமடித்து
மாதவிதன்னால்மனதுகோவலர்மயங்கி
நாளோரிரவைக்காயிரத்தெண்களஞ்சுபொன்
நல்லியுள்ளகைப்பொருள்பற்றுமிளந்து
வாளரவின்மணியீடுசிலம்பாகுதல்விற்க
வாங்குவார்இல்லையெனமதுரைநகர்சென்று
நீள்தெருவில்விலைகூறிவருகோபலன்தன்முன்
நேர்கண்டுதட்டானும்நின்றேதுசொல்வான்
சொல்லரியவிலையிதற்கல்லாதுகடல்வளுதி
தொல்லுலகிலுள்ளவர்களார்தருவரெனவே
நல்லமணிவாசலில்வாருவிதைவிற்று
நான்தருவனெண்டகொடுபோந்தகம்மாளன்
சொல்லும்நீர்கள்வனிவனென்றுதட்டானும்
கொற்றவன்முன்வந்துகும்பிட்டுச்சொல்வான்

கொற்றவனுநம்முடையசிலம்போயிதல்லவோ
குலமனவிகையிற்கொடுத்தருளுமென்ன
செற்றமொடுசெம்பொற்சிலப்பிதுதன்னை
தேவிபரிபாண்டிமாதேவிகையில்வாங்கி
மற்றனதுபரிபுரம் அல்லதுநாகமணி
மண்ணிலுள்ளோர்புனையவந்தலையெழுதி
சொற்றிடும்மன்னனுக்கெனவந்துமெல்லியர்கள்
சொன்னாளேதேவியவள் அல்லவேஎன்றார்
அல்லவேசெய்தொளிலடியேனுமறியேனே
அண்ணலேபெண்மதியினாலவஉரைத்தா
கொல்லும்நீர்கள்வனிவன் என்றுதட்டானும்
கூறுமதியாலேயுயர்கொற்றவன்மயங்கி
வல்லசினமதையானைதனைஅழைத்திப்போ
வதையும்நீர்மதயானைவதைசெய்யாததினால்
கல்லின்மிசைகனகமனைவாலேபிளைப்பித்த
காரணங்கனவின்மிசைகண்டகண்ணகையே
கண்ணருமிகளபமுலைகளிவிவிளையாருடைய
கடிமனையகன்றுதிருமறுகினில்நடந்து
தண்ணமரும்வேங்கையடியானிருபிளவாலே
தன்கணபனைக்கண்டுகண்களிலறைந்து
விண்ணுலகுதனைநினைக்கப்பொன்னிநூசினால்
மீளவுமெடுத்துயிரைமீட்டபத்தினியே
மீட்டுயிரைவரவேதுவினவெக்கேட்டு
மீண்டுவருகோவலன்விடுத்தினிதுரைப்பான்
கேட்டுவிடும்நூலைக்கிடாவுமெனவேதான்
இரணமணிவாள்சிலம்பொருகையில்லேந்தி
நெற்றியங்கண்ணிடைநெருப்புமழைபெய்ய
பாட்டலிமேதுப்பரவுதிண்பணிபுயத்தாள்
பாத்திவன்வந்தவளிபாத்துவந்தனனே
வந்துதிசைவாசலில்வந்தவனிருக்க
வருதியுமெழுந்துதிருமறுகினில்நடந்து
பொத்தளகிமதிகுலையநிண்டமயில்கண்டு
கொலைகாறனேகொடியகோமாறநீயோ
என்தலைவனைப்பிளைப்பித்தவனும்நீயோ
இந்தச்சிலம்பிற்குஇணைச்சிலம்பெங்கே
தந்துபார்உன்தேவிதனதோஇதல்லவோ
சபையிலுள்ளோர்களேதானுரையுமென்ன
தானுரையுமெண்டுகையில்மூவிரமெடுத்து
தறைதனிலடிக்கநகர்ந்திடும்நெருப்பு

பொன்னுரைக்கோர்மணிதெறிக்கவகைகண்டு
புரவலன்நடுங்கியுயிர்போய்க்கதவடைத்தான்
தன்முலேதனைத்திருகிஎறியவகைகண்டு
தன்னெதிரநின்டதட்டானேயுமெரித்து
மீனவனைடைத்தகதவேளேயுமெரித்து
மெல்லியவள்தன்மனதுவேகமமையாமல்
கரந்துகனலிட்டுமதுரைப்பதியளித்து
கன்னிவரும்போதிடையகன்னிபுகள்கண்டு
வேந்தனையளிக்கவெண்டேதிருகுகொங்கைதனில்
வெண்ணைதனை அப்பியே மண்ணுறவணங்கி
போந்தவளும்நிந்தலேசாந்தும்சவாதும்
பூவையேனின்கோபம்ஆறினில்லென்ருர்
ஆறிநின்றேதேவயோகமதைநோக்க
அங்கிருந்தேளுபெண்கன்அப்போதிறங்கி

... ...

(இடையில் சில பாட்டுக்கள் கிடைக்கவில்லே)

... ...

முந்திதடங்கிரிப்பாண்டியன்மதுரையில்
முதுதணல்கொளுத்தியேயொருசிலம்பதனல்
பிந்திவருமெக்கணமைக்கடவைதன்னில்
பேரானமுள்ளியவளேப்பதியுறைந்தாய்
தந்திமுகன்கோவிலில்வந்துமடைகண்டு
தார்கடலுப்புத்தண்ணீர்விளக்கேற்றி
தங்கியேயம்மாளுடையதொருவீதியில்
தஞ்சமெண்டேயுனதுதாளினேபணிந்து
மங்காதவாவிசூழ்நந்திக்கடல்வெளி
வைகாசித்திங்களில்வந்தமாதாவே
மாருதபாண்டியன்தனைவதைத்ததுவுமெய்
ஐயமறவந்தவற்கன்னம்பகிர்ந்ததுவுமெய்
அன்புசெறிகோவலற்கமுதளித்ததுவுமெய்
மெய்யாகவந்துநீர்என்னுடையசோம்பலே
விலக்கியேயிப்பொழுதுமாற்ருதிருந்தால்
தையலேஉன்கிருபைதன்னையெல்லோரும்
தப்பாதுபொய்யென்றுதூற்றுவார்தாயே
கானமயிலானகுயிலன்னமெனவந்தாய்
கால்கடினமாமதுரை ஆனதுபுகுந்தாய்
ஆனபளிதாயியம்ஆமனநடந்தாய்
அரசனைப்பளிபூண்டஆவேசமாதே.
வானமழைபெய்யவும்வையகமாதுய்யவும்

மானிடர்தமக்கழிவுவாராமலேகார்
ஆனபரன்தாவுலகில்கானமாதாவே
அழகானவற்றுப்பளிவந்தகண்ணகையே
வாய்ந்தமணலாம்வயலாம்குளமாம்
வாகையாம்சோலையாம்வண்டேசர்பாட
ஏழுபேர்கன்னிமர்இணைபுரியாமலே
வல்லிக்கிணங்கநல்லதீரமுடிச்செப்பும்
சிறந்ததோர்இலைமிளகுஅலர்ந்தசந்தணமும்
முத்தானமாலையாம்முலைமூடுபட்டு
மோகனங்கண்ணுடிஅம்மானைசெப்பு
அநிமிளகுசந்தணம்ஆம்பல்கஸ்தூரி
ஆனபலதாளம்புஅம்மானைசெப்பு
கெவுரிமயிர்கண்ணுடிசந்தணசுகந்தம்
சாதலிங்கப்பூச்சுவில்லம்புசட்டை
சித்தார்விளையாடும்தெல்லிக்குவாய்க்கால்
திருநாமமொருபொழுதுமனதிலயரோமே
கோத்தமணிமாலையாம்குங்குமப்பொட்டாம்
கோலமுடனேவர்ன்னப்பொல்லுடன்கயிரும்
பாற்தபொழுதனுகாமற்படையுடனிற்பாய்
காலனையுகமபடைகளோடியமராபொருதுவர்
கண்டநிகர்இவருமொருகட்டலைபுரிந்தார்
சாத்தலன்நகர்வாளும்வந்திடுமண்ணமார்
மலரடிபொற்பாதமனதிலயரோமே.
பாலைப்பளிப்பைப்படமுரைத்தாயே
பதனன்பிராணனெடுபலைகலைத்தாயே
நாலுகோணச்சரத்துள்ளிருந்தாயே
நால்வேதமத்திரநமக்குரைத்தாயே.
சாலைமிகுநந்திவெளிவந்தமைந்தாயே.
சாஸ்திரமீராறையும்தேற்றிவைத்தாயே
கோலமிகுநந்திவெளிவந்தமைந்தாயே
குலவுகற்புடையகண்ணகையெனுந்தாயே;

☆

விறுமன் சிந்து

பாரினில் மளுப்படை வெளுக் கயிறுசூலம்
பட்டைய மிருப்பு வளைதடி கொண்டுசாட
பிரியமுட னேகரு மீசையை முறுக்கி
வெளிகொண்ட மதகரியை வெண்டு காடேறி
ஏறுமலர் மேலுசட வக்கங்குளம் வாளவரு
இயல்பான விறுமனுடைய திருநாம மயரோமோ. 1

காயரான காயில்ஒரு பூசனிக் காயை
கள்வனென்று ஒன்பன்றி கன்றியொரு வம்பன்
ஏராமலே வந்தெடுத்த படி யாலே
இலையிலே பதினெட்டுவித நஞ்சைக் கலந்து
வாராத தாகமும் சோகமும் எடுத்து
பிளைசெய்த பன்றி பிரியமருன் செய்வாய்
போரான காரண விறும நயினரே
பூதலம் மதிக்கவே வந்தருள் செய்வாயே. 2

★

வயிரவர் சிந்து

கைதனிற் பொக்கணங் கஞ்சுளி கமண்டலம்
காவிதுயி லாடைகைத் தண்டையுடனே
மெங்கனி திருந்து சிவமணித் தாவடம்
வீமக்க பாலமொரு கரமீதி லேந்தி
பைத்தலை முர்ந்தலை சூலம் தரித்தாடும்
வயிரவரை மறவாத மதுரை நாயகனே. 1

வயிரமது கொண்டாட முகடா விழுந்து
மாருத நிழல் மருப்பெங்கும் பரந்து
தயிருடன் கரையொடு கட்டுணற் நாதனுர்
தாமென்ன வளர்பூதர் தாத்தினினல் மேவும்
சேலுண்டு பரிவினுடன் தேவதைகள் நின்று
திந்தோ மெனவே நடம்புரிந் திடச்செண்ணல்
பயில்கொண்டு விளையுமுறிப்பில் குளத்தி லுறைகின்ற
பகவனே திரிசூலி பாணிதன் மகனே. 2

கச்சாய் குளமாங் கனமருதஞ் சோலையாம்
கவிவாண ரிருபிறம் பாடியே நடத்த
உச்சாய மாகவே ஒருகுதிரை மேற்சென்று
ஒன்றாக வேநின் றெடுங்கலை மதிக்க
தட்டாரனை யன்று தலையரி வித்தாய்
தனங்கிளப் பூரணரை ஈடேற வைத்தாய். 3

விட்டார் கொழும்புத்துறை கோயிலாய் கட்டி
மறவனப் புலோப்பளை வண்ணாத்திப் பாலம்
எட்டாத பூனேரி தெல்லிச்சி வசய்க்கால்
இலங்கை முழுதுஞ் சென்றருள் புரிந்தாயே
தப்பாது உந்தனருள் சாவகச் சேரி
தன்மையுள்ள கச்சாய் பணி முதலாக
... ...
சற்றகிலுந் தவிசு தப்பாத நீரே. 4

தம்பட்ட மல்லாரி தாளமுள்ள நீரே
கற்றுவெனக் கிருபை கற்பித்த நீரே
கயிலாய நாதருக்கு கருணையுள்ள நீரே
... ... பொய்கைதனில் வந்துதித் தாரே
வத்ருத சுவாமியென ... ...
வயிரவ சுவாமியென வருதம்பி ரானே
தித்திமி எனமுரசு மத்தளம் முழங்க
செல்வ மாநகர்வாழும் பணியில் வாள்கோவே. 5

ஐயனார் சிந்து

வன்னமிகு பொன்னின் வரத்தியைச் சூடி
    வாகன நெற்றியில் பொட்டுகளு மிட்டு
பொன்னினால் மார்பினில் சங்கிலி பதக்கம்[1]
    பொருந்து நல்வாகுபுரி மூன்கைவளை கெச்சை
இன்னமும் பலவித[2] மாலைகள் அணிந்து
    இடையிலே யருகுமணி[3] கெச்சை சிலம்பு
அன்னமும் சொர்ணமும் இன்னுமுள்ள பொருள்களும்[4]
    ஆதிசட வக்கங்துளம் வாளுமையனாரே 1

ஐம்பெரும்[5] பூதமும் பூமி பாலகரும்
    அரியகுல விறுமனும் அட்டபா லகரும்
மைவரும் வடுகரும் மறவர் சிங்களவரும்
    மதயானை தனிலேறும் மாவுந்த மாரும்
மெய்கதி விளங்கவே மானிடர் துதிக்கவும்
    மேன்மையுடனே கருணை நியருள வேண்டும்
வையகம் புகழ்வரும் கோடலிக் கல்லையன்
    மலரடிகள் பொற்பாதம் மனதிலய ரோமே. 2

கொட்டுநல்ல மத்தளம் கொம்புசிறு தாரை
    கோனாத சேமக்கலம் விருது வீணை
அட்டதிசை எங்குமே வெண்கவரி வீச[6]
    அடர்ந்து சிலமனிதர்வந் தடிபணிந் தேற்ற
மட்டுலவும் அச்சிலாய் மடுவாளு மையனுடை
    மலரடிகள் ஒருபொழுதும்[7] மனதிலயரோமே 3

தொந்தெகுதி தொந்தெகுதி என்றுமுர சதிர
    தொனியது[8] கொக்கிளாய் வெளிதனில் முளங்க[9]
சந்தோச மாகவே மருத நிழல் தனிலே
    தானிருக் கச்சாமரம் வீசுவார் கோடி

---

1. பொன்னின் நூல் மார்பினில் சங்கிலி பதக்கம் 2. பல பல
3. அக்குமணி 4. இன்னமும் பெருகிட் 5 ஐவரும் 6 மெய்க்கவுரிவீச
7. பொற்பாதம் 8. தோனியுறை 9 வந்து

பந்தாடுவார் கோடி பரிமாறுவார் கோடி
பாடுவார் கோடிசிலர் ஆடுவார் கோடி
செந்தே னுலாவுநற் செம்பெடுத் ததுளம்
சேர்ந்து வாழ் ஐயனைச் செப்பவினை யறுமே 4

வல்லிமட வார்கள்[1] சிலர் வண்மை துரைக்க
வளந்தசிறு[2] மடந்தையர் மணிக்கவரி வீச
வில்லியர் படைத்தலைவர் வேதியர்கள் சூழ
வேதியர்கள் சூளநல்ல[3] வெண்குடை நிழற்ற
சொல்லுமொரு மதயானை குஞ்சரம் தேறி
கொடியபடை சூளவே முனிவந்த கோலே
சில்லியொடுமு ரசுகொம் பதிரவெள் யானைமேலேறி[4]
ஆதிசடவக்கங்குளம் வாளுமைய னரே 5

பொன்முனி யுமுனியுமொரு புலிமுனி யுமற்ற
பொற்பட்டமுனி யுமொரு கொற்றமுனி யோரும்
கவியில் வருஒரு பிளைகள டியார்கள் செய்தபிளை
கன்னல்வயற் கட்டாடி அவர்செய்த பிளையும்
அகில்பெருகு சங்குசட வக்கங்குளம் வாளவரும்
ஆனகூளாவடி நிழலில் வாளுமைய னரே[5] 6

கையினில்[6] மெய்யாய் உதித்தவனும் நீயே
கண்டவுட னேவரம் பெற்றவனும் நீயே
தொய்யாமல் ஓடிவிளை யாடுவதும் நீயே
தோராத படைகொண்டு வருபவனும் நீயே

---

1. வில்லதொரு வாணர் 2. வடம்செறி
3. புடைசூழ 4 முளவு கொம்பதிர நல்யானைமேல்
5. பொதிகை யோடுமுனி பொதுமுனியு மற்ற
புவியில்முனி யோர்பிழையும் அடிபார்செய் பிழையும்
கதிரைவயல் கட்டாடி அவர்செய்த பிழையும்
கருணையோடு நீபொறுத் தடியவர்க் காக
அயிலுசட வங்குளம் வாழவரு கின்ற
ஆனகூ ழாவெடியில் வாழுமைய னரே
6. கையிலே

ஐயாயிரம் படைகள் உள்ளவனும் நீயே
அகதிபர தேசியாய் வருபவனும் நீயே
மெய்யாக மெய்கதி விளங்குவதும் நீயே
மேதினியில் ஐயனென மெய்கொண்ட பொருளே 7

கல்லாற் பெருத்ததோர் சிப்பியும் சங்கும்
கடலால் வரும்வினை அறிந்தோமு மில்லை
சொல்லால்[1] பெருத்ததோர் கீர்த்தியு முள்ளநீர்
நாயமார் சூளப்பெரும் படையோடு சென்று
வன்னமது ரையைஅ ளித்தவனும் மாற்றாய்[2]
வாழுமுல கோரைநீர் காத்தருள வேணும்[3]
பொன்னின் குடையால் உயர்த பெருமானே
பூநகரி நகர்வாழ வருமைய னரே 8

நாவியும் கீரியும் நுழையாத குருமனில்
நடனமிடு கொம்பனும் அலியனும் பிடியனும்
தாவியே மறிகாறர் பார்த்துந் துரந்து
சற்றுமன மஞ்சாமல் உற்றபடை சூழ
ஏவியே வந்துமழு வாளது வெடுத்து
எதிர்த்த படைக்கு எதிராக நின்றாய்
ஆதிசேர் பண்டார ஆண்டாங் குளத்திலே
ஐயனே துய்யபுகள் ஆதிநா யகனே 9

பொன்னரிய மாலையொடு சங்கிலி அணிந்து
புகள்பெரிய வில்லூர்த்தி[4] பொற்பிரம்புடனே
சொன்னமொழி தவறும லேபடைகள் சூழ
துகள்படப்[5] பூமிகள் துடித்திட நடந்து
கன்னியர்களிருபுறமும் சாமரைகள் வீச
காளமொடு[6] மத்தளமும் தாளமிவை[7] அதிர
வண்ணமுள ராட்சியாகுளம் தனிலே
மதகரிகள் மீதேறி வருமையனரே 10

1. சொல்லப் 2. சூழவே நாயன்மார் படையோடு சென்று - வன்மைமுது உரைத்
3. வந்து 4. வில்லோடு 5. துகளெழப் [தனி வகுத்துமே வந்து
6. காளமிசை 7. தாளமும்

ஆனையொடு வாசியும் வீரமா காளரும்
அடவுடன் பரிகலம் அணி நிறுத்திடவே
சேனையொடு பப்பரவர் சேவித்து நிற்க
திக்கதிர வெள்ளானை மேலேறி வருவீர்
கோனனைய குடிசனங்கள் யாவரும் வந்து
கும்பிட்டு நல்லவரம் தாருமென்றிடவே
மேன்மைபுரி ஆராட்சியா குளந் தனிலே
மேவிவரு மையனுடை பாதமயரோமே. 11

தொட்டநீ புனுகுசவ் வாதுகஸ்த் தூரி
சொல்லரிய மல்லிகை முல்லை செவ்வந்தி
பட்டுடன் சகலாத்து வெள்ளை மேல்கட்டி
பரப்பிய வெற்றிலை பாக்குடன் சுண்ணம்
அரிபுனுகு சந்தணம் ஆம்பல்கஸ்தூ தூரி
ஆனகுல தாமரைப்பூ அம்மானை செம்பு[1]
சவுரிமயில் கண்ணுடி சந்தணசு கந்தம்
சாதிலிங் கப்பூச்சு வில்லம்பு சொட்டை
இயல்பாக இருபொழுது மடைகொண்டு நின்ருய்[2]
குணமான[3] வறளாயில் வாழுமைய ஞரே. 12

பொங்கல்மடை பூசைமடை பாலடை துளி
போகுமோ[4] கற்பூர வாசமது வீச
சங்குநிறை மேன்மைசெறி ஐயனு ருடைய
சரணமலர் பொற்பாதம் மனதிலய ரோமே. 13

★

வீரபத்திரன் சிந்து

வரவினிய சடை மீதிலம்புவி துலங்க
வன்ன மல்கொன்றைமலர் மாலையு மணிந்து
பரமகளினுல் வெகுண்ட கோபத் தினுலே
பார்மீதிலே வீர பத்திரர் பிறந்தார். 1

1 சிலம்பு 2 நிற்பால் 3 இனமான 4 போதுமா

பார்நடுங் கப்பரம ராதிபர் நடுங்கப்
பங்கயத் தயனுமால் மும்மது நடுங்க
பேர்நடுங் கப்பெரிய கலிமுகன் நடுங்க
பிந்திவரு கந்தவேள் மும்மகன் நடுங்க
போர்நடுங் கப்பெரிய தக்கனுர் வேள்வியில்
பொருதளித் தேஆதி உருவாகி நின்ருய்
சீர்நடுங் கப்புவியில் வந்தவ தரித்தாய்
செல்வனே கல்யாண வீரபத் திரனே. 2

தக்க னுடலைச் சமண்டிகை யாக்கச்
சங்கைசெறி தக்கனுடை பல்லைப்பி டுங்கி
மிக்க மிடற்றில் நரம்பை இழுத்து
வீணையது போலவே நாணைப் பூட்டி
அத்தனைக ணம்மானை போட்டு நடந்தாய்
ஆனந்த ரூபமாய் நின்றநா யகமே
முக்கணுதல் வில்லியுடத் தக்கதொரு மகனே
மூர்க்க முறுங்கான வீரபத் திரனே. 3

தொங்கத்தி மித்திமென மத்தள முளங்க
திடைதோறு மதிகாசர் சூளவே நிற்க
பங்கப்ப டுத்தியே மதகரிகள் தன்னையும்
பரிசுபெற வேபடைத் தரசாள வைத்தாய்
வங்கக் கடலதிர மலைகள் கிடுகிடென
வடிவுசெறி குமுளமுனை தனில்வந் துறைந்தாய்
துங்கப் பிரதாபனே எங்களுடை யவனே
சொல்லரிய நரசிங்க மென்னும் நாயகமே: 4

காடுவெட் டிக்கட்டை யானதுபி டுங்கி
கனத்த தோர்மண் வெட்டி கைதனில் எடுத்து
மாடுவிட் டேயுழுது வண்ணெல் விதைத்து
வருந்தியே மானிடவர் வயறது வளர்க்க
கேடுகெட்ட பண்டிவனை விதை யளிக்கவும்
கிருபையோ வலியநர சிங்க நாயகமே
நாடுகெட் டாலிநல்ல தோசங் களுக்கு
நாயகனே வலியநர சிங்கநா யகமே 5

படிமதுரை பெரியவே பளையவளை சாய
படர்ந்த மர்மமந் தனையும் முறித்தாய்
உடலவினைக் கண்டு நெறுநெறுன விழியனல்
உலகமது மிடுமிடென உம்பருல கெல்லாம்
அரன்முடிகள் கிடுகிடென வில்வளைத் தவனே
அரன்மைந்த னேயகோர வீரபத்திரனே. 6

முடவரொடு குருடரை முடந்தெறிய வைத்தாய்
முப்பாலுடன் செல்வ மாருகி நின்ருய்
நயனமோ தெய்வங் களையோ டளித்தாய்
நன்ருகவே யமர்ந்துகுடி கொண்டாய்
சிந்தைபுக ழானதோர் வீரபத் திரனே
தினம் தினம் நினைக்கவினை சிந்தியோடுமே. 7

★

அண்ணமார் சிந்து

அய்யனுர் தன்னுடைய திருவருளி னுலும்
அலங்கார வைகாளி அப்பனரு ளாலும்
மெய்யாக வெற்றிதரும் மெய்க்கிட்ண ராலும்
மிக்கதோர் நல்லநயினுர் பணிக்க னுலும்
அய்யா யெனப்பெரிய வாளல கெடுத்து
அகலநின் னுயிர்காக்கும் அண்ணமார்க் கபயம். 1

கோத்தமணி மாலையாம் குங்குமப் பொட்டாம்
கோலமுட னேநல்ல பொல்லுடன் கயிறும்
பார்த்தபொளு தெல்லாம் படிநடை[1] நடத்தி
பதினு யிரம்பலி பறித்தவனும்[2] நீயே
மாத்தளன் நன்னகர் வாளவந்த அண்ணமார்
மலரடிகள் பொற்பாதம் மனதிலய ரோமே. 2

1 படிநடை 2 பரிந்தவனும்

ஒட்டோர் உடுக்கிடை தம்பட்ட மல்லாரி
முள்முரசு கண்மணி முளங்குசிறு சங்கு
வட்டமாய்க் கொட்டியே வெள்ளிலை அடைக்கால்
... ...
மகிளவினொரு பலதேங்கின் இளநீரும் மாக
மிக்கதோர் பிணிமாற வேணுமென் றெண்ணியே
... ...
கற்பான வெளிவாள் வரும் அண்ணமாரே.[1] 3

அலையாளி எதிர்கொண்ட கொக்கிளாய் வெளியாம்
ஆனசக லாத்துவெளி குடிகொண்டு நிற்பாய்
சிலையான வில்லம்பு வரிசைவா ளீட்டி
சேவுகப் படையாளர் முன்கொண்டு நிற்பாய்
மலையாக வருபவர்கள் எதி ருனக்கே தென்று
மதகரி வெள்ளானை மேல்ஏத்தி வருவீரே. 4

★

வதனமார் சிந்து

கங்கையணி யுஞ்சடில மீதினி லிலங்க
கருணைபெற வேவந்த கஞ்சமலர்க் கண்ணன்
செங்கை நெடுமால் திருமங்கல[2] பதத்தை
தெண்டனிட் டேநல்ல சிந்துகவி பாட
பங்கயனை னும்புரவி நாவில் விளையாட
பவளவாய்ச் செல்வியும் பன்னுதமிழ் மாதும்
வெங்கரி முகன்பிள்ளை வெம்பிறைக் கோடுடைய
விக்கினேஷ்வரன் பாதம் நித்தமய ரோமே. 1

1 வடிவுசெறி பலதேக்கு இளநீருங் கூட
வெட்டிமுகி ளைத்திறந்தே மடையில் வைத்து
மிக்கதோர் பிணிமாற வேணுமென் றெண்ணி
... ...
கற்றவர்கள் குலதெய்வமாய் வந்துதித்தார்
கற்பனைவெளி வாழுவரு மண்ணமாரே.

2 திருமங்கையர்

சீர்மேவும் வேதியர் குலத்திலொரு மாது
செங்கைநெடு மால்திருப் பாதமலர் போற்றி
பேர்மேவும் பிள்ளைதர வேணுமென்று ஒத
பெருமாள் பெருந்தபசு பெற்ற பிரதாபன்
தார்மேவு திருமார்பும் அனந்தன் னதாக
சங்கைபெறு மங்கலர்[1] பிறந்த சமூகத்தில்
பார்மேவும் நாற்றெரு வதனமார் அப்போ
பரராசரும் வந்து சூழ்ந்தடி பணித்தார். 2

பணியா பரணமொடு பொன்முத்து மாலை
பதக்கமொடு சங்கிலி சரப்பளி பொன்னாலே
அணிஅணி யாகவே அவரவர்கள் பூண்டு
அழகான பட்டாடை சட்டை சகலாத்து
கெணியாத மதவீரன் கீர்த்திப் பிரதாபன்
கிருபை யுடனே அலங்கார வடிவாகி
மணிமாலையும் முன்கை வாகுபுரி வளையலும்
வகை வகையாய் வதனமார்க் களித்தனரே. 3

மதன[2] கமலம்போ லிளந்தாரி வீரர்
வரிசையுடனே வெகுமந்து கோடாலி
பதனமுள்ள கைக்கத்தி தொங்கனி வில்லம்பு
அவரவ ரும்பல பலஆயுத மெடுத்தார்
பதனமுட னேபெரும் படைநாய மாரும்
பாங்குடனே சவராறு தனில்வந் திறங்கி
விதனமுட னேநல்ல இணைலிது என்று
இதமாகவே[3] வீற்றிருந் தருளி னரே. 4

வீற்றிருந் தேகாலி பார்த்துவா வெனவே[4]
என்றதொரு மொளிபகர அன்றுநயி னரும்
ஏற்றமுள்ள கெங்கை குளிக்குது காலி
இப்போது கண்டோமென் றோடியே சொன்னர்
ஓடிவந் தேகாலி கண்டவர் உரைக்க
உற்றபுகழ் மங்கலரும் மெத்த மனதாகி

1 மங்கையர் 2 வதன 3 இனிதாகவே 4 என்றே

கோதியே குளல்கச்சை ஓதியிடை கட்டி
கொண்டாடு மந்துவெளு நன்றாயெ டுத்து
ஆடியே சங்கீர்த பவனிகொண் டாடி
அவரவர் கச்சைகட் டிப்பொல்லு மெடுத்து
தேடிவடி வாகத் திரும்பி அவர்வந்து
சீக்கிரம் காலிதனைத் தாக்கினா ரங்கே. 5

அங்கவர்கள் ஆலாத்திக் கிளையதுகள் கூடி
ஆளுக்கொரு மீன்எடுத்து உறிஞ்சிறது போல்
தங்குபுகள் வில்லம்பு பாச்சிப் பரிந்து
தயவாக[1] வேமருத நிளல்வீற் றிருந்தார்
பாங்குட னேதேனிருக் கக்கண்டு நயினாரும்
பரிவாக வேஏறி வெட்டி இறக்கி
வந்தபின் மங்கலர் பெரும்படையை நோக்கி
வாகுடனே தேன்பகிர வாருமென் றாரே. 6

சிந்தை மகிளச்[2] சகலபேருமோ ரிடத்தில்
சிங்கார மாகவே வீற்றிருந் தருளினார்
மந்திரகிரி போலவே மார்புயத் தழகன்
மாடுமேய்க் கும்இடைய னோடியே வந்து
விந்தைசெறி வெண்சாம ரைத்தலைவ னான
வெள்ளைக் கிடாவந்தார வீதிவிடுதே யென்றான். 7

வீதிவிடு மென்றுமவர் ஓதிமொளி சொல்ல
மெத்தவே மனமது சுத்தமகிள் வாகி
கோதிக் குளல்கச்சை ஓதியிடை கட்டி
கொண்டாடு மந்துவெழு நன்றாய் எடுத்து
ஆடியே சங்கீர்த பவனி கொண்டாடி
அவரவர் கச்சைகட் டிப்பொல் லெடுத்து
தேடிவடி வடியாகத் திரும்பியவர் வந்து
சீக்கிரம் காலிதனைத் தாக்கினா ரங்கே. 8

1 தயவுட 2 சந்தோஷமாகவே

வந்துகரு வேப்பங் குளந்தனி லிறங்கி
மாலையாம் நேரமதில் மாடுகண் டாரே
ஒடுகெனவே வளையஇரு பொழுதுபட வேதான்
கதிரவ னெழுந்துவரும் நேரமது அறிந்து
விந்தையாய் வெள்ளைக் கிடாவினையும் தேடி
வீதிகள் எங்கும் விரைந்தடிகள் பார்த்து
அந்த அடியை அடர்ந்து தொடர்ந்து
அந்தர தலங்கள் அடங்கலும் பார்த்து
வந்து மின்னேரிக்[1] குளந்தனில் இறங்கி
மாலையாம் நேரமதில் மாடுகண் டாரே. 9

படுத்தான் தலைமந்து பாச்சல் முனைபாய
பதைத்தார் விளுந்தார் பதைத்தார் பகட்டால்
எடுத்தாரே கைக்கத்தி துடிக்க முன்வாலை
இளுத்தா ரறுத்தார் இருந்தார் கால்மாட்டில்
காலிகள் மேய்க்கும் இடையனும் பட்டபின்
கண்ணனும் எழுந்து திருவண்ண முகிலானை
ஆவிப் புடைசூழ் இலங்கைக் கதிபன்
ஆயாங் குளலும் ஒர்அம்பும் கொடுத்தான்
நாலுதிக் கெங்கிலும் காவலாய் நில்லென்று
நலமாகவே திங்கள் மும்மாரி பொளிய
மாலருளிக் கந்தளாய்க் குளம்வாளு கின்ற
மங்கல நாயன்மார் பூசைகொண் டாரே. 10

கருமுகில் வண்ணமா மாயனும் வாழி
கண்டி மகாராட்சிய மன்னனும் வாழி
தருவாழி தம்பலகாம நகர் வாழி
சாதியாம் வதனத் தலைவரும் வாழியவே. 11

★

1 கந்தளாய்

நாச்சிமார் சிந்து

சுற்றமுள்ள நொருவதனி லேசுனைக ளாடி
கரிகொண்ட நந்திவெளி தனையும் கடந்தே
எத்தலம திக்கவரு வட்டுவா கல்லதனில்
இயல்பாக வேயேழு பாண்டிவிளை யாடி
வட்டு வாகல்லை வளைந்துவரு வாரும்
வாயாலே வெண்ணுரைகள் தள்ளிவரு வாரும்
முட்டரு தும்பொதி கொள்ளவும் வேணும்
இயலான வட்டுவா கல்நாச்சி மாரே 1

கட்டக் கயிறுகொண் டோடிவரு வாரும்
கன்றுகா லிகறவை தேடிவரு வாரும்
முட்டக்கு முன்னங் குனிந்தோரு மில்லை
முன்ன வருங் காரியம றிந்தோரு மில்லை
கட்டுவார் கட்டிவரு தானியப் பொதிதனை
தாழையடி யோர்கண்டு கண்கலங் கினரே
எட்டுவார்க் கெட்டாத கச்சிலாய் ஆறு
இருகரை திரண்டுமுகில் பரவியோ டிடவே
வட்டுவா கல்லுறை ஐயனரு ளாலே
வற்றியே நிறையாறு வடிவதாய் விடுமே. 2

தித்தியென வேயுலகை வலமாக வந்து
செல்லமரு தடிதன்னி லல்லறநின்றாய்
முத்திதரு நொருவடியில் நாச்சிமா ரெனவினைகள்
முடுகாது நோய்பிணிகள் அணுகாது வாழ்வில் 3

வட்டப் பரம்பாம் தவித்தில்லை யடியாம்
மாறான பாண்டியர்கள் நீறுவிளை யாட
எட்டுத் திசைக்குமோர் மெய்க்கதிர் விளங்க
ஏழையடி யாரையும் தற்காத்துக் கொண்டு
பட்டுப் பனப்பீடவை சட்டைசக லாத்து
சொல்லவொண் ணாததோர் துயில்கட்டி யாளும்
கட்டவரு காலனையும் வெட்டி அகற்றுவாய்
காத்தருள் வட்டுவா கல்நாச்சி மாரே 4

காலிற் சிலம்பு புலம்பி அளம்ப
கைவளை சில்கலீல் கலீல் என
மேலிற் சிகப்பொளி மலர்போல் விளங்க
விளையாடி யேயுலகை வலமாக வந்தாய்
காலிற்கு நல்வயினல் என்றுசொல் லிப்புதுமை
கருணையுட னீராவி யருகினி லுறைந்தாய்
சோலிப்ப டாமலே நன்மை தா தாயே
துய்ய நாகஞ்சோலை வான்நாச்சி மாரே. 55

★

முறிகண்டியான் சிந்து

உருகு மாந்தற் குதவு முறிகண்டி
ஒற்றைக் கொம்பன் இருக்கும் தலமாம்
பெருகு கோட்டைக் குலம்பன் மணற்குளம்
பேசுங் கீர்த்தி உயிலங் குளமாம்
அருளி சூழ்ந்த பனங்காமந் துணுக்காய்
அவனியோர் புகழாலங் குணமாம்
எல்லை சூழ்ந்த புளியங் குளமாம்
இலங்கை நாட்டின் விராலிப் பிலவாம்
துங்காம் பண்டிவெட்டும் வன்யா குளம்
சூளும் முன்ளியவளை நாடெங்கள் நாடே. 2

தூங்கக் காண்பது மாம்பழச் செற்று
சுளலக் காண்பது பூஞ்சிலை மந்து
திங்கக் காண்பது கெல்லையன் முல்லை
தியாக சூரியர் ரெடெங்கள் நாடே 3

☆

ஐவர் சிந்து

திருமருவு குருநாடு தனிலரசு[1] புரியும்
செய்யமதி வங்கிஷத் தைவர்தம் மீதில்
கருதரிய செந்தமிழ்க் கவிதை உரைபாட
கரிமுவ னும்அவன் தம்பிமுரு கோனும்
அருள்பெருகு மிருசெவியும் ஐந்துநற் கரமும்
ஆனகுருமுனி சொல்ல மேருதனி லேதான்
பருதிநிகர னையபொற் பாரதம் வரைந்தோன்
பாதமலர் என்னுளும் நாவில் அயரோமே; 1

மனதுவெகு நிறமுடைய ஐவர்தம் மீதில்
மதுசூடு வேணியனு மவனுடைய மாதும்
வனசமலர்[2] மீதில்உறை அவனும்மா யவனும்
வளர்தமிழின் பாமாலை வகைதனைவ ழுத்தி
புனமதினி லேவேங்கை மரமாகி நின்றுய்
புனமாது தெய்வானை குறமாது தானும்
அனையதொரு மங்கலரும் அதிலுறையும் மாதும்
அன்புடனே நிதமும் அருள்புரிகு வோரே. 2

அருள்பெருகு குருநாடு தனிலரசு புரியும்
ஐவர்நூற் றொருவரும் அரசாளும் நாளில்
பரிவிட னேசூது விளையாடவாரு மென்று
பாண்டவ ருடன்துரி யோதனன் உரைக்க
சுருதிமொழி தவருத தருமரும் அப்போ
தொல்லுலகில் ஒட்டமிட் டேசூது பொரவே
வஞ்சசகு னிசூது தவருய்உ ருட்டியே
மாநகரி ழந்துமட மாதைவைத் தனரே. 3

மடமாதை யீடுவைத் தேசூது பொரவே
மறுகாலு மேசகுனி தவருய்உ ருட்டி
திடமாக வேசூது இழந்தவர் இருக்கையில்
சேயிளையு மேசூது பொரமனதில் எண்ணி

1 வனசமறை 2 வகை ஆரசு

உடல்மீழ வேகூது பொருதுமென் றேதான்
        உலகுதனை மீழவே பொரவாரு மெனவே
கடிகமழ் மின்னுருடன் பொருதுவதில்லை யென்று
        கன்னி குமாரனும் உன்னி ஓ தினனே. 4

ஓதரிய துரியோதனன் தானும் அப்போ
        உயர் தம்பி துச்சாத னன்தன்னை அழைத்து
மாதுடைய துகிலதனை நீர்உரியு மெல்ல
        மாயவனும் அன்னேர மேமல மிரங்கி
கோதுகுழல் மாதுதுகில் உரிய உரியாமல்
        கூறரிய சாபமவர் தானளித்தனரே
வேகமொடு வீமனும் தெண்டதை எடுத்தான்
        வில்லரிய பார்த்தனும் வில்லெடுத் தனனே. 5

வில்லை எடுத்தவர் எளும்பஉன் னுகையில்
        வேதமுள்ள தருமரும் தானதை விலக்க
முல்லைநகை முரவாள் அப்போ தெழும்பி
        மோதுசமர் தன்னிலே வீமனுடை கையால்
சொல்ல உரை செய்துதுச் சாதனன் நெஞ்சில்
        கூறரிய கால்மிதித் தேநின்று தானும்
சொல்லரிய கூந்தல் முடிந்திடுவ னென்று
        துரோபதையும் அவ்வுரையை ஓதிநின் றனனே. 6

நின்றவுட னேதுரி யோதனனும் அப்போ
        நேசமுடனே காலில் ஏகுமென் றனரே
தண்டமிழ் புகள்பெருகு தர்மரோடு நால்வரும் 7
        தாள்குளலு மேவளம் தன்னிலே கினரே.

வெற்றிபுனை[1] நற்றினைய நீராளு[2] மென்று
        மேவுதுரி யோதனன் தன்னிடம் அனுப்ப[3,4]
இடதுசெய்ய வேணுமென் றேதினை தன்னை
        எரிணத லிலேகருக வேவறுத் தவனும்
மடமாதி னிடமாக நல்லதினை யென்று 8
        வல்லதுரி யோதனன் சொல்விவிட்ட டனனே.

1 வென்றிபுகழ் 2 நீயருளு 3 துரியோதன னிடத்தனுப் பினரே
4 திடமான நற்றினையை நீராளு மென்று - செய்யகுந் தாதேவி ஐயமுற வோதை

விட்டபின் திணைதன்னை வாங்கியே வந்து
விறலுடைய தருமரிட மேகொடுத் திடவே
இட்டமுட னேநல்ல திணையென்று தருமரும்
இன்பமுட னேதிணை தன்னை விதைக்க
இட்டமுட னேதிணை முளைத்தே எழும்பி
ஏகமுறு தொண்ணூறு நாளதில் விளைந்து
நட்டனைய தாகவே நல்லுண வருந்தி
நாயகியு டன்காலில் வாழுமந் நாளில் 9

பொருந்துதிநல் புள்ளெடுத் தேதர்மர் வாழும்
பூங்கா வனத்திடை கொண்டு சென்றனனே
பருந்துகமழ் சோலைவாழ் தருமரும் அறிந்து
பாகனைய பார்த்தனிட மீதுரைத் தனரே
பொருந்து செறிவில் வளைத்து புள்விளவெய்து
புகள்வு செறி மன்னுயிர் மீளவிட் டனனே: 10

மீளவந் தேதுரி யோதனனு மப்போ
மேவுபுகள் காளமா முனிதனை அழைத்து
நீள்புவி தன்னிலே பூதமது தன்னை
நீயேகி ஐவர்தனை யேவலையு மென்ன
காளநிற மானமுகில் மாயனு மறிந்து
காலனைய ழைத்துமே கானகமீ தேறி
தாழ்வு வராதபடி ஐவர்தனை நீபோய்
தற்காரு மென்று சொல்லி மாயனேகினனே 11

ஆளவே மாயவனு மருச்சுனனு மப்போ
அனைவரு மறிந்துகுரு நாடதனில் வாடி
வாழவே சக்கர வியூகமது செய்த
வகையான பொற்சண்டை வெடிச் சண்டைசெய்தார்
வாதுதுரி யோதனன் தான்மிக இருக்க
வரிசைபெறு கன்னனும் வகைதனை வழுத்தி
நொத்தோ திமிந்தோ துரோணரு மப்போ
சுருதிபெறு மைக்காள முகிலூர்தி வரவே: 12

புரிவசுர னின்வரவை அரனும் அறிந்து
போதர வாகவே விஸ்வேடனாய் வரவே
வாகுபெறு இயமனும் பன்றியாய் வரவே
வரிசை பெறு வேடனும் வில்லால் அடித்து
பாசுபதம் நல்கிப் பரமசிவம் போனபின்
பாரதம் முடித்துலகை ஆளவந்தனரே.

குளக்கோட்டான் சிந்து

சுருதி மொளி தவறாத மனுநீதி மன்னன்
சோளனு தவுஞ்சோள கங்காள கண்டன்
பிருதிகுல மன்னன் குளக்கோட்டு ராசன்
பண்டுபூதப் படைகள் கொண்டுசென் றனரே
கருதரிய கல்லு மண்ணும் சுமப்பித்து
கடலும் மலையும் போலவே குளங்கட்டி
வருஷமிரு சென்னல் விளையப் பன்னிரண்டு
மாதமும் புனல்பாய மதவுசெய்தனரே. 1

செய்தபின் தென்கோண நாதருக் கென்று
சிலையும் எழுதிக் குளக்கட்டதில் நிறுத்தி
மாரியை அடக்கிவரு சத்தியை நிறுத்தி
மங்களா தேவியைக் காவலாய் வைத்து
கைதவனை அன்று பெலி யுண்டபத் தினியையும்
காவலாய் நில்லென் று கட்டளை புரிந்தாய்.
பூவொடு பளம்பாக்கு வெற்றிலை அடைக்காய்
பொங்கு பால அமிர்தம் உண்டாக்கினரே. 2

குருவிச் சிந்து

பூதலம் புகழ்பெருகு தனிக்கல்வயல் தன்னில்
புனைக்குருவி வாராம லேகாவல் செய்வாய்[1]
ஆகலம் புகழுமம் பாவினிசை பாட
ஐங்கரனும் ஆறுமுகனும் அம்மனுந் துணையே
நாதமொடு கீதமும் ஓதுநான் மறைகளும்
நாலுலகும் ஒன்றாக நின்றஉமை யவளே
மாதவன் தன்திருவும் மாமகளின் நாமகளும்[2]
வந்துதவு[3] அனுதினமுஞ் சிந்தனை செய்வோமே. 1

புகழ்பெருகு கலிகால சோளகுல ராசன்
பூமியில் விதைக்கவித் தில்லாத போது
மகிழ்வினொடு கிளியுரு வமாகிப்பறந்து போய்
வானுலகு சென்றுநெற் கதிர்கொய்து வந்து
அகிழங்க னிக்குநித் தியபூசை புரியவும்
ஆதியர்கள் வேதியர்கள் அன்னவெடி தீரவே[4]
திகள்பெருகு காராளர் பயிரிட்டு விளைவித்த
செந்நெல்லை விரும்பியே தின்னாமல் ஏகாய். 2

கார்பெருகு[5] கற்பகக் காவுடைய மன்னவன்
காசினியில் மன்னவரி லார்பெரிய ரெனவே
சந்திரமதி கேள்வன் அரிச்சந்திர னெனவும்
தயவினுடன்[6] மாமுனி வசிட்டனுரை செய்தான்
இந்திர சமூகந்தன்னில் இருந்தமுனி வன்சபதம்
இட்டமொழி தவறாமல் எரிகமண் டலமே
வந்துபுவி மீதில் விழவே பறவை மிருகங்கள்
வயல்புல மளித்தமதி யோஇங்கு வந்தாய். 3

மறவரொடு துளுவர் பப்பரவரொடு[7] கானவர்கள்
வலைகயிறு கட்டியே விசைபொறிகள் ஏத்தி
குறவர்சிறு பறவைபட வேகண்ணி குத்தி
கொண்டது பயப்பாடு கேட்டறிந் திலையோ

1 செய்தாய் 2 நாமகளும் மாமகளும் 3 வந்துவந்
4 அன்னவடி திரவே 5 கந்தமிகு 6 தயவுடன் 7 பப்பரவரொடு

பிறநெரிய கரியநிற மிளகொடிய பண்டி
புனையினொடு மரைகரடி புலியுமத கயமும்
விறலெயினர் வதைசெய்து விருந்துபசி யாறவும்
வேட்டையா டினசெய்தி கேட்டறிந் திலையோ. 4

சேருடர் மனுநீதி வரைவுசெய்யா ரென்றோ
துணிவு கொண்டேமனங் கெணியாமல் வாறீர்
சென்னிஈர் ஐந்துள்ள இராவணன் இலங்கையைச்
சென்றளித்தே அனுமான் திரும்பிவரு வதுபோல்
ஓடுறீர் ஓடுறீர்[1] ஓடமன தொட்டிநீர்
ஒளிக்கிறீர் கள்ளத் தினைக்குருவி ஆய்ஆய்
குஞ்சுமத லைகள்முன்னே சப்பாணி கொட்ட
கூப்பிடு வதெனநெஞ்சில் கொட்டவும் வேண்டாம்
பஞ்சமா கொட்டிலே தட்டி யெளுப்ப
பறந்துகுரு விக்கிளைகள் அயர்ந்துவிளை யாட 5

நாகமலை கூகைமலை நடுவில்மலை பெரியமலை
நாகரா சன்வாளு யர்ந்தமலை கண்டல்
தோகைமயில் ஆடுமலை சுவாமிமலை அம்மன்மலை
சுற்றிலுள்ள தினக்குருவி ஒக்கோடி வருதே
படைத்தலம் புகள்பெருகு தண்ணிமலை கும்பகன்
பாரமலை[2] நீராவி மண்கிண்டி மலையும்
வெடுக்குநா றித்திரளு யர்ந்தமலை கல்வீடு
மேல்பத்து ஈருன வாவெட்டி மலையும். 6

கொச்சிமலை குடகுமலை கோலமலை நீலமலை[3]
கொக்குளாய் செம்மலை குருந்துமலை கண்டல்
அச்சத்தொடு நாயேறி அந்தமலை உயர்ந்தமலை
அங்கங் கிருந்துகிளை யாகவே வருதே
மாற்றலர்கள் புகழுவரு தம்பங் கடவமலை
மருவு குருவிக்கிளைகள் பலபலன விடியமுன்
காற்றும் மழையும் கலந்துவரு வதுபோல்[4]
கலகலன வேகுருவி கடிதோடி வருகுதே. 7

---

1 உண்ணுறீர் உறங்கிறீர் 2 பாரமுள்ள 3 நீளம்
4 வந்து உலாவுவது போலே

பச்சைமுளை தூவிநல்ல பவனிதன் னர் ஆலை
        பார்வையுள்ள கிள்ளைநிறம் தோகைமயில் முதலாய்[1]
நச்சுவிழி குறமாது வள்ளிபுன மீதிலே
        நாடிவந்த வதுபோல ஓடியே வருதே
மோகமது வென்நகரி கொங்கைகள் குலுங்க
        முன்கையிலிடு வளையில் சங்கிலி துலங்க
பாகனைய மொழியாள் சதங்கைகள் கிலுங்க
        பந்தடிப்பது பெண்கள் சந்தடிப்பது போல்
ஆதலம் புகன்நல்ல மாப்பாண மன்னனை
        அடர்ந்து விடைகேட்கத் தொடர்ந்து வருவதுபோல். 8

உடுக்குள்[2] நிறைந்தமலை மண்டலமு யர்ந்தமலை
        ஒருமுனிவர்[3] சென்றங் கொடுக்க மதிக்க
விடக்கொடிய அடியார்கள் நீறணிவதென்[4] நெஞ்சில்
        வெள்ளையுள்ள குருவிக்கிளை விருந்துண்ண[5] வருகுதே
கண்டிமலை தொண்டிமலை கதிரைமலை குதிரைமலை
        காளாவி சுறுளியொடு மாகாளி[5] மலையும்
எண்டிசையில் உள்ளமலை வாழும் தினைக்குருவி
        எல்லாமும் ஒன்ருய் இனங்கூடி வருகுதே. 9

கோலமலை நீலமலை குருவிமலை பெரியமலை
        கொக்கிளாய் பரந்தமலை செம்மலை குருந்தோர்
கன்னியங் குமரிமலை ஒதியமலை பொதியமலை
        தட்டாமலைத் திரளிலுள்ள குருவி முதலாய்
தோற்றமுள்ள கந்தளாய்க் குளமேவு மலையினொடு
        சொல்லரிய பூனேரி சூளுமலை யாளம்
அஞ்சுநா ளாறுநாள் குருவியை அகற்றி
        ஆறியிரு கார்கால விளைவு வருமட்டும். 10

---

1 முதலாம் 2 வருவகிலம் 3 குறுமுனிவர்

4 படியரசர் மீதிடுவதென 5 மிகுந்துண்ண 5 மேகாளி

பிஞ்சுயிரு என்று பாராம லேவெட்ட
        பெண்டுகள் பிறகே துரந்துசூடு கட்ட[1]
கைக்கொச்சை யடிக்கவும் கவனெறிகள்[2] வீசவும்
        கால்நோக ஓடவும் காரிய மதேதோ[3]
தொக்கத் தொகக்குருவி ஓலமிட் டோட
        சொல்லுவேன் ஒருபுத்தி எல்லோரும் கேளும். 11

பந்தலொடு வெயிலுக்கு இருக்கச் சிரும்பியும்
        பார்வையிட்டே[4] குருவி அகலவிட் டோட
திட்டமுடனே கொடியை வெட்டி முடிந்து
        சிறக்கவே குழைக்கொம்பு ஆலாத்தி தூக்கி
கட்டை கவைகம்பு இடையிடையே நாட்டி
        காலோய்ந் திருக்கவும்[5] கட்டடா கொடியை
கும்பமலை தம்பமலை கொட்டியா ரத்துமலை
        கோணேசர் வாழுமலை[6] குருவிக்கிளை முதலாய்
ஆய்ஆய் யெனக்குருவி ஓயாமல் வருகில்[7]
        அசையாமலே இருந்து ஆட்டடா கொடியை. 12

மாதவன் திருவாணை முப்பத்து முக்கோடி
        மாதேவ ராணை வதிட்டமுனி ஆணை
சிவனாணை என்னுடைய[8] செங்காவல் மீறிடில்
        செம்பருந்தின் பசிக்கிரை அருந்திடுமே[9]
அங்கெங்கு இருந்துதான் அங்கங்கு[10] போனாலும்
        சங்குபாலகர் ஆணை அங்கங் ககலும்[11]. 13

*

1 கொச்சிமலை குட்குமலை குறுமுனிவர் வாழுமலை
        கொல்லிமலை தெல்லிமலை கோங்குமலை யாளம்
2 கவரிகள் 3 காரணமா தாமோ 4 பறவையொடு 5 நிற்கவும்
6 மலைவாழும் 7 வருகுதே 8 இவனுடைய
9 செம்பிராந்தின் பசிக்கிரையாகுவீரே 10 அங்கு 11 அங்கு போவீரே

ஒப்பாரி

வேலப்பணிக்கர் பெண்சாதி அரியாத்தையின் வீரவரலாறு.

குமரபுரத்திலுள்ள (முல்லைத்தீவுமாவட்டம்) குமிழமுனையில் மதயானையை வென்ற மாதரசி வேலப்பணிக்கர் பெண்சாதி அரியாத்தையின் வீர வரலாற்றை ஒப்பாரி மூலம் பாடப்பட்டுள்ளது. பெரிய வெளியிலமைந்துள்ள 'கண்டல்' என்னும் இடத்தில் மதயானையைக் கட்டிய நிகழ்ச்சி நடைபெற்றது. இதனால் அந்த இடம் இன்றும் "கொம்பன் படுத்த கண்டல்' என அழைக்கப்படுகின்றது.

வரலாற்றைச் சுருக்கமாக நோக்கில், அப்பொழுது குமுழமுனையை சின்ன வன்னியன் என்ற குறுநில அரசன் ஆண்டுகொண்டிருந்தான், தமது பகுதியிலுள்ள யானைகளைப் பிடித்து வெளிநாடுகளுக்குக் கொடுத்துப் பண்ட மாற்றுச் செய்வது அவனது வழக்கம். "யானைப்பணிக்கர்" என்னும் குலத்தவர்களின் துணையை நாடுவதும் வழக்கம். அதனால் இத்தகைய பணிக்கர் குலம் செம்மலையில் (குமுழமுனைக்கு அருகில்) வாழ்ந்தது.

ஒரு சமயம் ஒருவராலும் பிடிக்கமுடியாத கொம்பன் யானை ஒன்றினை எப்படிப் பிடிக்கலாமென்று பணிக்கர் எல்லோரும் கூடி யோசித்தனர். ஒருவன் கூறினான் "வேலப்பணிக்கன்தான் பிடிப்பான்" என்று. மற்றொருவன் இல்லையில்லை, வேலப்பணிக்கன் பிடிக்கமாட்டான் அவனுடைய பெண்சாதிதான் பிடிப்பாள்' என்றான். கூட்டம் முடிந்தது. வேலப்பணிக்கன் மனந்தளர்ந்து போனான்.

வீடு சென்ற வேலப்பணிக்கன் சாப்பிடவில்லை. கவலையால் படுத்துவிட்டான். விபரமறிந்து வேலப்பணிக்கன் மனைவி 'அரியாத்தை' விரதமிருந்து முழுகி வார்க்கயிறு, அங்குசம் போன்ற யானை பிடித்த தளபாடங்களுடன் வெளிப் போந்து கொட்டுக்கிணற்று விநாயகரை வணங்கிவிட்டு காலடி எடுத்து வைத்தபோது புடையன்பாம்பு குறுக்கறுத்து வழிமறித்துக் கிடந்தது. நாகதம்பிரானை வழிபடவே பாம்பு வழிவிட்டது.

சென்ற அரியாத்தை கண்டலை அடைந்தாள். கோபங்கொண்ட யானை துதிக்கையை உயர்த்தியவாறு அரியாத்தையை நோக்கி ஓடிவந்தது, 'ஆதி ஐயனறிய ஒன்றும் செய்யாதே' என்று அரியாத்தை சத்தியஞ் செய்யவே யானை துதிக்கையை உயர்த்தி முட்டுக்காலில் இருந்து தலை தாழ்த்தி வணங்கினது. இதுதான் சமயம் என்று அரியாத்தை வார்க்கயிற்றைக் கொழுவி, ஏறி, யானையின் முதுகில் இருந்துகொண்டு பண்டாரவன்னியன் வளவில் (குமுழமுனையில்) யானையைக் கட்டினாள்.

சின்னவன்னியன் அரியாத்தையின் வீரத்தைப் புகழ்ந்து பாராட்டி பரிசளித்து விருந்தளித்துக் கௌரவித்தான். விருந்தின் முடிவில் யாரோ ஒரு பணிக்கன் அவமான உணர்வில் வெற்றிலையில் நஞ்சைத்தடவிக் கொடுக்கவே ஒன்றுமறியாத அரியாத்தை அதை உண்டு சிறிது வேளையில் மயங்கிவிழுந்து இறந்துவிட்டாள். யானையானது கட்ட நெருங்குவாரின்றி கட்டிய இடத்திலேயே மாண்டுபோய்விட்டது. குமிழமுனையிலுள்ள புளிய மரத்தைச் சுற்றி யானை நடந்த தடயத்தை இன்றும் காணலாம்.

தகவல்: குமுழமுனை தெய்வேந்திரம்

வேலப்பணிக்கர் ஒப்பாரி

நாகத் திருக்கோவிலிலே என் அஞ்சுகலை நஞ்சை
யுண்ட அஞ்சாத ஐங்கரனே அன்பரே ஆதரவே
அங்கே நிற்குதாம் நல்ல கொம்பன். 1

கண்டவுடன் வன்னியாருக்கு என் அஞ்சுகலை
நஞ்சையுண்ட அஞ்சாத ஐங்கரனே அன்பரே
ஆதரவே அதை ஒரு காரணமாய்ச் சொனூர்கள்: 2

சொன்ன மொழி கேட்டவுடன் என் அஞ்சுகலை நஞ்சை
யுண்ட அஞ்சாத ஐங்கரனே அன்பரே ஆதரவே அவர்
ஓர்சுருள் இலை தானெடுத்து. 3

ஏழு ஊருப்பணிக்கருக்கும் என் அஞ்சுகலை நஞ்சையு
ண்ட அஞ்சாத ஐங்கரனே அன்பரே ஆதரவே அவர்
எழுதி விட்டார் ஓலைதன்னை. 4

ஓலைதனில் உள்ள செய்தி என் அஞ்சுகலை நஞ்
சையுண்ட அஞ்சாத ஐங்கரனே அன்பரே ஆதரவே
அரனே ஐயனே தஞ்சமென்று வன்னியன் முன் அன்பு
டன் முன் வந்தார்கள். 5

வந்தவர்கள் தெண்டன்இட்டு என் அஞ்சுகலை
நஞ்சையுண்ட அஞ்சாத ஐங்கரனே அன்பரே ஆத
ரவே வன்னிமறிகாறர் எல்லாம். 6

எல்லாப் பணிக்கருமாய் இன்பமுடன் தான் நடந்து
அன்புடனே நீங்கள் சென்று அந்த ஆனை கட்டி வாருமென்றார். 7

அந்தமொழி கேட்டவுடன் என் அஞ்சுகலை நஞ்சை
யுண்ட அஞ்சாதே ஐங்கரனே அன்பரே ஆதரவே
பணிக்கமார் ஆலோசனை பண்ணுவராம். 8

எங்களால் ஆகாது எங்களையாழும் சின்னவன்னிய
னாரே அது ஏழுமுளயானை அல்லோ. 9

அது கோபமுள்ள யானையது எங்களை ஆழும் சின்ன
வன்னியனாரே அது குளறுகுதே மாமுகில் போல் இந்தஆனை
கட்டிவர எங்களை ஆழும் சின்னவன்னியனாரே எங்களால்
ஆகாது எங்கள் வேலப்பணிக்கனுல் ஆகுமென்றார். 10

அதிலொருவன் நின்றுகொண்டு வேலப்பணிக்கனுல் ஆகாது
வேலப்பணிக்கன் பெண்சாதியால் ஆகுமென்றான். 11

அந்தமொழி கேட்டவுடன் என் அஞ்சுகலை நஞ்சையுண்ட
அஞ்சாத ஐங்கரனே வேலப்பணிக்கர் அவசரமாய்த்தான் நடந்தார். 12

விடுதிதனில் வந்து மெல்லோ வேலப்பணிக்கர் அவர்
வியாகுலமாய்த்தான் படுத்தார். 13

பெண்டுமவள் ஓடிவந்து என்நயிந்தை ஆண்டவனே
உமக்கு வந்த காரணத்தைச் சொல்லுமென்றாள் 14

ஒன்று மொழியாமல் என்நயிந்தை ஆண்டவனே நீரும்
உன்னபடி சொல்லு மென்றாள். 15

யானையொன்று வந்ததென்று என்உயிரே கண்மணியே
அதை அன்புடனே கட்டிவரச் சொன்னார்காண். 16

அதிலொருவன் நின்றுகொண்டு என்னுயிரே கண்மணியே
வேலப்பணிக்கனால் ஆகுமென்றான். 17

இன் ஒருவன் நின்று கொண்டு வேலப்பணிக்கனால்
ஆகாது வேலப்பணிக்கன் பெண்சாதியால் ஆகுமென்றான் 18

இத்தனைக்கோ நீர் சலித்தீர் என்னுயிரே ஆண்டவனே
எழும்பிநீர் சாப்பிடென்றாள். 19

பசியோதான் நீர்ஆறி என்நயிந்தை ஆண்டவனே
உன்னடியாள் பெண்பேதை எனக்குப் பரிவாய் விடைதாருமென்றாள் 20

யானைகட்டி வாறதற்கு என்நயிந்தை ஆண்டவனே எனக்கு
அன்பாய் விடைதாருமென்றாள். 21

ஆனைகட்டநான் போனால் என் அஞ்சுகலை நஞ்சையுண்ட அஞ்சாத
ஐங்கரனே அன்பரே ஆதரவே நான் ஒருநாளையிலே வந்திடுவேன். 22

போய் வாறேன் என்றீரோ என்னுயிரே கண்மணியே
எனக்கு இணங்கும் நாயகியே வெகு பொல்லாப்புக் காணுகுதே. 23

பத்தையிலே பல்லியொன்று என்னுயிரே கண்மணியே
எனக்கிணங்கும் நாயகியே அதுபலபலன்று சொல்லுகுதே. 24

செத்தையிலே பல்லியொன்று என்னுயிரே கண்மணியே
எனக்கிணங்கும் நாயகியே அது திடுகூறாய் சொல்லுகுதே 25

நாளும் குணமல்லவோ என்னுயிரே கண்மணியே எனக்கு
இணங்கும் நாயகியே நீர் நாளைக்குப் போமென்றார் 26

அன்றிரவு தங்கியெல்லோ வேலப்பணிக்கர் பெண்சாதி
தன் அன்பர் சொல்லைத் தட்டாமல். 27

காலம்பெற எழும்பி என் அஞ்சுகலை நஞ்சையுண்ட அஞ்சாத
ஐங்கரனே தஞ்ச வீரபத்திரனே உன்தஞ்சம் எனவே நினைத்து 28

புறப்பானை தானெடுத்து என் அஞ்சுகலை நஞ்சையுண்ட அஞ்சாத
ஐங்கரனே அன்பரே ஆதரவே என்று பொங்கிவிட்டாள் காளியற்கு 29

ஏழுசுருள் வெற்றிலையும் வேலப்பணிக்கர் பெண்சாதி
ஏழு எலும்பிச்சைக் காயும் தானெடுத்து. 30

மான்வாற் கயிறு எடுத்து வேலப்பணிக்கர் பெண்சாதி
அரியாத்தை அவ வலதுகையில் பெலன் பார்த்தா 31

யானை கட்டப் போறதற்கு என் ஆசைத்துரையே அரியதுரை
மந்திரியே எனக்கு அன்பாய் விடை தாருமென்றாள் 32

யானைகட்டப் போறேன் என்றீர் ஆதிவீர பத்திரனே
ஐயோ எனப் பதபதைத்து வேலப்பணிக்கர் அவர் அழுதழுதோ
சொல்லுவாராம் 33

நானிருக்க நீர்நடக்க என் ஆசை மணவியரே அன்னமே
ஆருயிரே எனக்கு நன்றாய் இருக்கவில்லை 34

போகவேண்டாம் என்று சொன்னால் என்நயிந்தை ஆண்டவனே
இந்தப் பூலோகத்தார் ஏசுவரே 35

தடுத்து மறியாதே என்நயிந்தை ஆண்டவனே நீரும்
ஒரு தாமதங்கள் சொல்லாதே 36

ஒன்றுக்கும் அஞ்சாதே என் நயிந்தை ஆண்டவனே
நீரும் போற்றி விடைதாரும் என்றாள் 37

ஐயன் கிருபையுண்டு என்னுயிரே கண்மணியே எனக்கு
இணங்கும் நாயகியே உனக்கு ஆண்டவன் சித்தம் உண்டு 38

போய் வாரும் என்று சொல்லி வேலப்பணிக்கர் அவர்
பொல்லையுமோ கைகொடுத்தார் 39

ஓடிநடந்தல்லவோ நான் அடியாள் பெண்பேதை நானுமொரு
நொடியில் வந்திடுவேன் 40

தாள் பணிந்து தெண்டனிட்டு என் அஞ்சுகலை நஞ்சை
யுண்ட அஞ்சாத ஐங்கரனே அன்பரே ஆதரவே கஞ்சுவீரபத்திரனே
உன் தஞ்சமென நடந்தாள் 41

போறவழியிலே என் அஞ்சுகலை நஞ்சையுண்ட அஞ்சாத ஐங்கரனே
அன்பரே ஆதரவே ஒருபுற் றெழுந்த நாகமொன்று 42

சீறப்படமெடுக்க என் அஞ்சுகலை நஞ்சையுண்ட அஞ்சாத ஐங்கரனே
என் அன்பரே ஆதரவே அரியாத்தை பதைபதைத்து நடுங்கிநின்றாள் 43

நாடறியேன் காடறியேன் நாகதம்பிரானாரே நான் அடியாள்
பெண்பேதை எனக்கு நற்கிருபை தாருமென்றாள் 44

பணிக்கமார் எல்லோரும் என் ஏகபராபரனே நாகதம்பிரானுரே
அவர் பயந்துவிட்டார் யானைகட்ட 45

பெண்பேதை கட்டவென்று என் ஏகபராபரனே நாகதம்பிரானுரே
தானும் புறப்பட்டு வந்துவிட்டேன் 46

பத்தினியாள் நானுகில் ஏகபராபரனே நாகதம்பிரானுரே
எனக்கு நற்கிருபை தாருமென்ருள் 47

அரியாத்தைதான் தொளவே அன்புடனே ஆனைகட்டி இன்பமுடன்
வரும் என்று முன்னிருந்த புற்றதனில் நாகம் அடங்கியதே 48

ஓடிநடந்தல்லவோ அஞ்சுகலை நஞ்சையுண்ட அஞ்சாத ஐங்கரனே
என் அன்பரே ஆதரவே அவஉள்ளங்கால் தொப்பளிக்க 49

வாற பொழுதிலேயோ ஆனையது மும்மதமும் தான் பொளிந்து
கைமடித்து தான்குளறி அரியாத்தை முன்பு கொம்பன் வந்து நின்றதுவே

யானையைக் கண்டவுடன் வேலப்பணிக்கர் பெண்சாதி
அரியாத்தை அவகால் கைதடுமாறி நின்ருள் 51

பாலைமரம் வீரைமரம் வேலப்பணிக்கன் பெண்சாதி அரியாத்தை
அவபடுமரத்தோடு நின்ருவே 52

காலாலே மண்ணை அள்ளி தந்த வீரபத்திரனே மாலைமருகவேல
முருகா உன்தஞ்சம் என்றுமுன் போட்டாள் 53

கற்புடையாள் நான் ஆகில் ஆனையடி ஆனையடி ஆனைமறிகாறன் மகன்
ஆனைமயில் வாகனமே உன்னையைத்தான் நீட்டுமென்ருள் 54

அந்த மொளிகேட்டவுடன் யானையடி யானையடி ஆனைமறிகாறன்
மகன் ஆனைமயில்வாகனமே அவ்வானை கையைத்தான் நீட்டியதே 55

கையாலே கைபிடித்து அஞ்சுகலை நஞ்சையுண்ட அஞ்சாத
ஐங்கரனே அன்பரே ஆதரவே அதன்மேல் கொடுமுத்தல்லவோ 56

காலிலிடு தேமலல்லோ என்ஆனையடிஆனையடி ஆனைமறிகாறன்
மகன் ஆனைமயில் வாகனமே உனதுகண், இரண்டும் நற்தேமல் அல்லோ

பொல்லை யெடுத்தல்லவோ வேலப்பணிக்கர் பெண்சாதி அவ
போட்டாளே ஆனைமுன்பு 58

பொல்லை எடுத்து என்கையிலே ஆனைமதயானையது வேலப்பணிக்கர்
பெண்சாதி நாச்சன் அரியாத்தை கையில் பொற்புடனே தான்கொடுக்க

உன்காலைத்தா கந்தா ஆனையடி ஆனையடி ஆனைமறிகாறன்
மகன் ஆனைமயில் வாகனமே நானும் கனத்த வடம் போட்டு இழுக்க

முன்னங்கால் தனைக்கிழப்பி வேலப்பணிக்கன் பெண்சாதி நாச்சன்
அரியாத்தைக்கு முடுக்கிட்டு நின்றதுவே 61

மான்வாந்கயிறு எடுத்து வேலப்பணிக்கன் பெண்சாதி
அவமனகிகுளிரப் போட்டிறுக்கி 62

முன்னங்கால் முடக்கு கந்தா ஆனையடி ஆனையடி ஆனைமதயானையடி
ஆனைமறிகாறன் மகள் ஆனைமயில் வாகனமே நானடியாள் பெண்பேதை
உன்குப்பத்தில் பாய்ந்தேற 63

முளங்காலைத்தான் மடிக்க வேலப்பணிக்கன் பெண்சாதி
அரியாத்தை அவ முன்னேநின்று தோள்பிடிக்க 64

உக்கோட்டைத்தா கந்தா ஆனையடி ஆனையடி ஆனைமறிகாறன் மகள்
ஆனைமயில் வாகனமே வேலப்பணிக்கன் பெண்சாதி யானையிட
கும்பத்தில் ஏறினளே 65

செவியைத்தாசந்தா ஆனையடி ஆனையடியானை மதயானையடி ஆனை
மறிகாறன் மகள் ஆனைமயில் வாகனமே நானடியாள் பெண்பேதை
துறட்டிதனை போட்டிறுக்க 66

செவியைத்தான் கொடுக்க துறட்டிதனை போட்டிறுக்கி
வேலப்பணிக்கன் பெண்சாதி அரியாத்தை அவ செப்பினள் ஓர் வசனம்

வன்னிமறிகாறர் எல்லாம் அஞ்சுகலை நஞ்சையுண்ட அஞ்சாத ஐங்கரனே
ஆனையயிராவதமே அவை வழிபார்த்து நிற்கிறார்கள் 68

நிற்குமிடந்தனிலோ என் அஞ்சுகலை நஞ்சையுண்ட அஞ்சாத
ஐங்கரனே அன்பரே ஆதரவே ஆனையயிரவதமே நீரும் நிமிசத்துடன்
செல்லுமென்றாள் 69

துறட்டிதனைப் போட்டிறுக்க ஆனைமதயானையது அரியாத்தைக்கு
அபயமெனக் குளறியதே 70

குளறின சத்தமது சின்னவன்னியனார் பெண்சாதி இருக்குமந்த
அரண்மனையி சேட்டதுவே 71

யானைகட்டி வாறகதை சின்னவன்னியனார் பெண்சாதி
ஆச்சரியமாய் அறிந்து 72

வன்னியனார் முன்புவந்து என்நயித்தை ஆண்டவனே
வேலப்பணிக்கன் பெண்சாதி நாச்சன் அரியாத்தை அவ ஆனைகட்டி
வாறாளே 73

வேண்டும் வரிசைகளும் என்நயித்தை ஆண்டவனே
அவளுக்கு மேலாப்பு போடுவியும் 74

பந்தலுமோ போடுவித்தார் எங்களை ஆளும் சின்னவன்னியனார்
நிலபாவாடை போடுவித்தார் 75

அன்னநடை சின்னஇடை வேலப்பணிக்கர் பெண்சாதி
அரியாத்தை அவ ஆனைகொண்டு வந்தாளே 76

ஆனைதனைக் கொண்டு வந்து என் அஞ்சுகலை நஞ்சையுண்ட
அஞ்சாத ஐங்கரனே அன்பரே ஆதரவேநீரும் அஞ்சாமல்
நில்லுமென்றான் 77

ஆத்திமரத்துடனே வேலப்பணிக்கர் பெண்சாதி அந்த
யானைதனைக் கட்டி வைத்தாள் 78

யானைகட்டி வந்தபின்பு எங்களையாளும் சின்னவன்னியனார்
பெண்சாதி நாச்சன் அரியாத்தைக்கு இருக்க கதிரை போடுவித்தாள்

வெள்ளை விருப்பித்தாளே எங்களையாளும் சின்னவன்னியனார்
பெண்சாதி அரியாத்தைதான் இருக்க மேலாப்பு போடுவித்தாள் 80

பெட்ட கத்தைத்தான் திறந்து எங்களையாழும் சின்ன
வன்னியனார் பெண்சாதி எடுத்துத்தர பட்டு வற்கமதை 81

கண்டியால் கொண்டு வந்த எங்களையாழும் சின்னவன்னியனார்
பெண்சாதி ஒரு கண்ணறைப்பட்டு மொன்று. 82

தொண்டியால் கொண்டு வந்த எங்களையாழும் சின்னவன்னியனார்
பெண்சாதி அவ தூயர்வனப்பட்டுமொன்று 83

இந்தாரும் பட்டதென்னு எங்களை ஆழும் சின்னவன்னியனார்
பெண்சாதி நாச்சன் அரியாத்தைக்கு எடுத்துமல்லோ
கைகொடுத்தாள் 84

கைநீட்டி வாங்காமல் வேலப்பணிக்கன் பெண்சாதி
மரு காரியமாய்ச் சொல்லலுற்றாள் 85

மறந்துதான் போகாதே எங்களையாழும் சின்னவன்னியனார்
பெண்சாதி எங்களை அன்பாகக் காத்தருளும் 86

ஒன்னுக்கும் அஞ்சாதே என் ஆசை அவுறுகமே ஆசைமச்சான்
ஆதரவே நான் உள்ளமட்டும் காத்திடுவேன். 87

குற்றங்கள் வந்தாலும் என்ஆசை அவுறுகமே ஆசை மச்சாள்
தோளியரே நானும் பொன் இறுப்பேன். 88

உலாந்தா மறியல் என்றால் என் ஆசை அவுறுகமே
என்ஆசை மச்சான் தோளியரே நானும் கூடவே நானிருப்பேன் 89

ஒன்னுக்கும் அஞ்சாதே என் ஆசைமச்சான் தோளியரே
இந்தாரும் பட்டதென்றான். 90

ஆபரணம் தான் போட்டு வேலப்பணிக்கன்பெண்சாதி நாச்சன்
அரியாத்தைக்கு அணியச் சிலம்புமிட்டு 91

வெற்றிலை பாக்குகளும் எங்களையாழும் சின்னவன்னியனார் பெண்சாதி
நாச்சன் அரியாத்தைக்கு வெள்ளித்தட்டில் தான் கொடுத்தாள். 92

உள்ள வரிசையெல்லாம் எங்களை ஆளும் சின்னவல்லியனுர்
பெண்சாதி உகந்துமெல்லோ தான் கொடுத்தான் 93

பதினெட்டு வரிசைகளும் எங்களையாளும் சின்னவல்லியனுர்
பெண்சாதி நாச்சன் அரியாத்தைக்குப் பாங்குடனே கொடுத்தான். 94

பத்தையிலே பல்லி ஒன்று என் ஆசை அவுறுகமே ஆசை மச்சான்
தோளியரே அது பலபல என்று சொல்லுகுதே 95

செத்தையிலே பல்லி ஒன்று என் ஆசை அவுறுகமே
ஆசைமச்சான் தோளியரே அது திருகூறுச் சொல்லுகுதே. 96

சாகத்தான் போறேனே என் ஆசை அவுறுகமே ஆசை
மச்சான் தோளியரே நானும் பிழைக்கத்தான் போறேனே. 97

ஒண்ணுக்கும் அஞ்சாதே என்ஆசை அவுறுகமே ஆசை மச்சான்
தோளியரே நீரும் வீடுபோய் வாருமென்றார். 98

இப்பொழுதுதான் எழும்பி தன்னுடைய நாயகர் வேலப்
பணிக்கருக்கு ஒரு விண்ணப்பமாய்ச் சொல்லலுற்றாள் 99

ஆனைகட்டி நிற்குது காண் என் நயிந்தை ஆண்டவனே
அதை அவிழ்த்துநீர் கொடுத்து விடும். 100

விட்டேநான் போறேன் காண் என் நயிந்தை ஆண்டவனே
நீரும் விரைவாக வந்துவிடும். 101

நடந்து சுறுக்காயல்லோ வேலப்பணிக்கர் பெண்சாதி அவ
நடுவழியில் வருகையிலே. 102

வழியில் வருகையிலே வேலப்பணிக்கர் பெண்சாதி நாச்சன்
அரியாத்தைக்கு வந்ததே பெருந்துயரம் 103

கண்ணும் துடிக்குதையோ என் ஆதி பராபரமே ஆறுமுகவேலோனே
என்னுடைய காக்கள் மிகச் சோருதையோ. 104

கண்ணும் மயங்குதையோ வேல்முருகா மால்முருகா வேல்முருகா
வேலோனே எனக்குக் கனத்த துயர் காலுதிப்போ 105

வாயும் வறளுதிப்போ வல்லிபுர மாயோனே நல்லநகர்
வேலோனே என்னுடைய வாணுள் உருகுதிப்போ 106

நடக்கவே கூடுதில்லை நாரணரே காரணரே நாகதம்பிரானுரே
எனக்கு நடக்கவே கூடுதில்லை 107

வீடுநான் போய்ச்சேர மான் மகளார் வள்ளிபர தூங்கா
வேல்முருகா சூர தூங்கா எனக்கு வழியோ தெரியவில்லை 108

இடைவழியில் நான் சாக என் ஏகபராபரனே நாகதம்பிரானுரே
எனக்கு இறைவன் கட்டளையோ 109

என் பத்தாவு மில்லாமல்ஐயோ பராபரனே உன்னடியாள்
பெண்பேதை நான் பாடுபட நீதியோ 110

தஞ்சமொருவரில்லை தற்பரனே பொற்பரனே அற்புதனே
பொற்புதனே எனக்குச் சாக்கடன் தீர்ப்பாருமில்லை 111

தன்னாடத் தள்ளாடி வேலப்பணிக்கர் பெண்சாதி நாச்சன்
அரியாத்தை அவதம்பிரான் தன்மையினால் போய்ப் படுத்தாள் 112

வெள்ளை விரித்தல்லவோ வேலப்பணிக்கர் பெண்சாதி அவ வெள்ளையின்
மேல் பொல்லை வைத்தாள் 113

படுக்கைதனில் இருந்து வேலப்பணிக்கர் பெண்சாதி அவ
அரனே எனச் சாய்ந்தாளே 114

சாய்ந்து துயரமுடன் வேலப்பணிக்கர் பெண்சாதி அவ
தலைவனைத் தான் நினைத்தாள் 115

என்காயம் முடியுமுன்னே என் கண்ணுளா காதலனே
என்நயிந்தை ஆண்டவனே நீரும் கடுகிவந்து காணுயோ 116

தரிக்க மனம் கூடுதில்லை தலைவனே என்தன் உயிர்
ததும்பித் தடுமா றுதிப்போ 117

அபத்தம் வருகுதிப்போ என்நயிந்தை ஆண்டவனே
நானுமொரு அரிய புலிக்கஞ்சிவிட்டேன் 118

ஆனைக்கும் அஞ்சாள் நான் என்நயிந்தை ஆண்டவனே
நானுமொரு அரியபுலிக் கஞ்சி விட்டேன் 119

குதிரைக்கு மஞ்சான் நான் என்நயிந்தை ஆண்டவனே
நான்ஒருகொடிய புலிக்கஞ்சிவிட்டேன் 120

மனையாள் படும்துயரம் என்நயிந்தை ஆண்டவனே நாம்
மறுபேர்க்குச் சொல்லுவேனோ 121

பாவி படுந்துயரம் என்நயிந்தை ஆண்டவனே ஐயோ
பராபரனே என்னைப் பார்ப்பார் ஒருவரில்லை 122

உனக்குச் சொல்லி அனுப்பவென்றால் என் நயிந்தை
ஆண்டவனே எனக்கு ஒரு தோளியரைக் காணேனே 123

என்று சொல்லி பெண்பேதை வேலப்பணிக்கன் பெண்சரதி
அவ இருந்து புலம்பிடவே 124

அரியாத்தை தான் புலம்பி வன்னியனார்கள் வீட்டில்
வேலப்பணிக்கர் அவர் வெகுசகுனம் கண்டாரே 125

மெள்ள எழுந்திருந்து எங்கனையாளும் சின்னவன்னியனுருக்கு
ஒரு விண்ணப்பம் சொல்லுவராம் 126

கண்ணும் துடிக்குதிப்போ எங்களை ஆளும் சின்னவன்னியனாரே
எனக்குக் கலத்தகுறி காணுதிப்போ 127

மேலும் துடிக்குதிப்போ எங்களையாளும் சின்னவன்னியனாரே
எனக்கு இப்போ வெகுகுறிகள் காணுதிப்போ 128

வீட்டுக்குச் செல்லவேணும் எங்களை ஆளும் சின்னவன்னியனாரே
எனக்கு விடைதந்து அனுப்பிவிடும் 129

போய்வாரும் என்றுசொல்லி வேலப்பணிக்கருக்குச் சின்ன வன்னியனார்
போகவிடைதான் கொடுத்தார் 130

ஓடிநடந்தல்லவே வேலப்பணிக்கர் அவர்
ஒருநொடியி வீடு வந்தார் 131

பாவிபடுந்துயரம் வேலப்பணிக்கர் அவர் பரிவுடனே ஆண்டாரே 132

பாவி படுந்துயரம் வேலப்பணிக்கர் அவர் பரிவுடனே கண்டாரே 133

என்கண்ணில் முளிக்கவென்றோ என்நயிந்தை ஆண்டவனே
கண்ணுளா காதலனே நீரும் கண்ணெதிரே வந்தீரோ 134

படுந்துயரம் பார்க்கவென்றோ என் நயிந்தை ஆண்டவனே நீரும்
பதைபதைத்து வந்தீரோ 135

நான்பட்டபாடு சொல்ல என் நயிந்தை ஆண்டவனே இந்த
நாடுலகம் கொள்ளாதே 136

ஐந்து வயதிலேயோ என் நயிந்தை ஆண்டவனே
நீரும் என்னை அன்பாய் மணம் முடித்தீர் 137

பதினாறு வயதுமட்டும் மனப்பட்சம் மறவாதிருந்தோம் 138

ஆயுள் முடியுதுகாண் என் நயிந்தை ஆண்டவனே என்
துன்பத்தை விட்டுவிடும் 139

ஆத்தி மரத்துடனே என் நயிந்தை ஆண்டவனே நானு
மந்த யானை கட்டிவைத்தேன் 140

யானை அவிட்டீரோ என் நயிந்தை ஆண்டவனே ஆருமதை
அவிழ்க்கச்சொல்லி வந்தீரோ 141

யானை அவிழ்க்கவில்லை என்னுயிரே கண்மணியே
எனக்கிணங்கும் நாயகியே எனக்கு அங்கமெல்லாம் பதைபதைத்து 142

மீண்டும் வருவேன் என்று என்னுயிரே கண்மணியே
எனக்கிணங்கும் நாயகியே நானும்விரும்பி வந்தேன் வன்னியநீரு 143

உனக்கு வருத்தமென்ன என்னுயிரே கண்மணியே எனக்கி
ணங்கும் நாயகியே நீரும் உள்ளபடி சொல்லுமென்றார் 144

எனக்கு வருத்தமென்ன என்நயிந்தை அது இன்னதென்று
சொல்லறியேன் 145

வலதுதுடை தாருமென்றாள் என்நபிந்தை ஆண்டவனே
நானும் மனமகிழ் வாய்ச் சாய்ந்துகொள்ள 163

ஆருயிரே ஆதரவே ஆசைமட மாமயிலே உன்னுடைய
இன்பமது திருமட்டும் 164

வலதுதுடை மேல்கிடக்க வேலப்பணிக்கர் பெண்சாதி
அரியாத்தையுடைய சீவன் ஒரு வண்டாய்ப் பறந்ததுவே 165

காலும் எறிந்தாப் போல் வேலப்பணிக்கன் பெண்சாதி அவ
கண்ணும் முழித்தாப்போல் 166

வாயால் நுரைதள்ளிடவே வேலப்பணிக்கன் பெண்சாதி
அரியாத்தையுடைய வாளுள்முடியுமுன்னே வேலப்பணிக்கர்
மண்மேல் விழுந்தழுதார் 167

யானை கட்டம் போனடத்தே ஆதரவே ஆருயிரே ஆசைமட
மாமயிலே உனக்கு ஐயங்காச்சி பட்டதுவே 168

உனக்குப் பேய்தான் பிடித்ததுவோ என் பேரி பெரியநாயகியே
நீர் உடைய தேவியரே உனக்குப் பெல்லிப்பேய் விட்டிலையோ. 169

கண்விழித்துப் பாரீரோ என்னுயிரே கண்மணியே எனக்கிணங்கும்
நாயகி நீரும் என் முகத்தைப் பாரீரோ. 170

ஆயிரம் யானைப்பணிக்கர்என் ஆசைக்கிளியே அரிய கயிலாயமே
பொன் தேன் மொழியாளே உன்னை அனுப்பிவிட்டார் என்னிடத்தில

என்னமோ நானறியேன் எனக்கின்பமுள்ள தேவியரே
பணிபுபோலோவியமே
ஏதுதான் செய்வேனோ என்னையவர் தானறிவார் 172

இந்தஉலகத்திலுள்ளவர்கள் ஏதுக்குப் போதுமென்றார். 173

உந்தன் பசாசுகளை உத்தமியே பத்தினியே
சித்திரமே தேவியரே நானும் ஒரு மிக்கதி தானனைப் பேனே. 174

அந்தத்துக் கோவனத்தில் என்னுயிரே கண்மணியே எனக்கிணங்கும்
நாயகியே நானும் அறுதி என்று அனுப்பிவிட்டேன். 175

கோட்டிலே அல்லாதே என் கோலக்குடிவானே வாலைப்புதுமயிலே
எனக்குச் சினம்தீராதே. 176

உன்னையுமே கொண்டவனர் என்னுயிரே கண்மணியே
எனக்கிணங்கும் நாயகியே நானும் உடனே அறிந்தேனென்றால். 177

உன்னுடனே கொண்டுவந்து எனக்குற்ற துணைவியரே வெற்றி
மனைவியரே நானும் உடனே வதைத்திடுவேன். 178

உன்னோடும் பறப்பதல்லால் எனக்குற்ற துணைவியரே வெற்றி
மனைவியரே நானுமிந்த ஊரிலிருப்பேனோ. 179

நீயே என் பெண்சாதியாயிருந்தால் நான் எடுத்து நான் வளர்த்து
நான் பூசும் சந்தணமே நீயென்னைப் பேணியே பாராமல் 180

கட்டையிலே உன்னைவைக்க என்கண்மணியே காரிகையே
பெண்ணரசே பேதையரே எனகிருக் கருத்தோ தெரியாது 181

பாடையிலே உன்னைவைக்க என்னுயிரே கண்மணியே
பெண்ணரசே எனக்குப் பயனோ தெரியாது. 182

பட்சங்க ளுண்டானால் அக்கினியைச் சுற்றி வந்தால்
என்னுயிரே கண்மணியே எனக்கிணங்கும் நாயகியே எனக்கன்பாய்
இடம்தாரும் 183

வந்துநான் அப்போது என்னுயிரே கண்மணியே எனக்கிணங்கும்
நாயகியே உனது வலது கைநீட்டு மெனபேனே. 184

கைநீட்டித் தந்தல்லோ என்னுயிரேகண்மணியே எனக்
கிணங்கும் நாயகியே நானும் கட்டையிலே சேர்ந்திடுவேன் 185

உத்தமியார் நீரானால் என்னுயிரே கண்மணியே எனங்கிணங்கும்
நாயகியே என்னை ஒருமித்துக் கொண்டு செல்லும். 186

வந்து வளைத்தினமே என்னுயிரே கண்மணியே எனக்கிணங்கும்
நாயகியே என்னைக் கட்டையிலே வைக்கவென்று. 187

என்கையை இறுக்கியல்லோ என்னுயிரே கண்மணியே
எனக்கிணங்கும் நாயகியே என்னைக் கட்டுகிறார் இப்பொழுது. 188

உன்னைக் கொண்டு நடக்கினமே என்னுயிரே கண்மணியே
எனக்கிணங்கும் நாயகியே உனக்குக் கொள்ளிவாய் மூட்டவென்றே

எல்லாச் சடங்குகளும் என்னுயிரே கண்மணியே எனக்கிணங்கும்
நாயகியே உனக்குப் பூமுடித்தார்கள் 190

என்னைக் கட்டியிங்கே போட்டினமே என்னுயிரே கண்மணியே
எனசிணங்கும் நாயகியே உன்னோடு கட்டையிலே சேராமல் 191

கற்புடையாள் நீரானால் என்னுயிரே கண்மணி எனக்கிணங்கும்
நாயகியே என்னுடைய கையில் கட்டுத்தெறியாதோ 192

கலங்கியழும் பொழுது வேலப்பணிக்கருடைக் கைக்கட்டுத்
தெறித்திட்டதே 193

ஓட்டம் நடையாக வெல்லோ வேலப்பணிக்கர் தன்னுடைய
உத்தமியைக் காணவென்று 194

கண்டு கொண்டேனுந்தனை நான் என்னுயிரே கண்மணியே
எனக்கிணங்கும் நாயகியே என்னுடைய கவலையெல்லாம் தீர்த்தேனே

கட்டை அழிக்கியல்லோ என்னுயிரே கண்மணியே
எனக்கிணங்கும் நாயகியே உனக்குக் களத்த நெய் வார்த்தார்கள்.

என்று சொல்லித் தானுமப்போ வேலப்பணிக்கர் அவர் ஏங்கிமுகம்
வாடி அக்கினியைச் சுற்றிவந்து என்னுயிரே கண்மணியே எனக்
கிணங்கும் நாயகியே நீரும் அன்பாய்க் கையைத்தாருமென்றார். 197

செத்த பிணந்தானெழும்பி வேலப்பணிக்கர் பெண்சாதி அவ
திட்டமாய் கைகொடுத்தாள். 198

செத்துமடிந்தார்கள் வேலப்பணிக்கரும் பெண்சாதியும்
அவைசிவலோகம் சேர்ந்தார்கள். 199

பரமசிவன் பதியில் வேலப்பணிக்கரும் பெண்சாதியும் அவை
பாங்குடனே போய்ச் சேர்ந்தார்கள். 200

முற்றும்

★

பதிப்பாசிரியரால் ஏட்டிலிருந்து பெற்று பதிக்கப்பட்ட வேலைப்பணிக்கன் ஒப்பாரிப் பாடல்களை, பவ வருடம் (1934) வைகாசி மாதம் 12 ஆம் திகதி கீரைக்கரையம்பதி வ. கணபதிப்பிள்ளை அவர்களால் வெளியிடப்பட்ட நூலுடன் ஒப்பிட்டு பாடபேதங்களுடன் இலங்கைப் பல்கலைக்கழக தமிழ்விரிவுரை ரையாளர் கலாநிதி அ. சண்முகதாஸ் அவர்களும், யாழ் - பல்கலைக்கழக மூன்றும் வருடத் தமிழ்ச் சிறப்பு மாணவியுமாகிய செல்வி த. குணலட்சுமியும் சேர்ந்து சீரில் அமைத்து கீழே தருகின்றார்கள். அவர்கள் விளக்கம் முதற்பகுதியில் தரப்பட்டுள்ளது.

வேலைப்பணிக்கர் ஒப்பாரி

நாகந் திருக்கோவிலிலே - என்
அஞ்சுகலை நஞ்சையுண்ட
அஞ்சாத ஐயங்கரனே
அன்பரே ஆதரவே - அங்கே
நிற்குதாம் நல்ல கொம்பன். 1

கண்டவுடன் வன்னியாருக்கு - என்
அஞ்சுகலை நஞ்சையுண்ட
அஞ்சாத ஐங்கரனே
அன்பரே ஆதரவே - அதை
ஒரு காரணமாய்ச் சொன்னார்கள் 2

சொன்ன மொழி கேட்டவுடன் - என்
அஞ்சாத ஐங்கரனே
அன்பரே ஆதரவே அவர் - ஓர்
சுருள் இலை தானெடுத்து. 3

ஏழு ஊருப்பணிக்கருக்கும் என்
அஞ்சுகலை நஞ்சையுண்ட
அஞ்சாத ஐங்கரனே[1]
அன்பரே ஆதரவே - அவர்
எழுதிவிட்டார் ஓலைதன்னை. 4

ஓலைதன்னில் உள்ள செய்தி - என்
அஞ்சுகலை நஞ்சையுண்ட
அஞ்சாத ஐங்கரனே[2]
அன்பரே ஆதரவே அரனே
ஐயனே தஞ்சமென்று வன்னியன் முன்
அன்புடன் வந்தார்கள். 5

வந்தவர்கள் தெண்டன் இட்டு - என்
அஞ்சுகலை நஞ்சுண்ட
அஞ்சாத ஐங்கரனே[3]
அன்பரே ஆதரவே
வன்னிமறிகாறர் எல்லாம் 6

எல்லாப் பணிக்கருமாய்
இன்பமுடன் தான் நடந்து
அன்புடன் நீங்கள் சென்று - அந்த
ஆனை கட்டி வாருமென்றுர். 7

அந்தமொழி கேட்டவுடன் - என்
அஞ்சுகலை நஞ்சுண்ட
அஞ்சாத ஐங்க னே
அன்பரே ஆதரவே - பணிக்கமார்[4]
ஆலோசனை பண்ணுவாராம். 8

1 அஞ்கரனே
2 அஞ்சாத (அஞ்கரனே) அன்பரே ஆதரவே அரனே பரனே ஐயனே தஞ்சமென்று வன்னியன்முன் அன்புடனே வந்தார்கள்
3 அஞ்சுரனே 4 அஞ்கரனே - என்று வேகு

எங்களால் ஆகாது
எங்களையாளும் சின்ன வன்னியனாரே - அது
ஏழு முழ யானை அல்லோ 9

அது கோபமுள்ள யானையது[1]
எங்களை ஆளும் சின்ன வன்னியனாரே - அது
குளறுதே மாமுகில் போல் 10

இந்த ஆனை கூட்டிவர [எங்கள்]
எங்களை ஆளும் சின்னவன்னியனாரே எங்களால் ஆகாது
வேலப்பணிக்கனால் ஆகுமென்றார். 11

அதிலொருவன் நின்று கொண்டு
வேலப்பணிக்கனால் ஆகாது - வேலப்பணிக்கன்
பெண்சாதியால் ஆகுமென்றான். 12

அந்தமொழி கேட்டவுடன் - என்
அஞ்சுகலை நஞ்சையுண்ட
அஞ்சாத ஐங்கரனே - வேலப்பணிக்கர்
அவசரமாய்த் தான் நடந்தார்[2] 13

வீடுதனில் வந்து மெல்லோ
வேலப்பணிக்கர் - அவர்
வியாகுலமாய்த்தான் படுத்தார். 14

கண்டுமவள் ஓடிவந்து
என் நயிந்தை ஆண்டவனே
உமக்கு வந்த காரணத்தைச்
சொல்லும் என்றாள் 15

ஒன்று மொழியாமல்
என் தயிந்தை ஆண்டவனே - நீரும்
உள்ளபடி சொல்லுமென்றாள். 16

யானையொன்று வந்ததென்று
என்னுயிரே கண்மணியே அதை அன்புடனே
கட்டிவரச் சொன்னார்காண். 17

1 கோலமுள்ள யானையது எங்களையாளுஞ் சின்னவன்னியனார் வேலாயுதமே
2 நடந்து

அதிலொருவன் நின்றுகொண்டு[1]
என்னுயிரே கண்மணியே - வேலப்ப
பணிக்கனால் ஆகுமென்றாள். 18

இன் ஒருவன் நின்றுகொண்டு[2]
வேலப்பணிக்கனால் ஆகாது - வேலப்பணிக்கன்
பெண்சாதியால் ஆகுமென்றான் 19

இத்தனைக்கோ நீர் சலித்தீர்
என்னுயிரே[3] ஆண்டவனே - எழும்பி
நீர் சாப்பிடென்றாள்- 20

பசியோதான் நீர் ஆறி
என் நயிந்தை ஆண்டவனே
உன்னடியாள் பெண்பேதை — எனக்குப்
பரிவாய் விடைதாருமென்றாள். 21

யானைகட்டி வாறதற்கு
என்நயிந்தை ஆண்டவனே — எனக்கு
அன்பாய் விடை தாருமென்றாள். 22

ஆனைகட்ட நான் போனால்[4] — என்
அஞ்சுகலை நஞ்சையுண்ட
அஞ்சாத ஐங்கரனே
அன்பரே ஆதரவே — நான்
ஒரு நாளையிலே வந்திடுவேன். 23

போய்வாறேன் என்றீரோ
என்னுயிரே கண்மணியே
எனக்கு இணங்கும்[5] நாயகியே — வெகு
பொல்லாப்புக் காணுகுதே. 24

---

1 ''அதிலேயொருவன்'' 'நின்றுகொண்டு'
2 'தொடர் காணப்படவில்லை 'வேறேயொருவன்' இதிலும் 'நின்றுகொண்டு'
என்னுந் தொடர் இல்லை 3 'என்நயிந்தை'
4. ஆனைகட்டப் போனால் 5. இரங்கும்

பத்தையிலே[1] பல்லியொன்று
என்னுயிரே கண்மணியே
எனக்கிணங்கும் நாயகியே — அது
பலபலன்று சொல்லுகுதே. 25

செத்தையிலே[2] பல்லியொன்று
என்னுயிரே கண்மணியே
எனக்கிணங்கும் நாயகியே — அது
திருகூறாய்[3] சொல்லுகுதே. 26

நாளும் குணமல்லவோ
என்னுயிரே கண்மணியே
எனக்கு இணங்கும் நாயகியே — நீர்
நாளைக்குப் போமென்றார்[4]. 27

அன்றிரவு தங்கியெல்லோ
வேலப்பணிக்கர் பெண்சாதி — தன்
அன்பர் சொல்லைத் தட்டாமல். 28

காலம்பெற எழும்பி — என்
அஞ்சுகலை நஞ்சையுண்ட
அஞ்சாத ஐங்கரனே
தஞ்ச விரபத்திரனே — உன்
தஞ்சம் எனவே நினைத்து. 29

புதுப்பானை தானெடுத்து — என்
அஞ்சுகலை நஞ்சையுண்ட
அஞ்சாதே ஐங்கரனே
அன்பரே ஆதரவே — என்று
பொங்கி விட்டாள் காளியற்கு. 30

ஏழுசுருள் வெற்றிலையும்
வேலப்பணிக்கர் பெண்சாதி — ஏழு
எலும்பிச்சைங் காய்யும் தானெடுத்து. 31

1 பற்றையிலே 2 செற்றையிலே 3 திடுகூறாய்
4 "—நீரும், தாளையொரு நாளுந்தங்கி"

மாண்வாற் கயிறெடுத்து
வேலப்பணிக்கர் பெண்சாதி — அரியாத்தை அவ[1]
வல ஏகையில் பெலன்பார்த்தா[2]. 32

யானைகட்டப் போறதற்கு — என்
ஆசைத்துரையே அரியதுரை மந்திரியே — எனக்கு
அன்பாய் விடை தாருமென்றாள். 33

யானைகட்டப் போறேன் என்றீர்
அதிவீர பத்திரனே ஐயோ எனப்பதை பதைத்து
வேலப்பணிக்கர் அவர் அழுதழுதோ சொல்லுவாராம்.

நானிருக்க நீர்நடக்க — என்
ஆசை மனைவியரே
அன்னமே ஆருயிரே — எனக்கு
நன்றாய் இருக்கவில்லே. 35

போகவேண்டாம் என்று சொன்னால்
என்நயிந்தை ஆண்டவனே — இந்தப்[3]
பூலோகத்தார் ஏசுவரே. 36

தடுத்து மறியாதே
என்நயிந்தை ஆண்டவனே — நீரும் ஒரு
தாமதங்கள் சொல்லாதே. 37

ஒன்றுக்கும் அஞ்சாதே
என்நயிந்தை ஆண்டவனே — நீரும்
போற்றி விடைதாரும் என்றாள். 38

ஐயன் கிருபையுண்டு
என்னுயிரே கண்மணியே
எனக்கு இணங்கும் நாயகியே — உனக்கு
ஆண்டவன்[4] சித்தம் உண்டு. 39

போய் வாரும் என்று சொல்லி
வேலப்பணிக்கர் அவர்
பொல்லையுமோ கைகொடுத்தார்[5]. 40

1 வேலப்பணிக்கர் பெண்சாதி — அவ
2 சீர்பார்த்து
3 எங்களை இந்தப்
4 ஆண்டவனூர்
5 பொல்லையோதான் கொடுத்தார்

[1]ஓடிநடந்தல்லவோ நான்
அடியாள் பெண்பேதை நானும்
ஒரு நொடியில் வந்திடுவேன். 41

தாள் பணிந்து தெண்டனிட்டு
என் அஞ்சுகலை நஞ்சையுண்ட
அஞ்சாத ஐங்கரனே
அன்பரே ஆதரவே
கஞ்சுவீரபத்திரனே — உன்
தஞ்சமெனவே நடந்தாள்[2] 42

போறவழியிலே - என்
அஞ்சுகலை நஞ்சையுண்ட
அஞ்சாத ஐங்கரனே
அன்பரே ஆதரவே - ஒரு
புற்றெழுந்த நாகமொன்று 43

சீறிப்படமெடுக்க - என்
அஞ்சுகலை நஞ்சையுண்ட
அஞ்சாத ஐங்கரனே - என்
அப்பரே ஆதரவே - அரியாத்தை
பதைபதைத்து நடுங்கிநின்றாள் 44

நாடறியேன் காடறியேன்
நாகதம்பிரானரே - நான்
அடியாள் பெண்பேதை - எனக்கு
நற்கிருபை தாருமென்றாள் 45

பணிக்கமார் எல்லோரும் - என்
ஏகபராபரனே நாகதம்பிரானரே - அவர்
பயந்துவிட்டார் யானைகட்ட 46

பெண்பேதை கூட்டவென்று - என்
ஏகபராபரனே நாகதம்பிரானரே - நானும்
புறப்பட்டு வந்துவிட்டேன். 47

1 இப்பாடலுக்கு முன்னர் பின்வரும் பாடல் நூலிலே இடம்பெறுகின்றது.
"போய்வாருமென்று சொல்லி வேலப்பணிக்கர் அவர்
போற்றிவிடைதான் கொடுத்தார்"

2 தஞ்சமென்று தான் நடந்தாள்

பத்தினியாள் நானுகில்
ஏகபராபரனே நாகதம்பிரானுரே - எனக்கு
நற்கிருபை தாருமென்ருள். 48

அரியாத்தைதான் தொழுவே
அன்புடனே ஆனை கட்டி
இன்பமுடன் வாரும் என்று - முன்னிருந்த
புற்றதனில் நாகம் அடங்கியதே[1] 49

கூடிநடந்தல்லவோ
அஞ்சுகலை நஞ்சையுண்ட
அஞ்சாத ஐங்கரனே - என்
அன்பரே ஆதரவே அவ
உள்ளந்தான்[2] தொப்பளிக்க. 50

வாற பொழுதிலேயோ ஆனையது
மும்மதமும் தான் பொளிந்து
கைமடித்துத் தான் குளறி - அரியாத்தை முன்பு
கொம்பன் வந்து நின்றதுவே.[3] 51

யானையைக் கண்டவுடன்[4]
வேலப்பணிக்கர் பெண்சாதி - அரியாத்தை அவ
கால் கை தடுமாறி நின்ருள் 52

பாலைமரம் வீரைமரம்
வேலப்பணிக்கன் பெண்சாதி - அரியாத்தை அவ
படுமரத்தோடு நின்ருவே[5] 53

காலாலே மண்ணை அள்ளி
தந்த[6] வீரபத்திரனே
மால்மருகவேல் முருகா - உன்
தஞ்சம் என்று முன் போட்டாள். 54

1 அடங்கியிருந்ததுவே 2 உள்ளங்கால்
3 முன்பு கொம்பன் வந்ததுவே. 'அரியாத்தை' என்னுஞ்சொல் காணப்படவில்லை
4 யானையைக் கண்டவுடன் என்னும் தொடர் இல்லை.
5 படுமரத்தோடேகி நின்று 6 கஞ்ச

கற்புடையாள் நான் ஆகில்
ஆனையடி ஆனையடி
ஆனைமறிகாறன் மகள்
ஆனைமயில் வாகனமே - உன்
கையைத்தான் நீட்டுமென்றாள்[1] 55

அந்தமொளி கேட்டவுடன்
யானையடி யானையடி
ஆனைமறிகாறன் மகள்
ஆனைமயில் வாகனமே - அவ்
ஆனை கையைத்தான் நீட்டியதே[2] 56

கையாலே கைபிடித்து
அஞ்சுகலை நஞ்சையுண்ட
அஞ்சாத ஐங்கரனே
அன்பரே ஆதரவே - அதன்மேல்
கொடுமுத்தல்லவோ[3] 57

காலிலிரு தேமலல்லோ
யானையடி யானையடி
யானைமறிகாறன் மகள்
ஆனைமயில் வாகனமே - உனது
கண்இரண்டும் நற்தேமல் அல்லோ[4] 58

பொல்லை யெடுத்தல்லவோ
வேலப்பணிக்கர் பெண்சாதி - அவ
போட்டாளே ஆனைமுன்பு[5] 59

---

1 இப்பாடல் பின்வருமாறு அமைந்துள்ளது
'கற்புடையாள் நானாகில் யானைமறிகாறர் மகள்
யானைமயில் வாகனமே நானடியாள் பெண்பேதை
உன்னுடைய கையைத்தான் நீட்டு கந்தா'

2 இப்பாடலும் பின்வரும் வடிவிலேயே அமைந்துள்ளது:
'அந்தமொழி கேட்டவுடன் அகன்ற புயத் துடையான அரிய முத்து
தொம்பனது தன்னுடைய கையைத்தான் நீட்டியதே'

3 இப்பாடலின் பாடபேதம் வருமாறு
'கையாலே கைப்பிடித்து வேலப்பணிக்கன் பெண்சாதியவ
கண்ணிலொற்றிக் கொண்டாலே'

4 'காலிரண்டும் வெள்ளையல்லோ யானைமத யானையுடைய
கண்ணிரண்டும் லொற்லேமல்'

5 'பொல்லையோ தனெடுத்து வேவப்பணிக்கன் பெண்சாதியவ
ஆனைமுன்பு போட்டாலே"

பொல்லை எடுத்து என்கையிலே
ஆனைமத யானையது
வேலப்பணிக்கர் யெண்சாதி
நாச்சன் அரியாத்தை கையில்
பொற்புடனே தான் கொடுக்க[1] 60

உன் காலைத்தா தா கந்தா
ஆனையடி ஆனையடி
ஆனைமறிகாறன் மகள்
ஆனை மயில் வாகனமே - நானும்
கனத்த வடம் போட்டு இறுக்க[2] 61

முன்னங்கால் தான் கிழப்பி
வேலப்பணிக்கன் பெண்சாதி
நாச்சன் அரியாத்தைக்கு
முடுக்கிட்டு நின்றதுவே[3] 62

மாண்வாத் கயிறு எடுத்து
வேலப் பணிக்கர் பெண்சாதி - அவ
மனங்குளிரப் போட்டிறுக்கி[4] 63

முன்னங்கால் முடக்கு கந்தா
ஆனையடி ஆனையடி
ஆனைமதயா னையடி
ஆனைமறிகாறன் மகள்
ஆனைமயில் வாகனமே
நானடியாள் பெண்பேதை - உன்
குப்பத்தில் பாய்ந்தேற[5] 64

1 'பொல்லை யெடுத்தல்லவோ யானைமதயானையது
வேலப்பணிக்கர் பெண்சாதி யரியாத்தை கையில்
பொற்புடனே கொடுத்ததுவே'

2 'காலைத்தா கந்தா யாணையெடி யாணையெடி யானைமறிகாறர் மகள்
நானடியாள் பெண்பேதை நானும் சனத்த வடம் போட்டிறுக்க

3 முன்னங்கால் தான்தூக்கி யானைமத யானையது
வேலப்பணிக்கர் பெண்சாதி அரியாத்தைச்கு முன்புவந்து நின்றதுவே'

4 ''அரியாத்தை அவ மனமகிழ்வாய்ப் போட்டிறுக்கி''

5 ''உன் குடும்பத்தில் பாய்ந்தேற'' என்னுந் தொடர் காணப்படவில்லை.

முளங் காலைத்தானே மடிக்க
வேலப்பணிக்கர் பெண்சாதி அரியாத்தை - அவ
முன்னே நின்று தோள்பிடிக்க[1] 65

உக்கோட்டைத் தா கந்தா
ஆனையடி ஆனையடி
ஆனைமறிகாறன் மகள்
ஆனைமயில் வாகனமே
வேலப்பணிக்கன் பெண்சாதி - யானையிட
கும்பத்தில் ஏறினளே[2] 66

செவியைத்தா கந்தா
ஆனையடி ஆனையடி
யானை மதயானையடி
ஆனைமறிகாறன் மகள்
ஆனைமயில் வாகனமே
நானடியாள் பெண்பேதை
துறட்டிதனை போடிறுக்க[3] 67

செவியைத்தான் கொடுக்க
துறட்டிதனை போட்டிறுக்கி[4]
வேலப்பணிக்கன் பெண்சாதி அரியாத்தை - அவ
செப்பினள் ஓர் வசனம்[5] 68

1 ''பத்தினியாள் யானேற
முளங்கால் தனைமடக்க
வேலப்பணிக்கர் பெண்சாதி யரியாத்தையவ
முன்னே நின்று தோள்பிடிக்க.'' (த்து)

2 ''கோட்டைச் சரித்திடவே
வேலப்பணிக்கர் பெண்சாதி யானையுடை
கும்பத்தி லேறினளே''

3 ''ஆனைமயில் வாகனமே'' என்னும் மேலதிக வரி இதிவில்லை.

4 'செவியைத்தா கந்தா யானையடி யானையடி
யானைமறிகாறர் மகள் யானடியாள் பெண்பேதை
துறட்டிதனைப் போட்டிறுக்க அமைய, அடுத்த இரு அடிகளும்

5 இப்பாட்வில் முதலிரு அடிகள் ஒரு பாடலாக
'துறட்டிதனைப் போட்டிறுக்கி வேலப்பணிக்கன் பெண்சாதி
செப்பின ஓர் வசனம்' என்ற பாடலாக அமைந்துள்ளது

வன்னிமறிகாறர் எல்லாம்
அஞ்சுகலை நஞ்சையுண்ட[1]
அஞ்சாத ஐங்கரனே
ஆனையயிராவதமே - அவை
வழிபார்த்து நிற்கிறுர்கள்[2] 69

நிற்கு மிடந்தனிலோ
என் அஞ்சுகலை நஞ்சையுண்ட
அஞ்சாத ஐங்கரனே
அன்பரே ஆதரவே
ஆனையயிராவதமே - நீரும்
நிமிசத்துடன் சொல்லுமென்ருள் 70

துறட்டிதனைப் போட்டிறுக்க
ஆனைமயா னையது அரியாத்தைக்கு
அபயமெனக் குளறியதே[3] 71

குளறின சத்தமது சின்ன
வன்னியனுர் பெண்சாதி இருக்குமந்த
அரண்மனையில் கேட்டதுவே[4] 72

[5]யானைகட்டி வாறகதை
சின்ன வன்னியனுர் பெண்சாதி
ஆச்சரியமாய் அறிந்து 73

வன்னியனுர் முன்புவந்து
என் நயித்தை ஆண்டவனே
வேலப்பணிக்கர் பெண்சாதி
மச்சாள் அரியாத்தை - அவ[6]
ஆனை கட்டி வாருளே. 74

1 அஞ்சுகலை நஞ்சைவுண்ட என்னுந் தொடர் இல்லை 2 நிற்பினமே
3 70ம் பாடலும் 71ம் பாடலும் ஒரே பாடலாசக் கொடுக்கப்பட்டுள்ளது
நிற்குமிடத்திலையே யானையயிராபதமே கினம்பி நீர் செல்லுமென்று
துறட்டிதனைப் போட்டிறுக்க யானைமத யானையது அரியாத்தை
அபயமென்று குளறியதே
4 ஆனை குளறிய சத்தம் சின்னவன்னியனுர்
பெண்சாதியிருக்கும் அரண்மனைக்குக் கேட்டதுவே
5 இப்பாடல் நூலிலே இல்லை 6 அரியாத்தை - அவ

வேண்டும் வரிசைகளும்
என்நயித்தை ஆண்டவனே - அவருக்கு
மேலாப்பு போடுவியும். 75

பந்தலுமோ போடுவித்தார்
எங்களை ஆளும் சின்னவன்னியனார் - நில
பாவாடை போடுவித்தார்.[1] 76

அன்னநடை[2] சின்ன இடை
வேலப்பணிக்கர் பெண்சாதி அரியாத்தை - அவ
ஆனை கொண்டு வந்தாளே. 77

ஆனைதனைக் கொண்டு வந்து - என்
ஐஞ்சுகலை நஞ்சையுண்ட
அஞ்சாத ஐங்கரனே
அன்பரே ஆதரவே - நீரும்
அஞ்சாமல் நில்லுமென்றாள்[3] 78

ஆத்தி மரத்துடனே
வேலப்பணுக்கர் பெண்சாதி - அந்த
யானைதனைக் கட்டி வைத்தாள்[4] 79

யானை கட்டி வந்தபின்பு
எங்களையாளும் சின்னவன்னியனார்
பெண்சாதி நாச்சன் அரியாத்தைக்கு - இருக்க[5]
கதிரை போடுவித்தாள் 80

வெள்ளை விருப்பித்தாளே
எங்களையாளும் சின்னவன்னியனார்
பெண்சாதி அரியாத்தைதான் - இருக்க
மேலாப்பு போடுவித்தாள்[6] 81

1 75ம் பாடலும் 76ம் ஓரே பாடலாகக் கொடுக்கபபட்டுள்ளது
2 இச்சொல்லினைத் தொடர்ந்து 'சின்ன நடை' என்னும் தொடர் இடம்பெறுகின்றது
3 'அஞ்சுகலை நஞ்சையுண்ட அஞ்சாத ஐங்கரனே' என்னும் வரிகள் இல்லை.
4 யானை தள்ளிக் கட்டிவைத்தா
5 'நாச்சன் அரியாத்தைக்கு இருக்க' என்னுந் தொடர் இல்லை
6 வெள்ளை விரிப்பித்தாள் வேலப்பணிக்கன் பெண்சாதிக்கு
நிலபாவாடையுமோ போடுவித்தா

பெட்ட கத்தைத்தான் திறந்து
எங்களையாளும் சின்ன வன்னியனர்
பெண்சாதி எடுத்துத்தர
பட்டு வற்கமதை.[1] 82

கண்டியால் கொண்டு வந்த
எங்களையாழும் சின்னவன்னியனர் பெண்சாதி - ஒரு
கண்ணறைப்பட்டு[2] மொன்று 83

தொண்டியால் கொண்டுவந்த
எங்களையாழும் சின்னவன்னியனர் பெண்சாதி – அவ
தூ யர்ஜனப் பட்டுமொன்று[3] 84

இந்தாரும் பட்டதென்று
எங்களை ஆழும் சின்னவன்னியனர் பெண்சாதி
நாச்சன் அரியாத்தைக்கு[4]
எடுத்துமல்லோ[5] கைகொடுத்தாள் 85

கைநீட்டி வாங்காமல்
வேலப்பணிக்கர் பெண்சாதி – மறு
காரியமாய்ச் சொல்லலுற்றுள்[6] 86

மறந்து தான் போகாதே
எங்களையாழும் சின்னவன்னியனர் பெண்சாதி
எங்களை[7] அன்பாகக் காத்தருளும் 87

ஒன்றுக்கும் அஞ்சாதே
என் ஆசை அவுறுகமே
ஆசைமச்சான் ஆதரவே - நான்
உள்ளமட்டும் காத்திடுவேன்[8] 88

---

1 பெண்சாதியவ எடுத்தாபல மாதிரியில்

2 கண்ணறையன் 3 தூயவாளை பட்டொன்று 4 இம்மூன்ருமடி இல்லை

5 எடுத்துமெள்ளக் 6 காரணங்கள் சொல்லலுற்ரு 7 நீயுமென்னை

8 ஒன்றுக்கு மஞ்சாதே
என் ஆசைம்ச்சாள் தோளியரே - நானுமுன்னை
உள்ளமட்டுங் காத்திடுவேன்

குற்றங்கள் வந்தாலும்
என் ஆசை அவுறுகமே
ஆசை மச்சாள் தோழியரே – நானும்
பொன் இறுப்பேன்[1] 89

உலாந்தா மறியல் என்றால்
என் ஆசை அவுறுகமே[2]
என் ஆசை மச்சாள் தோளியரே - நானும்
கூடவே நானிருப்பேன். 90

ஒன்றுக்கும் அஞ்சாதே - என்
ஆசைமச்சான் தோளியரே
இந்தாரும் பட்டதென்றான் 91

ஆ ரணம் தான் போட்டு
வேலப்பணிக்கன் பெண்சாதி
நாச்சன்[3] அரியாத்தைக்கு
அணியச்[4] சிலம்புமிட்டு 92

வெற்றிலை பாக்குகளும்
எங்களையாழும் சின்னவன்னியனார் பெண்சாதி
நாச்சன் அரியாத்தைக்கு
வெள்ளித்தட்டில் தான் கொடுத்தான்[5] 93

உள்ள வரிசையெல்லாம்
எங்களை ஆழும் சின்னவன்னியனார் பெண்சாதி
உகந்துமெல்லோ தான் கொடுத்தான்[6] 94

---

1 என்ன குற்றம் வந்தாலும்
என் ஆசை மச்சாள் தோளியரே - நானுமுன்னைக்
கொல்லாமல் மீட்டிடுவேன்

2 இந்த வரி இல்லை

3 இச்சொல் இல்லை 4 அறியாயச்

5 நூலிலுள்ள பாடல் வடிவம்
வெற்றிலையும் பாக்கும் அரியாத்தைக்கு வெள்ளித்தட்டத்தில் தான்கொடுத்தா

6 நூற்பா வடிவம்; உள்ள வரிசையெல்லாம்
சின்னவன்னியனார் பெண்சாதி புது நாச்சன் பாங்குடனே தான் கொடுத்தாள்

பதினெட்டு வரிசைகளும்
எங்களையாழும் சின்னவன்னியனுர் பெண்சாதி
நாச்சன் அரியாத்தைக்குப்
பாங்குடனே அசை கொடுத்தாள்[1] 95

பத்தையிலே[2] பல்லி ஒன்று
என் ஆசை அவுறுகமே[3]
ஆசை மச்சாள் தோளியரே - அது
திரு கூருகச்[4] சொல்லுகுதே 96

செத்தையிலே[5] பல்லி ஒன்று
என் ஆசை அவுறுகமே[3]
ஆசைமச்சாள் தோளியரே - அது
திரு கூருகச்[4] சொல்லுகுதே 97

சாகத்தான் போறேனே
என் ஆசை அவுறுகமே[3]
ஆசை மச்சாள் தோளியரே - நானும்
பிழைக்கத்தான்[6] போறேனே 98

ஒன்றுக்கும் அஞ்சாதே
என் ஆசை அவுறுகமே[3]
ஆசை மச்சாள் தோளியரே - நீரும்
வீடு[7] போய் வாருமென்றுர் 99

இப்பொழுதுதான் எழும்பி
தன்னுடைய நாயகர்
வேலப்பணிக்கருக்கு - ஒரு
விண்ணப்பமாய்ச் சொல்லலுற்றேன்[8] 100

---

1 இப்பாடல் நூலிலே காணப்படவில்லை 2 நிந்தையிலே
3 இத்த வரி இல்லை 4 திடுகூருப்ச்
5 செற்றையிலே 6 இருக்கத்தான் 6 ஊரே 8 நூற்பா வடிவம்
"அப்பொழுது தானெழும்பி தன்னுடைய நாயகனும் வேலப்பணிக்கனுக்கு ஒரு விண்ணப்பஞ் சொல்லுவவாம்"

ஆனைகட்டி நிற்குது காண்
என் நயிந்தை ஆண்டவனே - அதை
அவிழ்த்துநீர் கொடுத்து விடும்[1] 101

வீட்டேநான் போறேன் காண்
என்நயிந்தை ஆண்டவனே - நீரும்
விரைவாக வந்துவிடும். 102

நடந்து சுறுக்காயல்லோ[2]
வேலப்பணிக்கன் பெண்சாதி - அவ
நடுவழியில் வருகையிலே[3] 103

வளியில் வருகையிலே
வேலப்பணிக்கர் பெண்சாதி
நாச்சன் அரியாத்தைக்கு
வந்ததே பெருந்துயரம்[4] 104

கண்ணும் கடிக்குதையோ
என் ஆதி பராபரமே
ஆறுமுக வேலனே - என்னுடைய
கால்கள் மிகச் சோருதையோ 105

கண்ணும் மயங்குதையோ
வேல் முருகா மால்மருகா
வேல் முருகா[5] வேலோனே — எனக்குக்
கனத்த துயர் காணுதிப்போ[6] 106

வாயும் வறளுகிதிப்போ[7]
வல்லிபுர மாயோனே
நல்லநகர் வேலோனே - என்னுடைய
வாணாள் உருகுதிப்போ[8] 107

1 நீர் என்னுஞ் சொல் இல்லை
2 சுறுக்காக 3 போகையிலே 4 இப்பாடல் நூலில் இல்லை 5 வேளமுக
6 ஆகுதையோ
7 வறளுதையோ 8 பிராணன் விலகுதையோ

நடக்கவே கூடுதில்லை
நாரணரே காரணரே
நாகதம்பிரானுரே - எனக்கு
நடக்கவே கூடுதில்லை[1] 108

வீடுதான் போய்ச்சேர
மான் மகளார் வள்ளிபர துங்கா
வேல்முருகா சூர தூங்கா - எனக்கு
வழியோ தெரியவில்லை[2] 109

இடைவழியில் நான் சாக
என் ஏகபராபரனே
நாகதம்பிரானுரே[3] - எனக்கு

இறைவன் கட்டளையோ[4] 110
என் பத்தாவு மில்லாமல்
ஐயோ பராபரனே
உன்னடியாள் பெண்பேதை - நான்
பாடுபட நீதியோ[5] 111

தஞ்சமொருவரில்லை
தற்பரனே பொற்பரனே
அற்புதனே பொற்புதனே - எனக்குச்
சாக்கடன் தீர்ப்பாருமில்லை[6] 112

---

1 நூற்பா வடிவம்:
நடக்கவுங் கூடவில்லை
நாகதம்பிரானுரே நடுங்குதே என்னுடம்பு
மால்மருகா வேல்முருகா - எனக்கு
வழியே தெரியவில்லை,

2 இப்பாடல் நூலிற் காணப்படவில்லை 3 இந்த வரி இல்லை

4 பிரமனிட்ட கற்பனையோ 5 நீதியுண்டோ

6 நூற்பா வடிவம்:
தஞ்சமொருக் காலிலையோ
தற்பரனே திற்புயனே
அற்புதனே பொற்புயனே - என்
கண்ணெதிரே வாராயோ,

தள்ளாடித் தள்ளாடி
வேலப்பணிக்கர் பெண்சாதி
நாச்சன் அரியாத்தை - அவ
தம்பிரான் நன்மையினால் போய்ப் படுத்தாள்[1] 113

வெள்ளை விரித்தல்லவோ[2]
வேலப்பணிக்கர் பெண்சாதி - அவ
வெள்ளையின் மேல் பொல்லை வைத்தாள் 114

[3]படுக்கைதனில் இருந்து
வேலப்பணிக்கர் பெண்சாதி - அவ
அரனே[4] எனச் சாய்ந்தாளே 115

சாய்ந்து துயரமுடன்
வேலப்பணிக்கர் பெண்சாதி – அவ
தலைவனைத் தான் நினைத்தாள் 116

என்காயம் முடியுமுன்னே
என் கண்ணாளா காதலனே
என் நயிந்தை ஆண்டவனே - நீரும்
கடுகிவந்து காணாயோ[5] 117

---

1 நூற்பா வடிவம்:
தள்ளாடித் தள்ளாடி
வேலப்பணிக்கன் பெண்சாதியவ
தம்பிரான் நன்மையினால் - அவ
தன்மனையில் போய்ச் சேர்ந்தா,

2 வெள்ளைதனைத் தான்விரித்து

3 பின்வரும் பாடல் நூலிற் காணப்படுகிறது:
பாயை விரித்தல்லவொ
வேலப்பணிக்கன் பெண்சாதி - அவ
படுக்கை தனைப்பரப்பி.

4 பரனே

5 நூற்பா வடிவம்:
காயம் முடியுமுன்னே - என்
கண்ணாளா காதலனே - நீயுமென்
கண்ணெதிரே வாராயோ,

தரிக்க[1] மனம் கூடுதில்லை
தலைவனே எந்தன் உயிர்
ததும்பித்[2] தடுமாறுதிப்போ 118

அவத்தம் வருகுதிப்போ[3]
என் நயிந்தை ஆண்டவனே
ஐயோ பராபரனே - எனக்கு
அறிவுதடு மாறுதிப்போ 119

ஆனைக்கும் அஞ்சாள் நான்
என் நயிந்தை ஆண்டவனே - நானுமொரு
அரிய புவிக் கஞ்சிவிட்டேன்[4] 120

குதிரைக்கு மஞ்சாள் நான்
என் நயிந்தை ஆண்டவனே- நான் ஒரு
கொடிய புலிக்கஞ்சி விட்டேன்[5] 121

மனையாள் படும் துயரம்
என் நயிந்தை ஆண்டவனே - நான்
மறுபேர்க்குச் சொல்லுவேனோ 122

பாவி படுந்துயரம்
என் நயிந்தை ஆண்டனே
ஐயோ பராபரனே - என்னைப்
பார்ப்பார் ஒருவரில்லை[6] 123

---

1 பின்வரும் பாடல் நூலிலே இதற்குமுன் காணப்படுகின்றது:
என் வாணுள் முடியுமுன்னே
என்நயிந்தை ஆண்டவனே - நீரும்
வந்தென்னைக் காணுயோ.

2 தத்தனித்துப் 3 வருகுதையோ

4 நூற்பா வடிவம்;:
யானைக்கு மஞ்சாதாள்
என்நயிந்தை ஆண்டவனே - நீரும்
ஒருநொடியில் வாராயோ.

5 இப் பாடல் நூலிற் காணப்படவில்லை,

6 பார்க்கவொண்ணு வேதனையே

உனக்குச் சொல்லி அனுப்பவென்ருல்
என் நயித்தை ஆண்டவனே - எனக்கு ஒரு
தோழியரைக் காணேனே[1] 124

என்று சொல்லிப் பெண்பேதை
வேலப்பணிக்கன் பெண்சாதி - அவ
இருந்து புலம்பிடவே[2] 125

அரியாத்தை தான் புலம்பி
வன்னியனுர்கள் வீட்டில் வேலப்பணிக்கர் - அவர்
வெகுசகுனம் கண்டாரே[3] 126

மெள்ள எழுந்திருந்து
எங்களையாளும் சின்னவன்னியனுருக்கு - ஒரு
விண்ணப்பம் சொல்லுவாராம் 127

கண்ணும் துடிக்குதிப்போ
எங்களையாளும் சின்னவன்னியனுரே எனக்குக்
கனத்தகுறி காணுதிப்போ[4] 128

மேலும் துடிக்குதிப்போ
எங்களையாளும்[5] சின்னவன்னியனுரே - எனக்கு
இப்போ[5] வெகுகுறிகள் காணுதிப்போ 129

வீட்டுக்குச் செல்லவேணும்
எங்களை ஆளும் சின்னவன்னியனுரே[6] - எனக்கு
விடைதந்து அனுப்பிவிடும் 130

போய்வாரும் என்று சொல்லி
வேலப்பணிக்கருக்குச் சின்ன வன்னியனுர்
போக விடைதான் கொடுத்தார் 131

1 இரண்டாம் மூன்றும் அடிகள் பின்வருமாறு காணப்படுகின்றன
இங்கே ஒரு தோழிமார் காணேனே 2 அரியாத்தைதான் புலம்ப
3 நூற்பா வடிவம்
சின்னவன்னியனுர் தன்வீட்டில் வேலப்பணிக்கன் வெகுகனவு கண்டாரே
4 இதன் பின்னர் 'வேலப்பணிக்கர்' என்னுஞ்சொல் காணப்படுகின்றது
5 காதை அடைக்குதிப்போ
5 எங்களையாளும்' இப்போ என்னுஞ் சொற்கள் காணப்படவில்லை
6 என் ராசதுரை வன்னியனுர்

ஓடி நடந்தல்லவோ
வேலப்பணிக்கர் அவர்
ஒரு நொடியில் வீடு வந்தார் 182

பாவி படுந்துயரம்
வேலப்பணிக்கர் அவர்
பரிவுடனே ஆண்டாரே[1] 183

பாவி படும் துயரம்
வேலப்பணிக்கர் அவர்
பரிவுடனே கண்டாரே 184

என் கண்ணில் முளிக்கவென்றோ
என் நயிந்தை ஆண்டவனே
கண்ணாளா காதலனே - நீரும்
கண்ணெதிரே வந்தீரோ[2] 185

படும் துயரம் பார்க்கவென்றோ
என் நயிந்தை ஆண்டவனே - நீரும்
பதை பதைத்து வந்தீரோ[3] 186

நான்பட்டபாடு சொல்ல
என் நயிந்தை ஆண்டவனே[4] - இந்த
நாடுலகம் கொள்ளாதே 187

ஐந்து வயதிலேயோ
என் நயிந்தை ஆண்டவனே - நீரும் என்னை
அன்பாய் மணம் முடித்தீர் 188

பதினறு வயது மட்டும்
மனப்பட்சம் மறவாதிருந்தோம்[5]

ஆயுள்[6] முடியுதுகாண்
என் நயிந்தை ஆண்டவனே - என்
துன்பத்தை விட்டு விடும்[7] 140

1 இப்பாடல் இல்லை
2 பதைபதைத்து
3 இப்பாடல் இல்லை
4 இத்தொடர் இல்லை
5 நூற்பாவடிவம்
பதினறு வயசுமட்டும் என்னயிந்தை ஆண்டவனே - மனப்
பட்சமாய் வாழ்ந்திருந்தோம்
6 ஆச
7 என்மேலின்பத்தை விட்டுவிடும்

ஆத்தி மரத்துடனே
என் நயிந்தை ஆண்டவனே - நானும்
அந்த யானை கட்டிவைத்தேன்[1] 141

யானை அவிட்டீரோ
என் நயிந்தை ஆண்டவனே - ஆகுமதை
அவிழ்க்கச் சொல்லி வந்தீரோ 142

யானை அவிழ்க்கவில்லை
என்னுயிரே கண்மணியே
எனக்கிணங்கும் நாயகியே - எனக்கு
அங்கமெல்லாம் பதைபதைத்து[2] 143

மீண்டும் வருவேன் என்று
என்னுயிரே கண்மணியே
எனக்கிணங்கும் நாயகியே[3] - நானும்
விழம்பி வந்தேன் வன்னியற்கு 144

உனக்கு வருத்த மென்ன
என்னுயிரே கண்மணியே
எனக்கிணங்கும் நாயகியே[4] - நீரும்
உள்ளபடி[5] சொல்லுமென்றார் 145

எனக்கு வருத்தமென்ன[6]
என் நயிந்தை - அது
இன்னதென்று சொல்லறியேன் 146

கட்டோடே ஆனைநிற்கு
என் நயிந்தை ஆண்டவனே - அது
கயமிரதம் சொண்டுமே[7] 147

கட்டவுக்கப் பேருமில்லை
என் நயிந்தை ஆண்டவனே - அங்கே
ஒரு காரியமார் போர்[8] தானுமில்லை 148

1 யானை கள்ளிக் கட்டிவந்தேன் 2 இப்பாடல் நூலிற் காணப்படவில்லை
3 இதற்கு முன்னர் நூலில் இடம் பெறும் பாடல்
நிற்கத் தரிக்கவில்லை என்னுயிரே கண்மணியே எனக்கு நிற்க மனங் கூடவில்லை
4 இந்த வரி நூலில் இல்லை 5 உண்மையை
6 வருத்தமென்றால் 7 கைமுரசங் கொட்டிடுமே 8 காரியமோ

கந்தன் இறந்து விட்டால்
என்நயிந்தை ஆண்டவனே - எனக்குக்
கனபாவம்[1] வந்திடுமே 149

யானைதனை அவிழ்க்க
என்நயிந்தை ஆண்டவனே - என்னைப் போல்
யாருமொரு கற்புடையாள் 150

ஏழுசுருள் வெற்றிலையும்
என்நயிந்தை ஆண்டவனே
எடுத்துமவன் கைபிடித்து[2] 151

கும்பிட்டுத் தெண்டனிட்டு
என்நயிந்தை ஆண்டவனே - அங்கே
கொண்டு கொம்பன் முன்புநின்றால் 152

அப்பல்லோ யானையது
என்நயிந்தை ஆண்டவனே - கந்தன்[3]
அவிழ்க்க வல்லோ காலைகொடுப்பான் 153

கட்டை அவிழ்த்தாலும்[4]
என்நயிந்தை ஆண்டவனே - கந்தன்
கருதித் தண்ணீர் தான் குடியான் 154

எப்படித்தானாலும்
என்நயிந்தை ஆண்டவனே - எனக்
கேற்றபடி[5] தான் நடக்கும் 155

நானு மிறப்பதல்லால்
என்நயிந்தை ஆண்டவனே - நானும்
மிருப்பதொரு நாளுமில்லை. 156

1 கண்பாவம்

2 150ம் பாடலும் 151ம் பாடலும் நூலில் ஒரே பாடலாகக் கொடுக்கப்பட்டுள்ளது யானை அவிழ்க்க வென்றால் என் நயிந்தை ஆண்டவனே என்போலக் கற்புடையாள் ஏழுசுருள் வெற்றிலையும் எடுத்து மெல்லக் கைகொடுத்தாள்

3 கந்தன் என்னுஞ்சொல் நூலில் இல்லை

4 அவிட்டாலும் 5 எழுத்தின்படி

என்றுமிருந்தது போல்
என்நயிந்தை ஆண்டவனே நீரு
மிருப்பீர் மனமகிழ்வாய் 157

அடியாள் இறந்தாளென்று
என்நயிந்தை ஆண்டவனே[1] - நீரும்
அருந்துயரம் கொள்ளாதீர் 158

என்னைப்போல் கன்னியர்கள்
என்நயிந்தை ஆண்டவனே
எத்தனைபேர் தானிருப்பர் 159

என்னைப்போல் கற்புடையாள்
என்நயிந்தை ஆண்டவனே - இந்த
இலங்கையிலே[2] மெத்த உண்டு. 160

அன்பாக நீர் இருப்பீர்
என் நயிந்தை ஆண்டவனே - நீரும்
அருந்துயரம் கொள்ளாதீர். 161

முகத்தோடை முகத்தை வைத்து
வேலப்பணிக்கர் அவர்
பொழிவர் சில வார்த்தை[3] 162

முத்திவந்த பூ எனக்கு
நான் எடுத்து நான் அணைத்து
நான் பூசும் சந்தனமே - அது
பேய் வாங்கிக் கொண்டிடுமே[4] 163

வலதுதுடை தாருமென்றாள்
என் நயிந்தை ஆண்டவனே - நானும்
மனமகிள் வாய்ச் சாய்ந்துகொள்ள 164

---

1 இச்சொல்லின்பின்னர் 'உனக்கு' என்றொரு சொல் இடம் பெறுகின்றது

2 உலகத்தில்

3 'மொழிவார் சில வாசகங்கள்'

4 நூற்பா வடிவம்
முந்திவந்து நானெடுத்து நானணைத்து நான் பூசுஞ் சந்தனமே - அது
போய் வாங்கிக் கொண்டதுவோ

ஆருயிரே ஆதரவே
ஆசைமட மாமயிலே - உன்னுடைய
துன்பமது தீருமட்டும்[1] 165

வலதுதுடை மேல் கடக்க
வேலப்பணிக்கர் பெண்சாதி
அரியாத்தையுடைய சீவன் - ஒரு
வண்டாய்ப் பறந்ததுவே[2] 166

காலும் எறிந்தாப் போல்
வேலப்பணிக்கர் பெண்சாதி - அவ
கண்ணும் முளித்தாப் போல் 167

வாயால் நுரைதள்ளிடவே
வேலப்பணிக்கர் பெண்சாதி
அரியாத்தையுடைய வாணல் மடியுமுன்னே - வேலப்
மண்மேல் விழுந்தழுதார்[3] [பணிக்கர்

யானை கட்டப் போனடத்தே
ஆதரவே ஆருயிரே[4]
ஆசைமட மாமயிலே[4] - உனக்கு
ஐயம் காச்சி பட்டதுவே 169

உனக்குப் பேய்தான் பிடித்ததுவே
என் பேர் பெரியநாயகியே[5]
தீர் உடைய தேவியரே[5] - உனக்குப்
பெல்லிப்பேய் விட்டினமோ 170

---

1 நூற்பா வடிவம்:
ஆதரவாய் ஆருயிரே சேமமயிலு முடைய துன்பமது தீரட்டும்

2 நூற்பா வடிவம்.
வலதுதுடை மேற்படுக்க வேலப்பணிக்கன் பெண்சாதி – அரியாத்தையுடைய
ஆவி வனவாசம் பறந்ததுவே

3 'வாயும் நுரை தள்ளிடவே வேலப்பணிக்கன் பெண்சாதியின் வாணுட் கழிந்ததுவே
வேலப்பணிக்கரவர் மேல்விழுந்து தானழுதார்'
என்ற இப்பாடல்கள் நூலிலே உண்டு

4 இந்த வரி இல்லை

5 இவ்விருவரிகளுக்கும் பதிலாக நூலில்
என்னுடைய தேவியரே என்னுந் தொடர் இடம்பெற்றுள்ளது.

கண்விழித்துப் பாரீரோ
என்னுயிரே கண்மணியே
எனக்கிணங்கும் நாயகி - நீரும்
என் முகத்தைப் பாரீரோ[1] 171

ஆயிரம் யானைப் பணிக்கர்
என் ஆசைக்கிளியே
அரிய கயிலாயமே
பொன் தேன் மொழியாளே - உன்னை
அனுப்பிவிட்டார் என்னிடத்தில்[2] 172

என்னமோ நானறியேன்
எனக்கின்பமுள்ள தேவியரே
பண்புபோலோவியமே[3]
எதுதான் செய்வேனோ
என்னையவர் தானறிவார்[4] 173

[5]இந்த உலகத்திலுள்ளவர்கள்
ஏதுக்குப் போதுமென்றார்[6] 174

உந்தன் பசாசுகளை
உத்தமியே பத்தினியே
சித்திரமே தேவியரே - நானும்
ஒரு மிக்கத் தானனைப் பேனே[7] 175

---

1 நாற்பா வடிவம்
"கண்ணை முளியாயோ என்னுயிரே கண்மணியே நீரும் என் முகத்தைப் பாராயோ"
மேற்காட்டிய பாடலுக்குப் பின் நாவிலே பின்வரும் பாடல் இடம் பெறுகின்றது
"ஏழுருப் பணிக்கன்வர என் ஆசைக் கிளியே - உனக்கு
ஏவல் விட்டுக்கொண்டாரோ"

2 இப்பாடல் நாவில் இல்லை 3 அன்புபோலோவியமே

4 இறுதியிரு அடிகளுக்கும் பதிலாக 'யான் எதுவென்று சொல்லறியேன்' எனுந் தொடர் இடம்பெற்றுள்ளது

5 இப்பாடலுக்கு முன் நாவிற் பின்வரும் பாடல் இடம் பெறுகிறது
'என்னை ஆர்தான் அறிவார்
இந்தப் பணிக்கமார் எல்லோரும் என்முகத்தைப் பார்க்கிலையே'

6 இந்தப் பாடல் நாவிலில்லை 7 ஒன்றுகத்தா அவிழ்ப்பேன்

அந்தகத்துக் கோவனத்தில்
என்னுயிரே கண்மணியே
எனக்கிணங்கும் நாயகியே நானும்
அறுதி என்று அனுப்பிவிட்டேன்[1] 176

கோட்டிலே அல்லாதே
என் கோலக் குடிவாளே
வாலைப்புதுமயிலே - எனக்குச்
சினம் தராதே[2] 177

உன்னையுமே கொண்டவனர்
என்னுயிரே கண்மணியே
எனக்கிணங்கும் நாயகியே - நானும்
உடனே அறிந்தேனென்றால் 178

உன்னுடனே கொண்டுவந்து
எனக்குற்ற துணைவியரே
வெற்றி மனைவியரே - நானும்
உடனே வதைத்திடுவேன்[3] 179

உன்னோடிப் பறப்பதல்லால்
எனக்குற்ற துணைவியரே
வெற்றி மனைவியரே - நானுமிந்த
ஊரிலிருப்பேனா[4] 180

---

1 நூற்பா வடிவம்
அந்தத்தின் வந்ததுவோ என்னுயிரே கண்மணியே
எனக்கிணங்கும் நாயகியே - நானும் தீப்போட்டெரித்திடுவேன்

2 நூற்பா வடிவம்;
கோட்டிலே அல்லாதென் கோலக் குனலாரே வாலப் புதுமையிலே
கோடிசிறை மீட்டிடுவேன்

3 178ம் பாடலும் 179ம் பாடலும் நூலிலே ஒரே பாட்டாகப் பின்வருமாறு அமைகின்றது
உன்னையுங் கொண்டவனை என்னுயிரே கண்மணியே
எனக்கிணங்கும் நாயகியே - யானும் முந்தியறிந் தேனேயென்றால்
உன்னுடனே கொண்டுவந்து எனக்குற்ற துணைவியரே
வெற்றி மனைவியரே - நானும் முட்ட வெட்டிடுவேன்

4 ஊரிலிருப்பதில்லை

நீயே என் பெண்சாதி யாயிருந்தால்
நான் எடுத்து நான் வளர்த்து[1]
தான் பூசும் சந்தனமே - நீயே என்னைப்
பேணியே பாராமல் 181

கட்டையிலே உன்னை வைக்க
என் கண்மணியே காரிகையே
பெண்ணரசே பேதையரே[2] - எனக்குக்
கருத்தோ தெரியாது. 182

பாடையிலெ உன்னை வைக்க
என்னுயிரே கண்மணியே
பெண்ணரசே பேதையரே-எனக்குப்
பயனோ தெரியாது[3] 183

பட்சங்க ளுண்டானால்
அக்கினியைச் சுற்றி வந்தால்
என்னுயிரே கண்மணியே
எனக்கிணங்கும் நாயகியே - எனக்
கன்பாய் இடம் தாரும் 184

வந்து நான் அப்போது
என்னுயிரே கண்மணியே
எனக்கிணங்கும் நாயகியே - உனது
வலது கைநீட்டு மென்பேனே 185

கை நீட்டித் தந்தல்லவோ
என்னுயிரே கண்மணியே
எனக்கிணங்கும் நாயகியே - நானும்
கட்டையிலே சேர்ந்திடுவேன். 186

உத்தமியாம் நீரானால்
என்னுயிரே கண்மணியே
எனக்கிணங்கும் நாயகியே - என்னை
ஒருமித்துக் கொண்டு செல்லும் 187

1 நானணைத்து
2 இரண்டாம் மூன்றும் வரிகள் நூலிலே பின்வருமாறு அமைந்துள்ளன
நானெடுத்து நானணைந்து நான்பூசுஞ் சத்தனமே,
இப்பாடல் தொடக்கம் 201ம் பாடல்வரையுமுள்ளவை நூலிலே காணப்படவில்லை

வந்து வளைத்தினமே
என்னுயிரே கண்மணியே
எனக்கிணங்கும் நாயகியே-உன்னைக்
கட்டயிலே வைக்கவென்று 188

என் கையை இறுக்கியல்லோ
என்னுயிரே கண்மணியே
எனக்கிணங்கும் நாயகியே - என்னைக்
கட்டுகிறார் இப்பொழுது 189

உன்னைக் கொண்டு நடக்கினமே
என்னுயிரே கண்மணியே
எனக்கிணங்கும் நாயகியே - உனக்குக்
கொள்ளிவாய் முட்டவென்றோ 190

எல்லாச் சடங்குகளும்
என்னுயிரே கண்மணியே
எனக்கிணங்கும் நாயகியே - உனக்குப்
பூ முடித்தார்கள் 191

என்னைக் கட்டியிங்கே போட்டினமே
என்னுயிரே கண்மணியே
எனக்கிணங்கும் நாயகியே - உன்னோடு
கட்டையிலே சேராமல் 192

கற்புடையாள் நீரானால்
என்னுயிரே கண்மணி
எனக்கிணங்கும் நாயகியே - என்னுடைய
கையில் கட்டுத் தெரியாதோ 193

கலங்கியழும் பொழுது
வேலப்பணிக்கருடைக் கைக்கட்டுத் தெறித்திட்டதே 194

ஒட்டம் நடையாக வெல்லோ
வேலப்பணிக்கர் தன்னுடைய
உத்தமியைக் காணவென்று 195

கண்டு கொண்டேனுந் தனே நான்
என்னுயிரே கண்மணியே
எனக்கிணங்கும் நாயகியே - என்னுடைய
கவலையெல்லாம் தீர்ந்தேனே 196

கட்டை இடுக்கியல்லோ
என்னுயிரே கண்மணியே
எனக்கிணங்கும் நாயகியே - உனக்குக்
கனத்த நெய் வார்த்தார்கள் 197

என்று சொல்லித் தானுமப்பே
வேலப்பணிக்கர் அவர்
ஏங்கிமுகம் வாடி
அக்கினியைச் சுற்றி வந்து
என்னுயிரே கண்மணியே
எனக்கிணங்கும் நாயகியே - நீரும்
அன்பாய்க் கையைத் தாருமென்றார் 198

செத்த பிணந்தானழும்பி
வேலப்பணிக்கர் பெண்சாதி - அவ
திட்டமாய்க் கை கொடுத்தாள் 199

செத்து மடிந்தார்கள்
வேலப்பணிக்கரும் பெண்சாதியும் - அவ
சிவலோகம் சேர்ந்தார்கள் 200

பரமசிவன் பதியில்
வேலப்பணிக்கரும் பெண்சாதியும் - அவை
பாங்குடனே போய்ச் சேர்ந்தார்கள். 201

முற்றும்

பொது

கொட்டுக்கிணற்றுப் பிள்ளையார்
கும்மிப் பாடல்கள்

தானன்னத் தானன்னத் தானனே - தன்ன
தானன்னத் தானன்னத் தானதான.

கொட்டுக் கிணற்றடிப் பிள்ளையாரே பாலர்
கூடிக்க ளிகொண்டு உன்புகழைக்
கட்டசி றுகும்மி பாடஅ ருள்தந்து
காத்திடு வாய்விழி பாத்திடு வாய். 1

பாரத கண்டமி ருந்தொரு பட்டாணி
பாதையி லேற்றிக்க ரிமூகன் மூன்றினை
நீதிமு றையின்றி மச்சங் களோடு
நினைவின் றிக்கொண்டு வந்தானுமடி. 2

கொண்டுவந் தமூன்று வேழமு கங்களைக்
கொள்விலை ஏத்திக்கொ டுக்கலா மென்றவன்
அண்டிப்பொ ருள்தேடி மட்டக்க ளப்பிலே
ஆர்க்குங்கொ டுக்கலா மென்றாண்டி. 3

கர்ப்பூர க்கட்டிக ளுவாட் டினோடு
கலந்தது போல் அப்பட்டாணி
அற்புதமான விநாயகர் தம்மையும்
அம்மச் சங்க ளோடுக லந்தாண்டி. 4

மச்சத்தின் நாற்றம் சகிக்காம லேவேழ
மச்சப்பட்டுத் துறை செம்மலை சேர்ந்த பின்
இச்சையு டன்சென்று ஒடிஒ ழித்த
இடம் சொல்வேன் ஆசையாய்க் கேளுமடி. 5

கொட்டுக்கி ணற்றடி ஓர்தல மாவது
கோதையே சொல்லிற் குழுழமுனை
மட்டுக்க டங்காத லன்கள் புரிவதை
மாநிலம் எப்ப அறியுமடி. 6

கோட்டகக் கேணிவி ளையகர் தானுமோ
    கொக்குத் தொடுவாயின் அந்தமடி
கேட்டு மகிழஅ வரை எந்த நாளும்
    கிருபை பெற்றென்றும் போற்றுங்கடி. 7

கூன்பிள்ளை யாரின் அரியத லம் அது
    கோதையே சொல்லின் அமரி வயல்
வான்புகழ் மேலாம் அரியதலம் அதை
    வர்ணிக்க யாரால் இயலுமடி. 8

கொட்டுக்கி ணற்று மருதடியிற் களஞ்
    கோலி அடிக்கையில் இப்பிள் ளையார்
ஒட்டமாய் வைத்தெமை சாப்பீர்கள் ளென
    ஒடிஓ ழித்தார்பொ லிக்கடியில். 9

மூன்றுநா ளாகிக ளஎச மான்கள்
    முக்கி மூக்கிப் பொலிதூ ற்றிடவும்
என்று மிருந்தது போலவே தூற்றுப்
    பொலியு மிருந்ததாம் கேளுமடி. 10

இந்தப் புதுமை இதற்கு முன்னுமில்லை
    என்ன நவமென்று எல்லோரும்
சொந்தப்பி ரமைகொண் டுபொலி தூற்றத்
    தோற்றினர் சொறபலு வஸ்தையிலே. 11

தம்பிமா ரேநானே உங்கள்வி ளையகர்
    தாரணி மெச்சந லம்புரி வேன்
தம்பி வருவனே பட்டாணி வந்தால்
    நாங்கள் அறியோம் எனப்புகல்வர். 12

உங்கள் பொலிக்கு அடியில் இருப்பது
    ஓர்ந்து பார்த் தாவது நானப்பா
எங்கள் குலத்துக்கு ஈனமாய்ப் பட்டாணி
    ஏற்றினன் கப்பலில் என்ன சொல்வேன். 13

நாறல் சருவாடு போலுமெனை எண்ணி
    நால்திகள் பட்டாணி கொண்டு வந்தான்
ஏறி விழுந்து கடற்கரை சேர்ந்தபின்
    ஏகினேன் உங்கள் பொலிக்கடியில். 14

வந்தது கேட்டால் நெல்லின் கல்லன்றிவேறில்லை
நிச்சயமோ வென்று சொல்லுக் கால்
எந்த விதமும் நின்று பார்த்து அவன்
ஏகுவான் பின்பு எமை ஆஸ்வீர். 15

என்று வினாயகர் சொன்னவுடன் கள
எசமான் விழித் தெழுந் திருந்து
நின்றவர் எல்லோரிக்கும் சொல்ல அவர்களும்
நிச்சிய மோவென்று பார்த்தாண்டி. 16

பார்த்தபின் கல்லும் பதுங்கி இருப்பதும்
கோத்திரம் வாழ அருள்கள் புரிவதும்
ஆத்திரம் கொண்டு அவர்கள் இருக்கையில்
சூத்திரம் பட்டாணி வந்தாண்டி. 17

தம்பி மாரே ஒரு கல்லு இவ்விடத்தில்
வந்ததும் போனதும் கண்டதுண்டோ
நம்பி நீர் சொன்னால் நயங்கள் செய்வேன் என்று
நால்வரும் கேட்க உரைத்தாண்டி. 18

எங்களுடைமை பெருமை பொருந்திய
அன்பரே பட்டாணி ஒன்று கேளும்
தங்கள் கல்லுருபம் இந்த இடத்தினில்
வந்ததும் போனதும் இல்லை ஐயா. 19

ஊரின்வ ளமைபோல் எங்கள்பொ லிக்குள்ளே
உள்ள கல்லு ஒன்று உண்டன்றி
ஆரின் கல்லு இங்கே வந்தால் அதை நாம்
அணைப்போம் என்று நீர் எண்ணினீரோ. 20

ஊரின் பொருட்களை எங்களுக் கேனது
உங்கள் தெய்வமானால் எங்களுக் கேன்
ஆரும் தாலி கட்ட நான் வாழல் நல்லதோ
அந்தக் குணம் நம்மில் இல்லை ஐயா. 21

என்றுகளை எசமான்கள் சொல்ல
பட்டாணி பெருமூச்சு விட்டெழுந்து
தோணுங் காலத்திலே பார்த்திடலாம் மென்று
தேம்பி நடந்து சென்றாண்டி. 22

சென்றபின் கொட்டுக் கிணற்றடி ஐங்கரன்
கோலி இடம் வகுத் தாளுகையில்
நன்று நவீனம் புரிந்து வருவது
நானிலம் எங்கும் பரந்தாண்டி. 23

காட்டு மிருகங்கள் அச்சமில்லை கன்று
காலிகள் ஊரினில் சேதமில்லை
வீட்டுச் சனங்கள் செழிக்க மும்மாரி
தேச மெங்கும் நித்தம் பெய்தாண்டி. 24

பால் தயிர் மோர் வெண்ணைகள்
பாக்கியம் ஆகச் செழித்திடவும்
ஆல் போற்ற லைக்கக் குமுளமு ளையிது
என்ன அதிசயம் சொல்வேண்டி. 25

இந்தப் புதுமை பரந்திடவும்
சொந்தப் பட்டாணி அறிந்திடவும்
இவந்து சினந்து இவர்ந்து பரியிலே
வேகமாய் வாழுடன் வந்தாண்டி. 26

வந்து பட்டாணி அறிந்து தலம் சென்று
வாதுரை பேசிப் பலப்பல ஏசி
கந்தன் சிரேஷ்ட விநயகர் கண்டத்தை
துண்டமாய் வெட்டி எதிந்தாண்டி. 27

வெட்டித் துணித் துப்பரியிலிவர்ந்து
வேகமாய் வாழுடன் போகையிலே
அட்டதிக்கு மாதி சோரிசி ந்தவந்தத்
துட்டனு மாவு பிறந்தாண்டி. 28

கடுத்த முகக்குறிப் பட்டாணி
திமிர் எடுத்த வாய்க்காலில் இறந்த செய்தி
கொடுத்த கதைகள் வரலாறுகள் யாவும்
தோகையே வைபவம் பாருங்கடி. 29

★

கும்மி

தரு! தானன்ன தானன்னத் தானனே— தன்ன
தானன்ன தானன்ன தானனே

சக்கரை மோதகம் தேங்காயும் கொண்டு
சன்னதி முன்பாகத் தான்படைத்து
முக்குறுனிப் பிள்ளையாரை வேண்டி
முளங்கிச் சோபனம் கொட்டுமடி. (தானன்ன - - -) 1

குத்து விளக்கடி நானுக்குப் பெண்ணே
கோமளப் பூவடி நீயெனக்கு
குத்து விளக்குக்கும் கோமளப் பூவுக்கும்
கோபமுண்டோ முத்துவீராசி. (தானன்ன - - -) 2

வள்ளி தெய்வானை மணவாளனடி
வேலன் மங்கையர் மத்தியில் நிற்கையிலே
தும்புரு மாமுகன் நாரதன்வந்து
தொடுத்தானும் தர்க்கத்தைத் தோழிப் பெண்ணே. 3
(தானன்ன - - -)

பொய்யும் புரட்டும் உருட்டும் புரளியும்
போதையும் வேண்டாத வார்தைகளும்
எய்தும் குரோதமும் இந்நாட்டில் நம்மவர்
எய்துவாரோ சொர்க்கம் ஞானப் பெண்ணே. 4
(தானன்ன - - -)

தண்ணீர் குடத்தை இடுப்பிலே கொண்டு
தங்க மாளிகைக்குப் போகையிலுக்கே
அங்கொரு வாலிபனைக் கண்டு அன்னவள்
அச்சமிகு வ்வாரோ ஞானப் பெண்ணே. (தானன்ன - - -) 5

தங்கக் குடமெடி நானுக்குப் பெண்ணே
தாமரைப் பூவடி நீர் எனக்கு
தங்கக் குடத்திற்கும் தாமரைப் பூவுக்கும்
தாகமுண்டோ முத்து வீராசி. (தானன்ன - - -) 6

முத்துச் சரமெடி நானுனக்குப் பெண்ணே
மூக்குத்தி முத்தடி நீர் எனக்கு
முத்துச் சரத்துக்கும் மூக்குத்தி முத்துக்கும்
மௌனமுண்டோ முத்து வீராசி. (தானன்ன - - -) 7

தண்ணிக்குடம் எடி நானுனக்குப் பெண்ணே
தாமரைப் பூவடி நீஎனக்கு
தண்ணிக் குடத்திற்கும் தாமரைப் பூவுக்கும்
தாகமுண்டோ முத்து வீராசி. (தானன்ன - - -) 8

சங்குசென்று சக்கரம் கைப்பிடித்து நல்ல
தங்க நிறப் கச்சை தன்னோடே
துங்கக் கண்ணன் காளி பாம்பின்மேல் ஆடிய
துய்ய நடனம் ஒன்றாடினரே. (தானன்ன - - -) 9

★

வந்தனம்

சீர்[1]பெறு சித்தி விநாயகனே வந்தனம்
சிவபெரு மானுக்கும் வந்தனம் தந்தோம்
தாரணி யில்தான் தோன்றியா கவேவந்
துதித்த்தசக் தியுடன் ஈஸபரர்க்கும் வந்தனம். 1

கற்ற கனவான்கட்கு வந்தனம் தந்தோம்
உற்றசபை யோர்கட்கும் வந்தனம் தந்தோம்
மாதரவாணி சரஸ்வதியே வந்தனம்
மயிலேறும் வாகனர்க்கு வந்தனம் தந்தோம். 2

சாசறு காட்டுவிநாயகனே வந்தனம்
கண்ணகை அம்மனுக்கும் வந்தனம் தந்தோம்
கற்றவர்கள் உற்றவர்கள் மற்றுமுள் ளோருக்கும்
கருதிய பிழைகளைப் பொறுத்தருளுவீர். 3

மிகைப்பாடல்:

முள்ளி நகரில்வாழும் முதியோர்களே வந்தனம்
கல்விக் கடலையுண்ட கனவான்களே வந்தனம்
வந்தனம் தந்தோம் வந்தனம் தந்தோம்
வந்த சபையினர்க்கும் வந்தனம் தந்தோம்.

1. சேறி

கமக்காரன் வயந்தன்

சித்தி விநாயக னைநினைந்து
 சீருடன் கம்புகள்[1] கைப்பிடித்து
பூதலம்[2] மீதிலே வாழுகின்ற
 புண்ணிய வான்கமக் காரர்கள் மேல்
ஓதி வயந்தன் உரைப்பதற்கு
 உன்னுதவி தரவேணும் அம்மா
பாரிலுள்ள கமக் காரர் செய்யும்
 பாவங்களில் கொஞ்சம் சொல்லுகின்றேன். 1

ஏழையைக் கண்டால் இரங்காரர்கள்
 எங்கேவந் தீரென் றுங் கேளார்கள்
வாயிலும் காச்சியே வாரார்கள்
 வந்தவர்க்கும் சோறு ஈயார்கள்
வீட்டில் விருந்துகள் வந்திருக்க
 வேறு வளவில் போயிருப்பர்
பிச்சைக்கு வந்த பிராமணரை
 பேந்து திரும்ப வாருமென்பர்
உப்புப் புளிமிள காய்முதலாய்
 உள்ளதான் மட்டிலும் வாங்கார்கள்
நாவி லுருசி தெரியாது
 நல்ல கறிசோறு திண்டறியார்
தாயினும் கேடாகப்பு சித்திடுவார்
 நாங்கள் பெருங்கமக் காரரென்பர். 2

பாயிலும் நித்திரை செய்யார்கள்
 பணியக்கி டந்துபு ரண்டிடுவார்கள்
அளக்கும் நாணி அகம் குறைப்பார்
 அரைமரக்கால் போட்டளப்பார்
வந்திடும் கைக்கடன் காறருக்கு
 வாரி பதரை இடுவார்கள்
அள்ளிப் பதரைக் கலப்பார்கள்
 ஆகப் பறக்கவும் தூத்தார்கள்
ஒட்டிக் கிரட்டிபொ லிசைவாங்கி
 உள்ள பொருளுடன் சேர்த்து வைப்பர்
எப்படித் தேடிப் புதைத்தாலும் அவர்க்கு
 எட்டிலொருபங்கும் கிட்டாது
காலம் மடிந்தவர் போனபின்பே
 அரைக்காசும் பிறகே தொடராது. 3

1, தானெடுத்து 2. தன்னிலே 3. இடுபவர்கள்

பறவை வயந்தன்

தரு "வருகுதையே பறவைகள்[1] வருகுதையே"

கோட்டானும் கொக்கும் குருவினம் தாராவும்
கூழைக்கிடாவுடன்[2] செங்கால் நாரையும்
வரட்டமில் லாதம[3] ணிப்புரு வும் பச்சை
மாடப்புருக்களும் கூடிச்சி றப்புடன் (வருகுதையே) 1

ஆலாவும் புள்ளும் அழகான செண்பகம்
ஆண்டம ரங்கொத்தி அண்டினம் வாண்டினம்[4]
பகலனும் கூகையும் மூள்ளும் தையிலனும்
பார்க்கப் பவிசுடன் காக்கைக் குலங்களும். (வருகுதையே) 2

காடை கவுதாரி காச்சிட்டுப் பீச்சிட்டு
கல்லுப் பொறுக்கியும் வல்லமை தானுடன்
எல்லாப் பறவையும் ஏகமொன் றுய்க்கூடி
ஏற்ற வளத்துடன் ஈச்சம் பழத்தின்ன. (வருகுதையே) 3

கூழுங் குரும்பட்டி நெற்பட்டி காக்கணும்
கொண்டைக் கிளாறுடன் ஒன்பது மொன்றுய்
செண்பன் னுலகில் இருந்து பறந்திடும்
தேனுறு பாயும் திருமக்கள் நாட்டில். (வருகுதையே) 4

---

1. வரரதைப்பாருமையே
2. நாரைக் குலங்களும்
3. சிறுய்க் குருவியும்
4. பெண்டினம்

கல்லடியான் காதல்

வெண்பா

காரணமாய் நின்றிலங்கும் கல்லடியான் தன் பேரில்
பூரணமாய் உன்பாதம் போற்றியே - தெண்டனிட்டு
சீரான செந்தமிழைச் செகதலத்தி லோதுதற்கு
காரணமாய் நின்றிலங்கும் கல்லடியான் காப்பாமே. 1

முல்லைத்தீ வென்னும் முதியகரை யோரமதில்
நல்லதமிழ் மாலையென்று நாவலர்கள் தாம் மகிழ்ந்து
சொல்லுதற்கு முன்னருள்வாய் தொந்தியாற் றைங்கரனே
காரானை மேனிக் கணபதியே கந்தருக்காய்
ஏரான செந்நெல்வய லேகப் பெருவெளியில்
சீராக வந்துறைந்தாய் செல்வமே கல்லடியே 2

கயல்கள் குதிபாயக் கங்கை நதியோர மதில்
மயில்க ளிசைபாட மானினங்க ளோலமிட
குயில்க ளிசை பாடக் கூட்டமுற்ற வேலையிலே
ஒயிலாக வீற்றிருந்தாய் உற்பனமே கல்லடியே, 3

அருவாகி நான்மறைக்கு மாகா சத்தோடுருவி
உருவாகி நின்றிலங்கு மோங்காரத் துட்பொருளே
அடியேன் துயரம் அகற்றி வைப்பாய் கல்லடியே. 4

ஏட்டிலே தானெழுதி எடுத்துரைக்கு மித்துயரை
பாட்டாக நானெழுதிப் பயனதனைச் சொல்லறியேன்
நாட்டிலே யெல்லோரும் நகைக்கும் படியாக என்னை
ஈட்டி மறியல்வைக்க ஞாயமோ கல்லடியே. 5

முன்னை வினைப்பயனோ முதியோர்கள் செய்பலனோ
என்னவினை வந்த தென்று யானுமறியேனே
சொன்ன மொழி கேளின் துஷ்டன் துரையவனும்
என்னை மறியல்வைக்க ஞாயமோ கல்லடியே. 6

கைச் சாட்சியென்று கருதியே நானிருக்க
பொய்ச்சாட்சி சொல்லவென்று புலையரெலாங்கூடிவந்து
இச்சாட்சி சொன்னவுடன் என்னை மறியல் வைத்தான்
மெய்ச் சாட்சி நீயலவோ மேலான கல்லடியே. 7

ஏராளனுறுமுக ஏந்தலையும் தான்பிடித்து
பாராளு மன்னர் வைத்த பாரமறியல் தன்னை
நேராக வந்தெனக்கு நீயருள்வாய் கல்லடியே. 8


சீர்வாழி செல்வம் சிறந் தோங்கு முன்னவனும்
ஏர்வாழி யித்துயரம் எடுத்துரைப்பேன் தான் வாழி
பார்வாழி கற்புடையோர் பல பேருந்தான் வாழி
கார்வாழி கல்லடியான் கற்பகமும் வாழியவே. 9

□□□

பிழை திருத்தம்

பக்கம்	பாடல்	வரி	பிழையான சொல்	சரியான சொல்
25	1	1	கருணே	கருணை
25	1	5	கதைகள்	கதைக
25	2	6	வரவேணும் முருகா	வரவேணுமையா
25	3	4	கவிஷக	கவச
26	5	8	மனதிலுன்ன	மனதிலெண்ண
26	5	8	போமோ	போமே
27	2	5	யுறத்து	யுறந்து
28	3	4	மெய்கதி	மெய்க்கதி
29	2	8	சீனப்புலி	சினப்புலி
29	3	6	குன்றுதைத்	குன்றுறைக்
30	1	1	திலவுபுளை	திலவுபுனை
30	2	3	மின்டின	மிண்டின
30	2	4	குதுமா	சூதுமா
31	6	3	மிகிந்து	மகிழ்ந்து
31	6	4	விட்டால்	விட்டாய்
33	11	8	மேகான்	மேகாண்
45	அம்மன் சிந்து	3	ளெனுந்த	ளெழுந்த
45	அம்மன் சிந்து	4	வந்தமிழ்	வந்ததமிழ்

இந்நூற் பதிப்பாசிரியராகிய திரு. செல்லையா மெற்றுஸ் மயில் பேராதனைப் பல்கலைக் கழகத்திலே வெளிவாரி மாணவனாகத் தோற்றிப் புவியியல்துறையிலே சிறப்புப் பட்டம் பெற்றவர். விவேகமும், துடிப்பும், பிறருக்கு எந்நேரமும் அயராது உதவி செய்யும் பண்பும் உடைய இளைஞர் அவர். புவியியற் பட்டதாரியாக அமைந்தபோதிலும், தமிழ் இலக்கியம், வரலாறு, சமூகவியல் போன்ற துறைகளிலே மிகுந்த ஈடுபாடு கொண்டவர். அதன் வெளிப்பாடே **வன்னி வள நாட்டுப் பாடல்** தொகுதியாகும். தான் வாழும் பகுதியிலே



செழித்து நிற்கும் கிராமியக் கலைகளிலே அவருக்கு மிகுந்த ஈடுபாடு உண்டு. அந்த ஈடுபாடு காரணமாக அவற்றைப் பேணிப் பாதுகாக்க வேண்டுமென்ற எண்ணம் எழுந்தது இயற்கையே. வன்னிப் பிரதேசத்தில் வழக்கிலுள்ள பள்ளு, சிந்து, ஒப்பாரி, கும்மி போன்ற நாட்டார் பாடல்களை இந்நூலிலே தொகுத்துத் தந்துள்ளார்.

கல்வித் திணைக்களத்திலே பணி புரியும் திரு. மெற்றுஸ் மயில் தொழிற்சங்க நடவடிக்கைகளிலும் பணிகளிலும் தீவிரமாக ஈடுபடுபவர். தற்பொழுது யாழ். பல்தொழில் நுட்ப நிறுவனத்திற் பகுதிநேர விரிவுரையாளராகவும் கடமையாற்றுகிறார்.

அவருடைய பதிப்பு நேர்மையினையும் நாட்டார் பாடலிலுள்ள ஈடுபாட்டினையும் இத் தொகுதியினைப் படிப்பவர் நன்கு விளங்கிக்கொள்வர். அவர் இம் முயற்சியில் மேலும் தொடர்ந்து ஈடுபடவுள்ளார்.

கலாநிதி அ. சண்முகதாஸ்
சிரேஷ்ட விரிவுரையாளர்
தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

அட்டை, சுன்னுகம் திருமகள் அழுத்தகத்தில் அச்சிடப்பட்டது.